72

# உயர்ந்தோர் உலகு

---

இவர்களின் இலட்சியங்கள், போதனைகள், வாழ்க்கை அனுபவங்கள் இவற்றை இனிய எளிய நடைமுறையில் விளக்கும் வியாசங்கள்:—

மஹாத்மா காந்தி, ஸ்ரீ ரமண மகரிஷி, ஸ்ரீ அரவிந்த மகான், சுவாமி விவேகாநந்தர், யேசுகிறிஸ்துபெருமான், முனிவர் லா-வொத்ஸு, புத்தர் பெருமான், ஸ்ரீ ஆதி சங்கராச் சாரியார், ஸூபி மன்சூர், டாக்டர் ஆனந்த குமார சுவாமி, ஸ்ரீ சுப்ரமணிய பாரதி, யோகி சுத்தா னந்த பாரதி, நேதாஜி சுபாஷ் போஸ், பண்டித ஜவாஹர்லால் நேரு, சுவாமி விக்ஞானனந்தர், சுவாமி அபே தாநந்தர், இந்திய தரும ராஜ்யம்.

—சுவாமி சத்தியாநந்தர்

36 - ட/18

98

# உயர்ந்தோர் உலகு

ஆக்கியோர்:
சுவாமி சத்தியானந்தர், Ph. D.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை

சுத்த சமாஜம்,
பெட்டாலிங்,
கோலாலம்பூர்.
1953

அல்வாய் தி.கி. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 1840
நன்கொடை எண்: 1840

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அல்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியற்புலம்

# முன்னுரை

உயரிய மாந்தர்கள் இலட்சியவாதிகள், அவர்கள் சில இலட்சியங்களைக் கடைப்பிடித்து அவற்றைத் தம் வாழ்க்கையிற் சாத்தியப்படுத்த அல்லும் பகலும் உழைப் பார்கள். அவர்களது உயிரே அவர்கள் கொண்ட இலட்சியமாகி விடுகிறது. அதனால் ஓர் அபார சக்தி பிறக்கிறது; இலட்சியக் கனவு இலட்சிய நனவாகி அவர் கள் கருத்துக்கள் மக்களிடையே பரவி மக்களை உய்விக் கின்றன. இதுதான் உலக சரித்திரத்தின் சாரம். "உலகம் உயர்ந்தோர் மாட்டே" என்ற அறிவு மொழி யின் உட்கருத்து இதுவே. உயரிய மாந்தராலேயே சமுகம் உருவாக்கப்படுகிறது. இவ்வுண்மை மக்கள் பண் பாட்டின் எல்லாத் துறைகளுக்கும் பொருந்தும்.

"உயர்ந்தோர் உலகு" என்னும் பெயரிய இக்கட் டுரைத் தொகுதி யாமறிந்த உயர்ந்தோர் சிலரின் இலட் சியங்களை விளக்குகின்றது. அவர்களெல்லோரும் உல கப் பிரசித்தி பெற்றவர்கள்; அநேகர் இந்நாட்களிலே வாழ்ந்தவர்கள்; இரண்டொருவர் இப்போதும் வாழ் கிறவர்கள்; சிலர் பழையவர்கள், என்றாலும் இன்றும் புதியவர்கள்; எல்லாரும் நம் பலரின் வாழ்வுக்கும் செயல்களுக்கும் அருமருந்தன்னவர்கள். அவ்வுயர்ந்தோர் களுக்கு அஞ்சலியே இந்நூல்.

பெட்டாலிங்,<br>
கோலாலம்பூர்,<br>
12-3-1953.

சத்தியாநந்தா

# பொருளடக்கம்.


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | காந்தியடிகள் கொடை | |
| 2. | காந்திஜியின் தத்துவங்கள் | 12 |
| 3. | மஹாத்மா காந்தியின் மார்க்கம். | 17 |
| 4. | ஸ்ரீ ரமண மகரிஷி | 21 |
| 5. | ஸ்ரீ அரவிந்த மகரிஷி | 27 |
| 6. | சுவாமி விவேகாநந்தர் | 33 |
| 7. | விவேகாநந்தரும், நேதாஜியும் | 37 |
| 8. | யேசு கிறிஸ்து | 43 |
| 9. | ஸ்ரீ சங்கராச்சாரியார் | 49 |
| 10. | தத்துவஞானி ஆநந்தக் குமாரசுவாமி | 56 |
| 11. | ஸூபி மன்சூர் ஞானி | 61 |
| 12. | மனிதகுல மாணிக்கம்—பண்டித நேருஜி | 63 |
| 13. | இந்திய தரும ராஜ்யம் | 68 |
| 14. | சக்திக் கவி பாரதியார் | 73 |
| 15. | முனிவர் சுத்தானந்தர் இயல்பு | 77 |
| 16. | சீன முனிவர் லா-வொத்ஸூ | 80 |
| 17. | ஆசிய ஜோதி புத்தர் பெருமான் | 86 |
| 18. | சுவாமி விக்ஞானனந்தர் | 90 |
| 19. | சுவாமி அபேதாநந்தர். | 97 |


HEART
OF
INDIA

மதுரை காமராசர் பல்கலைக்...
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்

# உயர்ந்தோர் உலகு

## 1. காந்தியடிகள் கொடை

(78-வது காந்தி ஜயந்தி மலர்)

"பஹூநாம் ஜன்மநாமந்தே ஜ்ஞானவான் மாம் ப்ரபத்யதே
வாஸுதேவ: ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:"

என்பது பகவத்கீதை வாக்கியம். (பல பிறவிகளின் முடிவில் ஞானி பரம்பொருளே யாவும் என்று என்னை வந்தடைகிறான், அந்த மஹாத்மா காணாதற் கரியவன்.)

ஆம், இத்தகைய மஹாத்மாவைக் காண்பது அரிது தான். "புவிக்குள்ளே முதன்மையுற்றாய்" என்று காந்தியடிகளை ஏற்றினார் நமது வரகவி பாரதியாரும்.

இற்றைப் பாரத பூமியிலே முப்பத்தெட்டுக் கோடி மக்கள் வசிக்கின்றனர், உலகெங்கும் வசிக்கும் ஜனங்களோ நூற்றெண்பது கோடி. அத்துணை மாந்தரிலும் உத்தம புருஷன் யாரென்று வினவினால் மாநிலம் மஹாத்மா காந்தி என்றே பதிலுறும்.

புத்தர், இயேசு, முகம்மது, லா-வொத்ஸு முதலிய மஹாத்மாக்கள் அவ்வக் காலங்களில் "புது ஒழுங்கினை," "நவீன சகாப்தத்தை" மக்கள் உய்யும் பொருட்டு நிறுவியவர்கள். அவர்கள் ஒரு தனிச் சமுதாயத்துக்கு, தனி நாட்டுக்கு மாத்திரமின்றி உலகிற்கே உரியவர்கள். அவ்வாறே இற்றைக் காந்தியடிகளும் ஹிந்துஸ்தானத்திற்கு மட்டுமின்றி உலக முழுமைக்குமே உரி

யவராகத் துலங்குகின்றூர். இம் மகானுல் பாரத வர்ஷம் மட்டுமல்ல, உலகமே விமோசனம் அடையும்.

உலகம் சுபிக்ஷமடைய வேண்டுமானுல் அதற்கு அடிப் படையான மார்க்கம் ஒன்றுதானுள்ளது. புஜபலமன்று; லோகாயத அபிவிருத்தி யன்று; வெளி மெழுகுதலன்று. **மக்களது மனப்பான்மை மாறல் வேண்டும்;** மாந்தர் வாழ்க் கைக்குச் **சத்தியமும், அஹிம்ஸையும்** அணிகலன்களாகத் திகழல் வேண்டும். இதேதான் அந்த மார்க்கம்.

மக்கள் தன்மை **அன்பின்** வழியாகச் செல்ல சமுகமும், தேசமும், உலகமும் முறையே அமரத் தன்மை அடையு மென்பது வெள்ளிடைமலே.

மகாத்மா காந்தியடிகளின் வாழ்க்கை வரலாற்றைக் கூர்ந்து நோக்கின் அது,

'உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன்;
'அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும்'

என்ற தமிழ் மறை மொழிகளுக்கு இலக்கியமாகச் சொலிப்பதைக் காணலாம்.

மனிதனது வாழ்க்கைத்துறை எதுவாக இருப்பினும், அஃது "அஹிம்சையே பரமதர்மம், ஸத்தியமே கவசம்" என்ற இலட்சணங்களை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டால், வெற்றி பெறுதலியலும் என்பதினை யும் காந்தியடிகள் தம் சொந்த சீவியத்திலைலேயே மாந்தர் க்கு எடுத்துக்காட்டி யிருக்கிறூர்.

இன்னும், தேசிய—அரசியற் போராட்டத்தில் அந் தண்மைக் காந்தியார் பாரமார்த்தீக இலட்சணங்களைப் (அவை ஸத்தியம், அஹிம்ஸை) புகுத்தி அவற்றினை எக்காரணத்லைத முன்னிட்டும், எச்சந்தர்ப்பத்திலும் நெகிழ விடாமலிருந்து வருவது உலக அரசியல் வரலாற்றி லேயே தனிச் சிறப்புடையது. மேலும் அவ்விலட்சணங் களை அடிப்படையாகக் கொண்ட தம் போராட்டத்தில் இன்று மகத்தான வெற்றி பெற்றிருப்பதும் எத்தேச சரித்திரத்திலுமே காணக் கிடையாத காரியமாகும். **காந்தியடிகள் உலகிற் களித்த கொடை இதுவே.**

எனவே, நிலையான உலக சமாதானத்திற்கும், மக்கள் இன்ப வாழ்க்கைக்கும் காந்தியடிகளின் வழியே வழி. இன்றைய அரசியல் வாதிகளும், இனிவரும் அரசியல்வாதி களும் காந்தியடிகளது மார்க்கத்தினைப் பின்பற்றின் உலகிற்கு அல்லலில்லை; நாடுகளுக்கிடையே பிணக்கில்லை. யாவரும் சமாதானமாக வாழலாம்.

பாரத நாட்டை எல்லா விதத்திலும் உய்விக்க உத் தமக் கர்மயோகி காந்தி நம் மக்களுக்கு ஈந்துள்ள போதனை களும், திட்டங்களும், முறைகளும் பற்பல. அவையனைத் தும் ஆக்கத்தன்மை யுடையன.

இன்றைய ஹிந்துஸ்தானம் அதன் பாரம்பரீய இலட் சியங்களை அனுசரித்து காந்தீயத்தினல் உருவாக்கப்பட் டுள்ளது என்பதை மாத்திரம் நினைவு கூர்ந்து கொண்டு, சமுதாயமுய்ய, நாடுய்ய, உலகுய்ய, மஹாத்மாவின் போதனைகளையும், அவர் காட்டிய வழிகளையும் பின்பற்று வோமாக, **ஜய மஹாத்மா!**

## 2. காந்திஜீயின் தத்துவங்கள்

*(31-1-49 ரேடியோப் பிரசங்கம்)*

“செயற்கரிய செய்வார் பெரியர்” என்று வள்ளுவனுர் இயம்பிப் போந்தது மகாத்மா காந்தியடிகளுக்கு முற்றும் பொருந்தும். தனி வாழ்வு, சமூக வாழ்வு, தேசிய வாழ்வு, உலக வாழ்வு எனப்படும் பல துறைகளிலும் அவர் ஒரு புது சகாப்தத்தை உண்டுபண்ணியிருக்கிருர். தனி மனிதர் ஒவ்வொருவரும் எவ்விதம் வாழ்கிருர்களோ அவ்விதமேதான் சமூகங்களும், தேசங்களும், உலகமும் இருக்கும். ஏனென்ருல், தனி மனிதர்கள் ஒன்று சேர்ந்ததே சமூகம்; சமூகங்கள் ஒன்று சேர்ந்ததே தேசம்; தேசங்கள் ஒன்று சேர்ந்ததே உலகம்.

தனி வாழ்க்கையிலே **அன்பு அல்லது அஹிம்சை, உண்மை அல்லது சத்தியம்** எனும் இரு தத்துவங்களையும் அவர் கையாண்டார். முதலாவது தத்துவத்தை இப்போது கவனிப்போம். **“அன்பின் வழியது உயிர்நிலை”** என்று குறள் கூறுகிறது. மனிதர், பிராணிகள் தாவர வர்க்கம் அனைத்தும் உயிர்வாழ்வது அன்பினுலேயே. அன்பினுல் தூண்டப்பட்டே மனிதன் மனிதனை நேசிக்கிருன். ஆண் பெண்ணை நேசிக்கிறது; பெண் ஆணை நேசிக்கிறது. பெற்ருேர்கள் தம் குழந்தைகளை விரும்புகிருர்கள். குழந்தைகள் தம் பெற்ருேர்களை நேசிக்கிருர்கள். அன்பினுலேயே மனிதர் தம் இன சனங்களுக்கும், சமூகத்தாருக்கும் உழைக்கிருர்கள்; தியாகிகள் தேசத்துக்காக உழைக்கிருர்கள். மிருகங்கள், தாவர வர்க்கங்கள், எல்லா ஜீவ ஜந்துக்களிடையேயும் இதே அன்பு பலவிதமாக வேலை

செய்வதை நாம் பார்க்கலாம். தன்னைத் தான் நேசிப்பது கூட ஒருவித அன்பே; அது மிகவும் சுருங்கிய அன்பு. உலகிலுள்ள அனைத்தின் உள்ளும் வேலை செய்து கொண்டிருக்கும் இவ்வன்பு சுருங்கி இருக்கும் நிலையை நாம் கீழ்ப் பிறவி என்கிறோம். இவ்வன்பு விரிந்து விசாலம் அடைய அடைய மனிதன் மேல் நோக்கிச் செல்கிறான். தன் உயிர்போல் மன்னுயிரையும் நேசிக்கிறான். பிறர்க்காகத் தன்னையும், தன் நலன்களையும் விட்டுக் கொடுக்கிறான். மிகவும் உயரிய மனிதன் க்ஷணப் பொழுதும் அன்பினாலேயே உயிர் வாழ்கிறான். தியாகத்திலும் பிறருக்காகத் தான் அடையுந் துன்பங்களிலும், பிறரால் தனக்கு விளைவிக்கப்படும் துன்பங்களிலும், அவை எப்பேர்ப்பட்ட துன்பங்களாக இருந்தாலும் சரி, அவன் இன்பத்தையே காணுகிறான். காரணம், அவனது குறுகிய அன்புணர்ச்சி அகன்று அகில உணர்ச்சியாகி விடுவதே. **அன்பு சிவமாகிறது.** இவ்வுணர்ச்சி, அஃதாவது "அஹிம்ஸா பரமோதர்ம" என்ற உணர்ச்சி வெளியே இருந்து வருவது ஒன்றன்று. அஃது உள்ளிருந்து படிப்படியாக வளர்ச்சி அடைந்து பூரணப்படும் ஒன்றாகும். அஹிம்ஸை அல்லது அன்பு இயல்பாக ஒருவருக்கு ஏற்படவேண்டியது. அது பயத்தினாலோ, பலஹீனத்தினாலோ மன உறுதிக் குறைவினாலோ வரும் ஒன்றன்று. மனதுள் ஒருவரைப்பற்றி விரோதித்துக்கொண்டு புறத்தில் அவ்விரோதத்தை நாம் காண்பிக்காமல் இருக்கலாம். அஃது அஹிம்ஸை அல்லது அன்பு ஆகாது. எதிரிக்குப் பயந்து கொண்டு அன்பின் பாசாங்கு செய்வது அஹிம்ஸையாகாது; அது பேடித்தனம். பாசாங்கைவிட ஹிம்ஸை மேலானது; ஏனென்றால் அவ்வித ஹிம்ஸையில் ஓரளவு உண்மை இருக்கிறது. எனவே அஹிம்ஸையை மன உறுதி

உடையவர்கள், தைரியசாலிகள், எவ்வித இன்னல்களை யும் சகித்துக் கொள்ளத் தயாரா யிருக்கிறவர்கள் ஆகி யோரரே அனுஷ்டிக்க இயலும் என்பது வெள்ளிடை மலை.

காந்திஜீயின் அடுத்த தத்துவமாகிய **சத்யம்** என் பதை இப்பொழுது கவனிப்போம். உலகில் நாம் காணும் பொருளெல்லாம், நமது மனமும் உடலும் உட்பட, க்ஷணம் தோறும் மாறிக்கொண்டே இருக்கின்றன; அவை அழியுந்தன்மைய. இவ்வழிவுக் கிடையே ஓர் அழி யாப் பொருள் இருக்கின்றது. ஆதலால் தான் நமக்கு அறிவும், பிரக்ஞையும் உண்டு. இவ்வழியாப் பொருளே பிரபஞ்சத்திற்கு அடிப்படையில் இருக்கின்றது. நமக்கும் அடிப்படையில் அதே இருக்கின்றது. அது மாறாத, அழியாத பொருளாகையால் அது உண்மைப் பொருள் அல்லது சத்தியம் என்று சொல்லப்படுகின்றது.

''சத்திய ஸ்வரூப ஸர்வேஸ்வர'' என காந்தி சூத்திரம் கூறும். இச்சத்தியப் பொருளை மனிதன் உணர்ந்தால் எல்லாவிதமான துன்பங்களையும் கடந்து செல்லுகிறான். தனக்குள்ளே சாந்தத்தை அடைகிறான். தனக்குள்ளே மாறா இன்பத்தைப் பெறுகிறான். **''பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் மருளானும் மாணாப் பிறப்பு''** என்று குறள் கூறுவது இக்கருத்தைக் கொண்டே. நம்முடைய மன வாக்குக் காய செயல்களெல்லாம் சத்தியத்தைப் பற்றி நிற்றல் வேண்டும். ''சர்வதா சர்வபாவேன சத்திய மேவ பஜனீயம்'' என்பது காந்தி சூத்திரம். அதாவது, 'எல்லா வேளையிலும் உன் முழு உணர்ச்சியுடன் சத்தி யத்தை வழிபடு என்பதே'. இச்சத்திய உணர்ச்சியைத்

தனக்குள்ளே பெற்றவன் அச் சத்தியப் பொருளை எங்கும் காண்கிறான். சத்தியவழி நிற்கின்றவன் எல்லா வழிகளிலும் இலகுவில் சித்தி பெறுவான். சத்தியத்தினின்று பேரறிவு பிறக்கின்றது. எங்கே பேரறிவு இருக்கின்றதோ அங்கு இன்பம் அல்லது ஆனந்தம் பிறக்கும். ஆகையினால்தான் நாம் கடவுளை "சத் சித் ஆனந்தம்" என்று வருணிக்கிறோம்.

மேலே நாம் கண்ட தத்துவங்களே மகாத்மா காந்தியின் வாழ்க்கை இலட்சியங்களாகும். வாழ்க்கையின் பல துறைகளில் அவர் ஈடுபட்டிருந்தார் என்றாலும் இவ விலட்சியங்களை முன் வைத்துக்கொண்டே அவர் தன் காரியங்களைச் செய்தார். சமூகத் துறையிலும் தேசிய அரசியல் துறைகளிலும் இவ் விலட்சியங்களையே நுழைத்து வெற்றி பெற்றார். இஃது உலக சரித்திரத்தில் காணக் கிடையாத ஒரு பெரிய நிகழ்ச்சி. இன்று உலக முழுமையும் காந்தியடிகளைப் போற்றிப் புகழ்கின்றது. **அவர் காட்டிய மார்க்கம் ஒன்றே நிரந்தர சமாதானத்துக்கும், ஒற்றுமைக்கும், சுபிட்சத்திற்கும் உகந்த வழி என மாநிலத்தோர் உணருகின்றனர்.** மகாத்மா காந்திக்கு முன்னர் ஏசுநாதர், புத்தபிரான் ஆகியோர் அவர் கையாண்ட இலட்சியங்களைத் தாங்களும் அனுஷ்டித்து தம் சமூகத்தவர்க்கும் போதித்தார்கள் என்றாலும் சமூகப் பொருளாதார அரசியல் துறைகளில் அவர்கள் அவ் விலட்சியங்களைப் பிரயோகிக்கவில்லை. காந்தியடிகள் தான் இவ் ஆத்மீக இலட்சியங்களை உலகியலிலும் பெருமிதமாக உபயோகித்து ஓர் அபார சக்தியைச் சிருஷ்டித்துள்ளார். அவரது இச் சக்தியை காந்தி சூத்திரம் "நவயுக தர்மம்" என்று சொல்லும். **உடலை விட மனத்திற்கு வலிமை அதிகம்**

என்று உவ நூல் அறிஞர் கூறுவர். இவை இரண்டையும் விட உயிருக்கு, ஆத்மாவுக்கு, வலிமை அதிகம் என ஞான நூல் அறிஞர்கள் கூறுவர். ஏசுநாதர் எவ்வளவோ இம்சைகளுக்கு ஆளாக்கப்பட்டுச் சிலுவையில் அறையப் பட்டு இறந்தார். ஆனல் காலஞ் செல்லச் செல்ல அவரைக் கோடானுகோடிச் சனங்கள் பின்பற்றினர்கள்; பின் பற்றுகிருர்கள். புத்தர் வித்தியாச உணவினுலோ, நஞ்சினுலோ கொல்லப்பட்டார். ஸ்ரீ கிருஷ்ணர் அம்பினுல் எய்யப்பட்டு இறந்தார். சங்கரர் விரோதிகள் உணவில் கலந்து கொடுத்த நஞ்சினுல் இறந்தார். ஆயினும் அவர்களது சித்தாந்தத்தையும், போதனைகளையும் எத்தனையோ கோடிச் சனங்கள் இன்று பின் பற்றுகிருர்கள். ஸ்ரீ கிருஷ்ணர் அருளிய **பகவத் கீதையையே** காந்தியடிகள் தன் வழிகாட்டியாகக் கொண்டிருந்தார் என்பது ஈண்டு நினைவு கூரத் தக்கது. **எனவே மஹான்களது சக்தி அவர்கள் இறந்த பிறகு அதிக வலிமையைப் பெற்று மன்பதை உய்ய வேலை செய்யும் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.** மகாத்மா காந்தி இறந்த முதலாவது சிரார்த்த நாளை நேற்றைய தினம் அனுஷ்டித்தோம். நாள் செல்லச் செல்ல அவரது சக்தி உலக மக்களை உய்விக்கும் என்பதில் சற்றும் ஐயமில்லை.

காந்தியடிகள் நமக்குத் தந்துள்ள ஊக்க வாக்கியங்களில் ஒன்றை ஈண்டுக் கூறி எனது பேச்சை முடிக்கின்றேன். அஃதாவது:—

"எனது போதனைகளும், கற்பனைகளும் வெறும் மனோவிகாரத்தால் உதித்தவை யன்று; அவை அசாத்தியமானவையன்று. நான் பழைய கற்பனைகளையே போதிக்கிறேன். அவற்றை நானும் சாத்தியமாக்க முயலுகிறேன். நான் சாத்தியப் படுத்துவதை எல்லோரும் சாத்தியப் படுத்தலாம் என்பது எனது துணிபு. ஏனெனில் நானும் மிகவும் கீழான மனிதர்களில் ஒருவனே."

## 3. மஹாத்மா காந்தியின் மார்க்கம்

*(தமிழ் நேசன் 30-1-1949)*

*[பேராசிரியர்கள் J. H. மூர்ஹெட், டாக்டர் S. ராதாகிருஷ்ணன் ஆகியோரால் வெளியிடப்பட்ட "சம காலத்து இந்திய தத்துவ ஞானம்" (Contemporary Indian Philosophy) எனும் நூலினின்று மொழி பெயர்க்கப்பட்டது.]*

*சர் ச. ராதாகிருஷ்ணன் பின் வரும் மூன்று வினுக் களுக்கும் என்னிடமிருந்து விடை கேட்டிருக்கின்றுர்:—*

*1. உங்கள் **சமயம்** என்ன?*
*2. நீங்கள் அதை எப்படி அடைகிறீர்கள்?*
*3. சமூக வாழ்க்கையில் அதற்குள்ள சம்பந்தம் என்ன?*

எனது சமயம் **ஹிந்து சமயம்**. அது **மன்பதையின் சமயமென** (Religion of humanity) நான் கொள்கிறேன். எனக்குத் தெரிந்த சமயங்கள் எல்லாவற்றினதும் உயரிய விஷயங்களை அது தனக்குள்ளே அடக்கியிருக்கிறது என நான் கருதுகிறேன்.

இரண்டாவது கேள்வி வேண்டுமென்றே இறந்த காலத்திற்குப் பதிலாக நிகழ் காலத்திலே கேட்கப்பட்டிருக்கிறது என நான் கொள்கிறேன். எனது சமயத்தை நான் **சத்தியம், அஹிம்ஸை** இவை மூலமாக அடைகிறேன்—அஃதாவது, பரந்த கருத்தில் இதை "அன்பு" எனலாம். எனது சமயத்தை நான் பல முறையும் **சத்திய**

**சமயம்** என்று சொல்லிக் காட்டுவதுண்டு. அண்மையிலே எனது சமயத்திற்குத் தெளிவான இலக்கணஞ் சொல்லு-வான் வேண்டி **கடவுளே சத்தியம்** என்று சொல்வதற்குப் பதிலாக **சத்தியமே கடவுள்** என்று சொல்லிக்கொண்டே வருகிறேன். ஒரு காலத்திலே **கடவுளுக்குரிய ஆயிர நாமங்களையும்** நான் மனப்பாடமாகத் தெரிந்திருந்தேன். இந்து சமயத்தின் இந் நாமாவளி செய்யுள் வடிவமாக உள்ளது: இதனைப் பல்லாயிர மக்கள் காலைதோறும் அநேகமாக ஓதி வருகிறார்கள் என்றாலும் இந் நாட்களில் **சத்தியத்தைப் போன்று வேறு எதனாலும் எனது கடவுளை** முழுமையாக வர்ணிக்க முடியவில்லை. **கடவுள் மறுப்பை** நாம் அறிந்திருக்கிறோம்; **சத்திய மறுப்பை** நாம் அறிந்ததே யில்லை. மன்பதையுள் மிகவும் அறிவிலிகள் கூட கொஞ்சம் உண்மை (சத்தியம்) உடையவர்களாக இருக்கிறார்கள். நாம் எல்லோரும் **சத்தியத்தின் பொறிகள்**. இப் பொறிகளின் கூட்டுத் தொகை வர்ணனைக்கு அப்பாற் பட்டது—அஃதாவது, **என்றும் தெரியாத சத்தியம்; அது கடவுள்: தினந்தோறும் நான் அதை இடையறாப் பிரார்த்தனையால் அணுகி அடைகிறேன்.**

ஒருவருடைய தினசரிச் சமூகத் தொடர்புகளே சமூக வாழ்க்கையில் இச் சமயத்திற்குள்ள சம்பந்தத்தை விளக்கும். அப்பேர்ப்பட்ட சமயத்துக்கு உண்மையாக இருப்பின் எல்லா உயிர்களுக்கும் ஓயாததும் நிலையானதுமான பணியில் ஒருவர் தன்னைப் பலி யிடல் வேண்டும். அகண்ட ஆத்ம சாகரத்துள் தன்னைத் தான் பூரணமாக அமிழ்த்தாமலும் அதனுடன் ஒன்று படுத்திக்கொள்ளாமலும் **சத்தியத்தை உணர முடியாது**. எனவே சமூகப் பணியிலிருந்து எனக்குத் தப்பித்துக் கொள்ள இயலாது; அதற்குப் புறம்பாகவும் அல்லது அதற்கு மேலாகவும்

உலகில் எவ்வித பாக்கியமும் இல்லை. இங்கே சமூக சேவை என்றால் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையையும் அஃது உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

இத் திட்டத்தில் உயர்வு எதுவுமில்லை; தாழ்வு எதுவுமில்லை. ஏனெனில் நாம் பலவாகத் தோன்றப்பட்டாலும் எல்லோரும் ஒன்றே.

மோ. க. காந்தி.



ஸ்ரீ ரமண மஹரிஷி

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 1840
நன்கொடை எண்: 1840

# 4. ஸ்ரீ ரமண மகரிஷி

(20-12-48 ரேடியோப் பிரசங்கம்)

ஹிந்து நாட்டின் உயிர்நாடி தொன்று தொட்டு அத்யாத்மீகம் ஆகும். நமது நாட்டிலே ஞானிகளும் முனிவரும் அதிமனிதரும் என்றும் தோன்றிக்கொண்டே யிருக்கிறார்கள். அரசியல் துறையிற்கூட நமது நாட்டின் போக்கு பிறநாடுகளைப் போலில்லாமல் ஆத்மீகத்தையே தழுவி நிற்கின்றது என்பது யாவருக்கும் தெரிந்ததே. உலகமெங்கணும் இன்றைக்குக்கடும்புலிவாழுங் கானகம்போன்றிருக்கிறது. இச் சூழ் நிலையிலே அஹிம்ஸை, அன்பு, சகிப்புத்தன்மை என்ற ஒரு மெல்லிய ஒலி கேட்கின்றது. அவ்வொலி நம் புண்ணிய நாட்டில் இருந்துதான் உண்டாகின்றது.

மனிதன் இயல்பாகவே அமைதியையும் இன்பத்தையும் விரும்புகிறான். ஆயினும் அவற்றைப் பெறுவது எங்ஙனமென்பது அவனுக்குத் தெரியவில்லை. அவற்றின் வழி நிற்பதற்கு அவன் மனம் இடங் கொடுக்கவில்லை. இதற்கு மூல காரணம் அவனது பேராசையும் பேரவாவுமே. சிறு குழப்பங்களுக்கும் பெருங் கொந்தளிப்புகளுக்கும் மூல காரணம் மனிதனின் ஆணவ அகங்காரமே. ஆணவத்தையும் அகங்காரத்தையும் அடக்கினால் ஆசை அவாக்கள் மடியும். மனிதன் தனக்குள்ளே அமைதியையும் இன்பத்தையும் பெறுவான்.

தனி மனிதர் கூடியதே சமுதாயம். சமுதாயங்கள் கூடியதே நாடு. நாடுகள் கூடியதே உலகம். எனவே மனிதன் மாறினால் சமுதாயம் மாறும்! சமுதாயம் மாற

நாடு மாறும்; நாடு மாற உலகம் மாறும். அவ்வக்கால தேச சூழ்நிலைகளுக்குத் தகுந்தாற் போல உலக மகான்க ளெல்லாரும் இவ் வழி யொன்றையே நிலைநாட்டி மனித சமுதாயத்தைத் தெய்வ சமுதாயமாக்க முயன்றனர். இக் காலத்திலே **மகாத்மா காந்தி** இதையே வற்புறுத்திப் போந்தார். ஸ்ரீ அரவிந்தரும் ஸ்ரீ ரமணரும் அதனையே நமக்கு இன்றும் புகட்டிக் கொண்டிருக்கின்றனர்.

**ஸ்ரீ ரமண மஹரிஷி** தென் இந்தியாவிலே திருவண்ணு மலையிலே குரு மூர்த்தமாக எழுந்தருளியிருக்கின்ருர். அவ ரது 70 ஆவது ஜயந்தியை அவருடைய அடியார்கள் 18-12-48 அன்று கொண்டாடினார்கள். மஹரிஷி இன்ப மயமாக, அன்பு மயமாக, அமைதியாக இருக்கிருர். அவ ரைத் தரிசிப்போர் இதை உணர்வர். அது மாத்திரமின்றி அவரையே நம்பிக்கையுடன் சரணடைவோர் அவ் வின்ப அன்பு அமைதியைப் பெறுகிருர்கள். இது எனது அனு பவம். வெறும் கூற்றன்று. பல நாடுகளைச் சேர்ந்தவர்கள், பல சமூக சமயங்களைச் சேர்ந்தவர்கள், அனைவருக்கும் ஸ்ரீ ரமண மஹரிஷி ஒரு மெய்ஞ்ஞான காந்தமாக விளங் குகின்ருர். அவரது முன்னிலையிலிருந்தால் எப்பேர்ப் பட்டவர்க்கும் சித்தம் ஒடுங்கி உள்ளப் பூரிப்புண்டாகிறது. கவலையால் பீடிக்கப்பட்டோர் தம் அகத்திலே சுகத்தைப் பெறுகிருர்கள். மஹரிஷியை நேராகப் பார்க்காதவர்-களுக்குக்கூட அவர்கள் பக்குவ நிலை யடைந்திருப்பின் சில வேளைகளிலே மஹரிஷி சூக்ஷ்மமாகத் தோன்றி அவர் களை ஆட்கொள்கின்ருர்.

**மஹரிஷி பூரணத்வம் பெற்றவர். வேண்டுதல் வேண் டாமை இல்லாதவர்; சித்தமல மறுந்து சிவமாகியவர்; ஜீவன் முக்தர். இவ் வத்யாத்ம நிலையைப் பௌத்தர்கள் நிர்வாண**

மென்றும், கிறிஸ்தவர்கள் பரம பிதாவைப் போல் பூரண மடைதல் என்றும், இஸ்லாமிய ஸூபிகள் 'அனல்ஹக்' என்றும் கூறுவார்கள். மனித ஜன்மத்தின் நோக்கம் இதுவேயாகும்.

ஸ்ரீ ரமண மஹரிஷியின் பிள்ளைத் திருநாமம் வேங்கடராமன். இவர் தென்னாட்டிலே மதுரைக்கு அருகாமையிலுள்ள திருச்சுழி என்ற கிராமத்திலே புனர்பூச நக்ஷத்திரத்திலே ஆங்கிலம் 1879-ம் ஆண்டு டிசம்பர் மாதத்திலே பிறந்தவர். அவரது குடும்பம் பல தலைமுறைகளாகத் தான தவங்களைக் கடைப்பிடித்து வந்துளது. தகப்பனார் பெயர் சுந்தரமய்யர். தாயார் பெயர் அழகம்மையார். இளம் பருவத்திலிருந்தே வேங்கடராமன் வசீகரத் தோற்றமுடையவர், உடலுறுதியுடன் வளர்ந்தார். பள்ளி நாட்களில் தன் சகாக்கள் அனைவருக்கும் தலைவராகத் திகழ்ந்தார். இன்றைக்கு ஆன்ம உலகில் தலைமை தாங்குகிறார். வேங்கடராமன் பள்ளிக்கூடச் சோதனைகளில் தேர்ச்சி பெற்று வந்தாரென்றாலும், கிறிஸ்து, இராமகிருஷ்ணர் முதலியோர் போன்று அவருக்கு வெறும் ஏட்டுப் படிப்பில் அவ்வளவு அக்கறை இருக்கவில்லை.

'மனிதன் எதை விதைப்பானோ அதை அறுப்பான்.' எனவே முன்னைய தவப் பயன் கூட்டிவைக்கக் காளைப் பருவத்திலே ஒரு நாள் வேங்கடராமன் பெரியபுராணத்தை வாசித்தார். நாயனார்கள் கொண்டொழுகிய பராபக்தி அவரது இளம் உள்ளத்தைக் கவர்ந்தது. இளைஞன் உள்நோக்குடையவனானான். பள்ளி வாழ்வுத்தெம்பு உள் அமைதிக்கு இடங்கொடுத்தது. வேங்கடராமனின் பேரின்ப வாழ்விற்கு இதுவே முதற்படி. இது நிகழ்ந்து

சில மாதங்கள் கழித்து ஒரு நாள் பள்ளிக்கூடம் போய்க் கொண்டிருக்கையில் முதிர்ந்த உறவினர் ஒருவர் அவ் வழியே வந்தார். வேங்கடராமன் அன்னாரை நோக்கி "எங் கிருந்து வருகிறீர்கள்?" என்றார். '**திருவண்ணாமலை**' என்ற பதில் வந்தது. திருவண்ணாமலை என்ற சொல் செவியில் விழுந்ததும் வேங்கடராமன் பரவசமடைந்தார். **இஃது இரண்டாவது தடவை அவர் அடைந்த ஆத்மானுபூதி**. திருவண்ணாமலை யென்றால் பொன்னிற மலை என அர்த் தம் பெறும். அதாவது பரம்பொருளின் ஒளி வடிவத்தைக் குறிக்கும் பதமாகும். அது தென்னாட்டு இந்துக்களுக்கு ஒரு முக்கிய புண்ணியஸ்தலம்.

**நமது இளம் முனிவரின் மூன்றாவதும் வீட்டுப் பேறுக்கு உரியதுமான ஆத்மானுபவம்** 1896–வது ஆண்டு மத்தியில் ஏற்பட்டது. அக்காலை அவருக்கு வயது 17. அவ்வனுபவம் வேங்கடராமனின் சொரூபத்தையே மாற்றி விட்டது.

ஒரு நாள் திடீரென்று **மரண அச்சம்** வேங்கட ராமன் மனத்துட் புகுந்தது. உடல் சாகப்போவதுபோலத் தோன்றிற்று. உடனே இவ்விசாரம் செய்தார். "சாவது எது? இப் பிண உடலன்றோ சாகிறது; இச் சடலத்துடன் யான் இறக்கிறேனா? நான் என்பது இவ்வுடலா? அல் லவே. நினைவா? அல்லவே. இவற்றை யெல்லாம் தாண்டி நான் நான் என்று தானாய்ப் பேசி ஒளிரும் தனிப் பொருளொன்று என்னுள் உள்ளதே. அஃது இவ்வுடலைச் சார்ந்து பிழைக்கவில்லையே. அதுவே ஆன்மா. இவ்வுடல் இருந்தாலும் இறந்தாலும் அது போக்குவர வற்று உள்ளபடி உள்ள இடத்திலேயே ஒளி வளர்ந்து விளங்குகிறதே. அதுவன்றோ யான்? அதை மீறிய

பொருளில்லையே. நான் யார்? நான் அது; ஆன்மா. நான் ஈனவற்றவன். நான் பூரண சிற்சுக நித்திய சத்தியன்; நான் பிரஹ்மம்". இவ் வாத்ம அனுபவம் வேங்கடராம னின் தேக போதத்தை அறவே விழுங்கி ஆத்ம போத மாய்த் தனிச் செங்கோல் புரியத் தொடங்கிற்று. இதி லிருந்து மௌனம் அதிகமாயிற்று. தன்னுடன் தனிமை யையே நாடினர் வேங்கடராமன். இவைகளை யெல்லாம் பார்க்கும் மக்களுக்கு வேங்கடராமனின் பாவனை விந்தையாயிருந்தது. சூழ்நிலைகளிலிருந்து வசை மொழிகள் எழுந்தன .பரிகாசமும் கேலியும் நிலவின. கடைசியாக 29–8–1896 அன்று வேங்கடராமன் வீட்டைவிட்டுப் புறப்பட்டு 1–9–1896 அன்று அருணசல ஸ்தலத்தை அடைந்தார். அங்கே மௌனத்தில் ஆழ்ந்து கடுந்தபசு புரிந் தார். உடல் எவ்வளவோ இன்னல்களுக்கு இரையாகி யும், நமது தவராஜன் சதா ஆத்ம நிஷ்டையில் ஈடுபட் டிருந்தார். ஸ்தித பிரக்ஞர் ஆனர். நிஸ்ஸங்கல்பம் அன்று முதல் இன்றுவரை இருந்து கொண்டிருக்கிறது. ஸ்ரீ ரமணர் என்ற திவ்விய நாமம் காவ்வியக்கண்ட கணபதி சாஸ்திரி களால் நமது முனிவர்க்கு 1908–ல் வழங்கப்பட்டது.

தானுணர்ந்த ஆத்ம ஞானத்தை இன்று அவர் சிரத் தையுள்ள மக்களுக்கு வழங்கிக்கொண்டிருக்கிறர். இன்பத் தையும், அமைதியையும் விரும்புவோர் திருவண்ணு மலையை நாடுக. அருணசல சிவ ஓம்.

---

குறிப்பு:- 1949–ல் ஸ்ரீ ரமணருக்கு இடது புஜத்தில் பிளவை கண்டது. நான்கு முறை ரண சிகிச்சை செய் யப்பட்டது. நோய் மகரிஷியின் உள்ளத்தை எவ்விதத் திலும் பாதிக்கவில்லை. 14–4–1950 அன்று மாலை 8–47 மணிக்கு ஸ்ரீ ரமணர் பூதவுடலை நீத்தார்; அவ் வேளை வானில் ஒரு பெருஞ் சோதி தோன்றி மேலே மறைந்தது.



ஸ்ரீ அரவிந்த மகரிஷி

# 5. ஸ்ரீ அரவிந்த மகரிஷி

(தமிழ் நேசன் 12-12-48)

ஞாலம் காலத் தேர். பிரபஞ்சத்திலுள்ள யாவும் நொடிப் பொழுது தோறும் மாறுதலடைந்து கொண்டிருக்கின்றன என விஞ்ஞான சாஸ்திர வாயிலாக அறிகின்றோம்; நமது கண்ணினாலும் ஓரளவிற்குப் பார்க்கிறோம். இம் மாறுதல்களுக்கிடையே மாறாப் பொருளைக் கண்டுணர்வதே ஞானம்; நில்லாதவற்றினிடையே நிலையுள்ளதை உணர்வது புலமை. அந் நிலைதான் கட்டும் கலக்கமும் கவலையும் இருளும் ஒழிந்த முக்தி நிலை; இதனைப் பௌத்தர் 'நிர்வாணம்' என்பர்; கிறிஸ்தவர் 'பரமபிதா போன்று மனிதன் பூரணத்வம் பெறல்' என்பர்; இஸ்லாமியர் 'அல்லாவிடம் சோஷணம் பெறல்' என்பர்- (அராபியில் 'ஹுலூல்' எனப்படும்). இப் பூரண நிலையை எல்லா உயிர்களும் இப்பவோ பின்னேயோ அல்லது பல நூற்றாண்டுகள் கழித்தோ பெறுவதே பிரபஞ்ச பரிணாமத்தின் (Cosmic Evolution) நோக்கமாகும். இப் பூரணத்வத்தை அடையும் வழியை மாந்தர்க்குக் காட்டவே மகான்கள் முன்னாளில் தோன்றினார்கள். இந் நாளிலும் இருந்துகொண்டிருக்கிறார்கள். எதிர்காலத்திலும் தோன்றுவார்கள். என்றாலும் மகான்கள் காட்டும் வழி அவ்வக் காலத்திற்கும் சூழ்நிலைகட்கும் இயைபுடையதாக இருக்கும். ஆதி காலத்திலே வேதரிஷிகள் தெய்வப் பாதையைக் காட்டினர். பிறகு யூத தீர்க்க தரிசிகளும் ஸோரோ-ஆஸ்தர், ராமர், கிருஷ்ணர் ஆகியோரும் வழி காட்டிப் போந்தார்கள்; அப்பால் கௌதம புத்தரும், லாவொத்சீயும், கன்ஃபூசியும் பேரின்பப் பெருவாழ்வுக்கு

மார்க்கம் காட்டினர். பிறகு ஏசுநாதரும் வள்ளுவரும் தோன்றி வானரசை வையத்துள் வைத்தார்கள். இவர்கள் காலத்துக்குப் பிறகு முகமது நபிகள் எழுந்து சமத்துவ வாழ்க்கையை நிலை நாட்டினர். அவருக்குப் பிறகு சங்கரரும் சைவ வைஷ்ணவ ஆச்சாரியார்களும் பிறந்து பரமன் உணர்ச்சி, அன்பு வழி, சாந்த மார்க்கம் இவற்றை நல்கினர்; இவர்களைத் தொடர்ந்து ஐரோப்பிய கிறிஸ்துவ பக்தர்களும் பாஞ்சால சீக்கிய குருமாரும் பேரின்ப வாழ்விற்கு வழி காட்டினர்கள்.

மனித சமுதாயம் இம் மகான்கள் எல்லோருக்கும் கடமைப் பட்டிருக்கிறது. இம் மகான்களால்தான் இன்றும் உலகில் அறம் கொஞ்சமேனும் நிலவுகின்றது. இன்றேல் உலகம் புலிக் காடாயிருக்கும். இம் மகானுபவர்கள் யாவரையும் நான் வணங்குகிறேன்.

மேலே கூறப்பட்டவை யெல்லாம் சென்ற காலத்தைச் சேர்ந்தவை; நமது காலத்தை இப்போது பார்ப்போம். 18–ஆம் 19–ஆம் 20–ஆம் நூற்றுண்டுகளிலே விஞ்ஞானக் கலையின் வளர்ச்சியினுல் பழைய உலகம் போய் புதிய உலகம் சிருஷ்டிக்கப்பட்டது. நீராவிக் கப்பலும், மின்சார சக்தியும், வான சக்தியும் மனித சமுதாயத்தின் முன்னைய சமயக் கொள்கைகளை யெல்லாம் ஆட்டங் கொள்ளச் செய்தன. ஐதீகங்களெல்லாம் இக் காலத்துக்கு உகந்தவையாக இருக்கவில்லை. எனவே இந் நவீன காலத்துக்கு இயைபுடைய சன்மார்க்கத்தை உலகிற்கு வழங்க ராஜாராம் மோகனராய், இராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தர், இராமதீர்த்தர், இராமலிங்க அடிகள், கிறிஸ்தவ ஸயன்ஸ் இயக்கத்தார், பிரம்மஞான சபையார், பை இயக்கத்தார் (Bahai Movement). ஸை-பா இயக்கத்தார் முதலியோர் தோன்றினர். இவர்

கள் கிழக்கின் ஆத்மீகத்தையும், மேற்கின் விஞ்ஞானத்தையும் சமன்வடப்படுத்த முயன்றார்கள். ஆயினும், அவ்வித ஆத்மீக விஞ்ஞான சமன் வயத்தைப் பூரணமாகத் துலக்குவதற்கு ஒரு மகானுபவர் தேவைப்பட்டார். "இந்தியாவின் ஆத்மீகமும் மேனாட்டு விஞ்ஞானக் கலையும் சேர்ந்ததே உலகத்தின் எதிர்காலப் பண்பாடாக இருக்கும்" என விவேகானந்த வள்ளல் கூறிப்போந்தார். இந்த ஆதர்சத்தை இன்று புதுவையில் வசிக்கும் ஸ்ரீ அரவிந்தர் நிறைவேற்றியிருக்கிறார்.

இம் மகான் சின்னஞ் சிறுவயதிலிருந்தே மேனாட்டிலேயே உயரிய கல்வி பயின்று மேனாட்டுக் கலைகளின் சுவையைத் துய்த்தவர். பிறகு தாய் நாடு திரும்பி பாரத நாட்டுச் சாஸ்திரங்களிலுங் கலைகளிலும் சம்பன்னரானார். நிறைவுள்ள உத்தியோகமும் வகித்தார். பின்னர் பாரததேவியின் அடிமை விலங்கறுக்க அல்லும் பகலும் ஒல்லும் வகையால் உழைத்தார். சுதேசி இயக்கத்துக்கு உயிர் நாடியாக இருந்து 'வந்தே மாதர' வீறை பாரத மக்களிடையே பாய்ச்சினார். சிறை சென்று வருந்தினார். சிறைவாச காலத்திலே தான் கண்ணபிரான் அவருக்குமுன் தோன்றி அர்ச்சுனனுக்குப் போதித் தருளிய 'ஸ்ரீமத் பகவத் கீதையை' அரவிந்தருக்கும் உபதேசித்தார். அதிலிருந்து அரவிந்தர் தெய்வச் சுடர் பெற்றார். சித்த முக்த புருஷரானார்; பாரத ஜோதியாகவும் உலக ஜோதியாகவும் விளங்கத் தொடங்கினார். இம் மகான் வாழ்க்கைச் சரித்திரம் விரிவானது. மகத்துவம் வாய்ந்தது. ஒரு கட்டுரையில் அதை அடக்கிக் கூற இயலாது.

ஸ்ரீ அரவிந்தர் தெய்வச் சுடர் பெற்றதிலிருந்து இன்றும் மௌனத்திலேயே அமர்ந்துள்ளார். அவர் பிறந்த

நாள் ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதி, 1872 ஹூ ஆவணி மூலம். பாரத நாடு சுதந்திரம் அடைந்ததும் அந்நாளே. அவரது ஆத்மீக சக்தி அமைதியாக, சூட்சுமமாக வேலை செய்கிறது. அவரைச் சிரத்தையுடன் தரிசிக்கிறவர்கள் இதை நேராக உணரலாம். அவரது கடைக்கண் பார்வை ஒருவரது வாழ்க்கையையே முழுதும் மாற்ற வல்லது. இந்து எனது அனுபவம்.

ஸ்ரீ அரவிந்தர் பெரிய சக்திமான், சித்திமான், புத்திமான், கல்விக் களஞ்சியம், கவி, பூரணயோகி. அவருடைய நூல்கள் தனி வாழ்க்கை, பொது வாழ்க்கை, உலக வாழ்க்கை எல்லாவற்றையும் துலக்கி மனிதன் எங்ஙனம் இப்போதே இவ்வுடலிலேயே தெய்வ சக்தியைப் பெற்று வாழலாம் என நமக்கு வழி காட்டுகின்றன. அவர் காட்டும் வழி நின்ருல் காமக் குரோத பேத விவகாரங்கள் அற்று மனிதன் இவ்வுடலிலேயே பேரின்பத்தை அடையலாம். இகத்தில் பரத்தைப் பெற்றுய்யலாம். மனித ஜாதி தேவ ஜாதியாகலாம். அவரது சித்தாந்தம் "பிரயோகம்" எனப்படும். புதுவையிலுள்ள ஸ்ரீ அரவிந்த ஆச்சிரமம் இத் தெய்வீக ஜாதியை சிருஷ்டித்திருக்கிறது. அங்கே சாதகர், சாதகிகள் சுமார் 500 பேருக்கு மேல் வசிக்கிருர்கள். இவர்களுள் உலகின் எல்லா நாட்டவரும் இருக்கிருர்கள். பெரிய மேதைகளும் ஆங்குளர். ஆச்சிரமத்திற்கு ஒரு கருணை அன்னை இருக்கிருர். இம் மகா சக்தியை ஸ்ரீ அரவிந்தர் உருவாக்கி முன் வைத்திருக்கிருர். மனித வாழ்க்கைக்கு வேண்டிய உறுப்புகளும் வசதிகளும் ஆசிரமத்தில் உள்ளன, என்ருலும் சாதி சமய சாத்திர கோத்திர பேதமில்லாமல், சடங்குகள் சின்னங்கள் எதுவுமின்றி, எல்லாரும் சமமாக வாழ்கிருர்கள். "எல்லாம் புரிவது இறைவன் ஆணை;

எல்லாம் இறைவன் செயல்'' என்று வாழ்கிறார்கள். 'யான், எனது', என்ற செருக்கு ஆச்சிரமவாசிகளிடம் எள்ளள வும் கிடையா; எல்லாரும், எல்லாம் பரம் பொருளின் உடைமை என்பதே ஆச்சிரமக் கொள்கை.

உலக மெங்கணும் இன்று சமத்துவம், சாந்தம் பேசப் படுகின்றது; விரும்பப்படுகின்றது ஆயினும், மனிதன் மனப்பான்மை மாறுதலடையாமல் சமத்துவமும் சாந்த மும் வெறும் பேச்சாகவும் கனவாகவுமே இருக்கும். ஒவ்வொரு மனிதனும் அகந்தையை அகற்ற முற்படுவானு யின் விண்ணரசு மண்ணுலகில் இயங்கும்.

ஸ்ரீ அரவிந்த ஆச்சிரமத்தில் ஞானம், பக்தி, கர்மம், யோகம் நான்கும் வாழ்வில் கலந்துள்ளன. ஆசாபாசம், வீண் மோகம், பேராசை, சிறுமை, பொறுமை, சாதி, மத நிறவேற்றுமை, பெண்ணடிமை, சமயச் சண்டை, போலி ஆசாரம், மூடப் பழக்கம், குருட்டு நம்பிக்கை, முரட்டுப் பிடிவாதம், தற்பெருமை, தற்புகழ்ச்சி இவைகள் ஆச்சிர மத்தை அண்ட முடியா. அஃது ஆத்ம சமாசக் கோவில்; பூரண வாழ்வு துலங்கும் ஆலயம்.

**ஸ்ரீ அரவிந்த சித்தாந்தம் இதுவே**

"இந்த உலகம், மனிதன் தெய்வ சித்தி பெற ஒரு நிலைக்களன். மனதைப் புத்தியில் விழுங்கி, புத்தியை ஆத்மாவில் விழுங்கி, சமாதியில் லயித்துப் போய்த் தான் தப்பித்துக்கொள்ளும் முக்திமட்டும் போதாது; நான் பிரம் மம் என்று உணர்வதுடன், எல்லாம் பிரம்மம் என்னுமுணர் ச்சியும் வரவேண்டும். இறைவன், உயிர், உலகம் இம் மூன்றிற்கும் இணைபிரியாத தொடர்புகளுண்டு. பொன் னும் பூணும்போல், இறைவனும் உலகும் ஒன்று; ஒரு

நகையில் பொன்னே உண்மை. அதன் நகாசு வேலைக ளெல்லாம் பொய்யென்று சொல்ல முடியாது; விளக்கில் சுடரே உண்மை. எண்ணெயும் தகழியும் பொய் யென் பதா? இறைவன் எப்போது உண்மையோ அப்போதே அவன் படைத்த உலகும், உயிரும் உண்மை: உலகம் பொய், கனவு, மாயை என்பதெல்லாம் மன மயக்கம்.

உலகம் மாறி மாறி நிலை நிற்பது. அஃது இறைவன் லீலை. அதில் இறைவனுடன் கலந்து, ஒவ்வொரு சிறு காரியத்தையும் அவனுக்கே அர்ப்பணமாகச் செய்து வாழ வேண்டும்.'' (சுத்தானந்த பாரதியார்).

---

குறிப்பு:- ஸ்ரீ அரவிந்தர் 5—2—50 அன்று பூத வுடலை நீத்தார்.

# 6. சுவாமி விவேகானந்தர்

(ரேடியோப் பிரசங்கம் 22-1-1949)

"துறந்தார் பெருமை துணைக் கூறின் வையத்திறந் தாரை எண்ணிக் கொண்டற்று" எனத் தமிழ் மறை இயம்புகிறபடி, உலகின்கண் மிக உயர்ந்த பெருமையைப் பெற்ற துறவோர்க் கணிகலம், ஆடவர் திலகம், அருட் பேரண்ணல் விவேகானந்தப் பெருந்தகையாரது திருச் சரிதத்தை சாங்கோபாங்கமாக எடுத்துரைக்கின் விரியும். ஆதலின், முக்கியமான அம்சங்களை மட்டும் இங்குச் சொல் லப் புகுகிறேன்.

நமது பாரதத்தாய் செய்த அருந்தவம் அனைத்தும் திரண்டு உருவெடுத்ததே விவேகானந்தர் எனக் கூறி விடலாம்.

வங்க நாட்டிலே வதிந்த ஓர் உத்தம குடும்பத்திலே ஆங்கிலத்திற்குச் சரியான 1863-ம் வருஷம் ஜனவரி மாதம் 12-ம் தேதி யன்று நமது சுவாமிகள் பிறந்தார். அவருடைய பிள்ளைத் திருநாமம் **நரேந்திர நாத தத்தர்.** அழகே உருக்கொண்ட மேனி யும், அருள் பொலிந்த வதனமும், குயிலினு மினிய குரலும், எதற்கும் அஞ்சா நெஞ்சுறுதியும், சமஸ் கிருத, ஆங்கில, பார சிக பாஷைகளில் அளவற்ற பாண்டித் யமும் பேரானந்த அருட் கடலைத் தேடி அலையும் நய னங்களும், உண்மையின் செய்தியை உலகில் பரப்பும் வேட்கையும், அதர்மத்தில் கொண்ட அருவருப்பும், எளி யோரைக் கண்டு உருகும் உள்ளமும், தாய் நாட்டி னிடம் அளப்பரும் அன்பும், காலத்திற்கேற்ற சீர் திருத் தங்களில் உண்மை விருப்பமும், அதி பாலியமாம் 25 ஆம்



ஆண்டிலேயே கமண்டல தாரியாய் வெளிவந்த அற்புதமும் பொருந்திய திவ்விய புருஷன் ஒருவரின் பெருமையை யார்தான் அறிய முடியும்.!

தாக வேட்கை கொண்டோன் நீரைத் தேடி அலேவதைப் போன்று நரேந்திரர் ஆத்ம ஞான தீர்த்தத்தைப் பருகிடும் ஆவலுடன் கீழ் நாட்டு சாஸ்திரங்களேயும், மேல் நாட்டு சாஸ்திரங்களேயும் கசடறக் கற்றும் வேட்கை தணியாமல் ஞான வாரிதியைக் காட்டிட ஒரு சற்குரு வேண்டுமெனத் தேடித் திரிந்தார். ஆரம்பத்திலே இது கிட்டாததனுல் ஐயுற்று மயங்கி நாஸ்திகத்தைக் கைக்கொள்ளலானுர். இவ்வாறு இருந்தவர் இறையருள் கூட்டுவிக்க ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவரின் திருவருள் மகிமையினுலே ஜீவன் முத்தராகி "நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" எனும் உயர் நோக்கம் கொண்டு, உலக முழுவதும் வேதாந்த சமயத்தின் பெருமையை நிலேநாட்டினர் என்பது அனேவருக்கும் தெரிந்ததே.

சுவாமிகள் பரத கண்டத்திலே தோன்றிய பெரியார்களுக்குள் தலே சிறந்தவர் என்பது மிகையாகாது. ஏனெனில் இந்தியாவுக்கும் உலகுக்கும் அவர் ஒரு மெய்ஞ்ஞான காந்தமாகிவிட்டர். சர்வதேசங்களேயும் இன்னலுறுத்தும் பிரச்னேகளே யெல்லாம் முற்றும் தீர்த்துக்கொள்ள சுவாமிகள் வழிகாட்டி யிருக்கின்ருர். பாரத பூமியிலும், அமெரிக்காவிலும் ஒரு புதிய சகாப்தத்தை உண்டுபண்ணியிருக்கிருர்.

இக் காலேயிலே மாண்டுபோகும் நிலேமையிலிருந்த நமது ஸனுதன தர்மத்திற்குப் புத்துயிர் அளித்ததுமின்றி

மேல் நாடுகளிலே அக் களஞ்சியத்தை அள்ளி வழங்கி இந்தியாவைப் பிறநாட்டகம் மதிக்கும்படி செய்தார். சுவாமிகள் மேல் நாடுகளில் செய்த தொண்டின் பயனாக அந் நாட்டவர்கள் நம்மவர்களை மதிக்கத் தொடங்கினர்கள். உபநிஷதம், பிரமசூத்திரம், பகவத் கீதை போன்ற சுருதிகளின் இரகசியங்களை எல்லோருக்கும் விளங்கும்படி சந்தேக விபரீதங்கள் அற புதிய முறையில் விளக்கிக் காட்டினர். **உண்மைச் சமயமும், விக்ஞான சாஸ்திர முடிவுகளும் முரண்பட்டவையல்ல என்பதையும், ஒன்றின் நிறைவே மற்றது என்பதையும் விளக்கினர்.** சமயகோடிகளெல்லாம் தன் தெய்வம் என் தெய்வமென வழக்கிடும் பொருள் ஒன்றே எனவும், எம்மதமும் சம்மதந்தான் எனவும் உரைத்தார். சமய வாழ்க்கையானது வெளிச் சடங்குகள் அல்ல என்பதையும், அஃது ஒழுக்கம், அறிவு, அன்பு, தூய்மை வீரதீரம், ஆற்றல், தியாகம், தொண்டு இவற்றை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும் எனவும் வற்புறுத்தினர். உண்மையான பாரமார்த்தீக வாழ்க்கையின் மூலமே உலகத்தில் சமத்துவம், சகோதரத்துவம், சமாதானம் ஆகியவை நிலவக்கூடும் என்பது நமது சுவாமிகளின் திடமான கொள்கையாகும். ஆத்ம ஞானத்தோடுகூடிய பங்கமற்ற உலகியல் வாழ்வை மன்பதை நடாத்தலாம் என்பதற்கு விவேகானந்தரே எடுத்துக்காட்டு.

நம் பொதுமக்களின் இடர்ப்பாடான நிலைமையைக் கண்டு கதறினர். தாய் நாட்டின் முன்னேற்றத்திற்கான யோசனைகள் எண்ணிறந்தவற்றை அருளியிருக்கிருர்; எழுதியும் பேசியுமிருக்கிருர். அவர் கூறிய யோசனைகளெல்லாம் இன்றைக்கும் என்றைக்கும் பொருந்துவன

வாகும். மகாத்மா காந்தி, பண்டித ஜவாஹர்லால் நேரு, நேதாஜி போஸ் போன்ற பெரியார்கள் எல்லாரும் "விவேகானந்த சுவாமிதான் நமது இக்காலைய தேசிய இயக்கத்தின் ஆத்மீகப் பிதா" என்று கூறியிருப்பதில் ஆச்சரியமில்லை.

தேசம் சீரைப் பெறவேண்டுமானால் பொதுமக்கள், பாமர மக்கள், பெண்கள் ஆகியோர் முன்னேற வேண்டுமென முதன் முதலாகத் தேசம் முழுவதும் சங்கூதியவர் நம் சுவாமிகளே. மக்களிடையே கல்வி, தொழில் வளர்ச்சி, விஞ்ஞானக் கலை முதலியவற்றைப் பரவச் செய்யவேண்டும் என ஏவினர். நம் மக்கள் அபிவிருத்திக்கு பிறநாட்டவரிடமிருந்து என்னென்ன தேவையோ அவற்றை நாம் தயங்காமல் கற்றுக்கொள்ளல் வேண்டுமென வற்புறுத்தினர். பசுத் தன்மையில் சுவாமிகளுக்குக் கொஞ்சமும் நம்பிக்கையில்லை. நமது ஆடவரும், பெண்டிரும் க்ஷத்திரிய வீறு பெற்றவர்களாக வாழல் வேண்டும் என்றார். சுவாமிகள் கனக் கண்ட இந்தியா இப்பொழுது உருவாகிக்கொண்டிருக்கிறது. அவர் சூக்ஷ்மமாக இருந்து நமது சமூகத்தை மேம்படுத்துகிறார் என்பதற்கு சந்தேகமில்லை. அவர் பூத உடலில் வசிக்கும்போது இக் கருத்துப்படவே திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்.

வேதாந்த சிங்கமாகிய விவேகானந்த சுவாமிகள் 1902-ம் ஆண்டு ஜுலை மாதம் 4-ம் தேதி வெள்ளிக் கிழமை மாலை ஆத்ம தியானத்தில் அமர்ந்திருந்து யோக சித்தியால் உடற் சட்டையைக் கழற்றி வீசினர். அன்று அவர் கடைசியாகக் கூறிய வார்த்தைகள் என்னவெனின் "விவேகானந்தனை விளங்கிக்கொள்வதற்கு இன்னும் ஒரு விவேகானந்தன் பிறக்கவேண்டும்" என்பதே.

————

# 7. விவேகானந்தரும் நேதாஜியும்

(தமிழ் நேசன் 23-1-1949)

நேற்று முன் தினம் வேதாந்த கேசரி விவேகானந்தர் பிறந்த தினம், இன்று கர்ம வீரர் நேதாஜி சுபாஷ் பிறந்த தினம். ஒருவர் ஞான வீரர்; மற்றவர் கர்ம வீரர். இருவருக்குமிடையே பல ஒருமைப் பாடுகள் உண்டு.

வங்கத்தை இந்தியாவின் மூளை என்று மகாத்மா காந்தியும் வேறு பல பேரறிஞர்களும் கூறியிருக்கின்றனர். உலகம் போற்றும் உத்தமர்கள் சிலரும், பேரறிவு படைத்த நிபுணர்கள் சிலரும் இக்காலத்திலே வங்காளத்தில் பிறந்திருக்கிறார்கள். வங்க ஆடவர் பெண்டிர் இருபாலாரிடத்திலும் இந்தியாவின் ஏனைய சமுகத்தாரை-விட புரட்சி மனப்பான்மை அதிகம். அவர்களது இம் மனப்பான்மை ஆக்கத் துறைகளிலேயே இயங்கும். எங்கெங்கு மேலான விஷயங்கள், உயரிய பண்பாடுகள் காண்கின்றனவோ அவைகளையெல்லாம் கிரகித்து தம் சமுகத்தின் நலத்துக்காகப் பிரயோஜனப் படுத்திக்கொள்வது வங்காளிகளின் சிறப்புக்கு ஒரு காரணம். அவர்கள் எவ் விஷயத்தை நோக்கினாலும் வெறும் பேச்சுடன் நிற்கமாட்டார்கள். அனுஷ்டானத்தில் இறங்கி விடுவார்கள். இத்தகைய குலத்திலேதான் வேதாந்த சிங்கமான விவேகானந்தரும் கர்ம வீரரான சுபாஷ் சந்திர போஸும் பிறந்தார்கள். விவேகானந்தரது பிறந்த தினம் இவ்வாண்டு ஜனவரி மாதம் 21-ம் தேதி. நேதாஜி போஸினது பிறந்த தினம் இன்று.

இவர்கள் இருவரும் வங்காளத்திலே **காயஸ்த வம்சம்** என்று சொல்லப்படும் வம்சா வழியில் வந்தவர்கள். இவ் வம்சத்தில்தான் உலகப் பிரசித்திபெற்ற விஞ்ஞான சாஸ்திரி **சர் ஜகதீச சந்திரபோஸும்** இன்றைக்குப் புது வையிலிருந்து தெய்வீக ஒளி பரப்பிக்கொண்டிருக்கும் **ஸ்ரீ அரவிந்த மகானும்** வேறு பல வீர தீரர்களும் தோன்றியுள்ளார்கள்.

இக் கட்டுரையின் நோக்கம் விவேகானந்தருக்கும் சுபாஷ் போஸுக்கு முள்ள ஒருமைப்பாட்டைக் காட்டு வதேயாகும்.

**விவேகானந்தர் சுபாஷினது ஆத்மீக குரு,** தனது 17 வது பிராயத்திலேயே சுபாஷ்போஸ் விவேகானந்தரது போதனைகளால் கவரப்பட்டு ஹிமாலயத்துக்குச் சென்று தவம் புரிந்தார். இவ் ஆத்மீக வேட்கை நேதாஜி யிடம் அவர் மலாய் நாட்டில் வசித்த காலையிலும் இருந்து கொண்டிருந்தது.

விவேகானந்தர் பகவத்கீதை, உபநிஷத்துகள் இவற் றைக் கொண்டே தனது சித்தாந்தத்தை உலகமெல்லாம் முழக்கினார். இஞ்ஞான நூல்களின் முடிவுகளுக்கும் தற் கால விஞ்ஞான சாஸ்திர முடிவுகளுக்கும் அதிகம் ஒரு மைப்பாடு உள்ளன என்பதை ஐயந்திரிபற விளக்கி னார். சுபாஷ் போஸ் எப்பொழுதும் பகவத் கீதையைத் தன்னுடனே வைத்திருப்பார். தினசரி அந் நூலிலிருந்து சில சுலோகங்களையேனும் ஓதித் தியானம் செய்வார். எங்குச் சென்றாலும் தனது சட்டைப்பையுள் பகவத் கீதைப் பிரதியொன்று நேதாஜி வைத்துக்கொள்வார்.

விவேகானந்தர் பாரத சக்தியின் அருளையே தனக்குத் துணையாகக் கொண்டு எல்லாக் காரியங்களையும் செய்தார். சக்தியையே வழிபட்டார். நேதாஜி சக்தி பூஜை செய்வதுண்டு. சக்தி வழிபாட்டில் அவருக்கு நிறைய நம்பிக்கை யிருந்தது.

விவேகானந்தர் தனது யோக சக்தியினாலும், பேரறிவாலும் உலகத்தைக் கவர்ந்தார். அவர் யதிராஜர்; பிரம்ம ஞானி. சுபாஷ் போஸ் அவரின் கருத்துக்களைப் பின் பற்றினரென்றாலும் அவற்றை அடிப்படையாகக் கொண்டு அரசியற் போர் நடத்தி இந்திய மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டார். அன்று விவேகானந்தர் உறங்கிக் கிடந்த இந்திய மக்களைத் தன் வீரக் கர்ச்சனையால் தட்டி எழுப்பி, "வேறெந்தத் தெய்வத்தையும் வணங்காமல் பாரதத் தாயை வணங்குங்கள்" என்றார். இன்று நேதாஜி **"ஜய் ஹிந்த்"** என்ற கோஷத்தைச் சங்கநாதம் செய்தார். எல்லாத் துறைகளிலும் இந்தியா உன்னத முன்னேற்றம் அடையவேண்டும் என்பதே அக் கோஷத்தின் கருத்தாகும். இன்றைக்கு நேதாஜி தந்த "ஜய் ஹிந்த்" இந்தியா வெங்கும் ஒலிக்கின்றது. சிறு குழந்தைகள் கூட அதைக் கோஷிக்கிறார்கள்.

விவேகானந்தர் இந்தியாவின் ஆத்மீகக் கலைப் பெருமையை உலகெங்கும் நிலை நாட்டினார். நேதாஜி தனது தேசிய ராணுவத்தால் இந்தியரின் சுதந்திர வீறை உலகிற்கு எடுத்துக்காட்டினார்.

விவேகானந்தர் "சமய சுதந்திரம், சமூக சுதந்திரம், தனி மனிதர் சுதந்திரம், அரசியல் சுதந்திரம் எல்லாம் வேண்டும்" என்றார். நேதாஜி "அரசியல் சுதந்திரத்தைப்

பெற்ருல் ஏனைய சுதந்திரங்களை நாம் பெற்றுக்கொள்ள லாம்" எனக் கருதியே தேசத்தின் அரசியல் சுதந்திரத் திற்காகப் பாடுபட்டார்.

"வேதாந்த மூளையும் இஸ்லாமிய உடலும் நமக்கு வேண்டும்" என்ருர் விவேகானந்தர். நேதாஜி "ஹிந்து முஸ்லிம் பரஸ்பரத்துக்கு" எடுத்துக்காட்டாக நின்ருர். விவேகானந்தர் "எல்லாரிடத்தும் பிரம்மம் இருக்கிறது; ஆகையினுலேயே சாதிப் பூசல்கள் வேண்டாம்" என்ருர். "பார்ப்பார இந்தியரும, பறைய இந்தியரும் என் சகோ தரர்" என்ருர். நேதாஜி தனது "**சாம்யவாத** சித்தாந் தத்தினுல்" எல்லாருக்கும் சம வசதி, சம உரிமை என் ருர்.

விவேகானந்தர் "வாலிபர்களாலேயே இந்திய சமு தாயம் புத்துயிர் பெறவேண்டும்" என்ருர். நேதாஜி வாலி பர்களுக்கு ஒரு தெய்வமாக விளங்கினுர்.

விவேகானந்தர் "வேதாந்தத்துடன் மேல் நாட்டு விஞ்ஞான சாஸ்திரமுறைகள் கலக்கப்பட வேண்டும்" என்ருர். நேதாஜி "சுதந்திர இந்தியாவில் விஞ்ஞான முறைகள் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் கையா ளப்படவேண்டும்" என்ருர்.

"பெண்கள் சீர்திருந்தி முன்னேறினுலன்றி நமது நாட்டுக்கு விமோசனம் இல்லை" என்ருர் விவேகானந்தர். நேதாஜி தான் எடுத்துக்கொண்ட சேவைகள் எல்லா வற்றிலும், பெண்களுக்கு முக்கிய இடம் கொடுத்தார். அதற்காகவே **ஜான்ஸி ராணிப் படையையும்** ஆரம்பித் தார்.

"பொது ஜனங்கள் விழித்தெழாமல் எந்த இயக்கமும் வெற்றிபெற முடியாது" என்றார் விவேகானந்தர். பொது ஜனங்களைக்கொண்டே நேதாஜி தனது இயக்கங்களையெல்லாம் நடத்தினர்.

வங்கத்தின் இவ்விரு வீரர்களும் இன்றைய சுதந்திர இந்தியாவைச் சிருஷ்டிப்பதில் அளப்பரும் பங்குப் பெற்றிருக்கிறார்கள். இருவரும் இந்திய சரித்திரத்தில் உயரிய இடம் பெற்றுவிட்டார்கள்.

---

குறிப்பு:- 1945-ஆம் ஆகஸ்ட்-மீ 15-ந்தேதி கிழக்காசியா யுத்தம் ஜப்பானியரின் சரணாகதி பயனாக நிறுத்தப்பட்டவுடன், அவருக்கு மிகவும் நெருங்கிய எங்கள் இரண்டொருவருடன் கலந்தாலோசித்து 16–8–1945 அதிகாலை நேதாஜி இந்திய தேசிய ராணுவ உயர்தர உத்தியோகஸ்தர் மூவருடன் சைகோனிலுள்ள ஜப்பானியரின் கிழக்காசிய ராணுவ தலைமைக் காரியாலயத்திற்கு சிங்கப்பூரிலிருந்து விமானத்திலே சென்றார். அங்கிருந்து மஞ்சூரியா சென்று ரஷ்யரின் உதவியைப் பெற முடியுமானல் பெற்று இந்திய சுதந்திரப் போரைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்பதே அவரது குறிக்கோள். போகும் வழியில் 18–8–45 அன்று மதியம் அவர் சென்ற விமானம் தைவான் தீவின் விமானத் தளத்தின் மீது நொறுங்கியதின் பயனாக நேதாஜியும் வேறு சில ஜப்பானிய ராணுவ அதிகாரிகளும் படுகாய மடைந்து சில மணி நேரங்கழித்து தைவான் ஜப்பானிய ராணுவ ஆஸ்பத்திரியில் இறந்தனர். நேதாஜியின் உடலம் பௌத்த பிரேதச் சடங்குகளுடன் தைவானிலேயே தகனஞ் செய்யப்பட்டு அஸ்திகள் மாத்திரம் இரு வாரங்களுக்குப் பிறகு நேதாஜியுடன் சென்ற கர்னல் ஹபிப்புர் ரஹ்மான் (இவரும் காயமடைந்தார்) அவர்களால் தோக்கியோவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு ரெங்கோஜி பௌத்த ஆலயத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அதை நான் 1952-ஆம் செப்டம்பர்-மீ உலக பௌத்த மகா நாடுக்காக தோக்கியோ சென்றிருந்த போது தரிசித்தேன்.



யேசு கிறிஸ்து

# 8, யேசு கிறிஸ்து

( ரேடியோ பிரசங்கம் 24–12–1948 )

நமது ஸநாதன தருமம் ஆதி அந்தம் இல்லாதது. எல்லாச் சமயங்களின் உண்மைகளேயும் தன்னகத்தே கொண்டது. சமரச நோக்குடையது. உலகப் பெரியார்கள் எல்லோருக்கும் தன்னகத்தே இடங்கொடுக்கிறது. அவர்களே ஏற்றுக்கொள்கிறது. "யே யதா மாம் ப்ரபத்யந்தே தான்ஸ்ததைவ பஜாம்யஹம், மம வர்த்மாநுவர்த்தந்தே மனுஷ்யா: பார்த்த ஸர்வச:"- "யாவர் என்னே எங்ஙனம் வேண்டுகிருர்களோ அவர்களே நான் அங்ஙனமே சார்கிறேன். பார்த்தா, மனிதர் யாங்கணும் என் வழியையே பின்பற்றுகிருர்கள்"-இது பகவத் கீதை வாக்கியம். "அப்பாலும் அடிசார்ந்தார் அடியார்க்கும் அடியேன்" என்ருர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். இம் முகாந்தரங்களிஞலேதான் இன்று யேசுநாதரைப் பற்றிப் பேச விரும்பியுள்ளேன்.

பரந்த கடலே நோக்குவோமாயின் சிறு சிறு அலேகள் தோன்றி பிறகு அவை பெரிய ஒரு அலேயாவதைக் காண்போம். அதே போன்று உலகின்கண்ணுள்ள சமுதாயங்களிலும் பல மகான்கள் முதலிலே தோன்றி பிறகு அவர்களேத் தொடர்ந்து ஒரு பெரிய மகாத்மா தோன்றுவதுண்டு. அத்தகைய மகாத்மா தனக்கு முன்னிருந்த மகான்களின் கொள்கைகளேப் பூரணப்படுத்தவே வருவார்; அழிப்பதற்கன்று. இற்றைக்கு சுமார் இரண்டாயிரம் வருஷ அளவில் யூத சமுதாயத்திலே யேசு பெருமான் தோன்றினர். அவருக்கு முன்னர் அங்குச் சில

மேலோர் தோன்றியிருந்தார்கள். அவர்களெல்லாம் சிறு அலைகள். யேசு பெருமான் பெரிய அலை. இவ்வித பெரிய அலைகளையே நாம் **அவதார புருஷர்கள்** என்கிறோம். **இவர்கள் ஜகத் குருக்கள்.** ஆகையினாலே பல கோடி ஜனங்களைப் பிறவிப்பயன் அடையச் செய்கிறார்கள்.

யேசு பெருமான் **கன்னி மேரியையும் அருளுடை தச்சன் யோசப்பையும்** பெற்றோராகக் கொண்டு பாலஸ்தீனத்திலே பெத்லேகம் நகரிலே பிறந்தார். அவர் பணிவும் அடக்க ஒடுக்கமும் சாந்தமும் உருவானவர் அவர் வாழ்நாள் முழுமையும் ஒரு குழவி போன்று மாசற்றவராக வாழ்ந்தார். "ஏ மனிதரே! இக் குழந்தைகளைப் போல் நீங்கள் ஆகாமல் இருக்கும் வரை பரம் பொருளின் அரசை நீங்கள் பெறமுடியாது" என அவர் வற்புறுத்தினர். அன்பு, அருள், பொறுமை ஆகிய சீலங்களை அவர் அளவு மீறிப் பெற்றிருந்தார். அவர் நைஷ்டிகப் பிரம்மச்சாரியாக வாழ்ந்தார். பணத்தை, பொருளை அவர் துச்சமாகக் கருதினர். "ஒரு ஊசியின் காதுவூடாக ஒருக்கால் யானை நுழைந்தாலும், பணம் படைத்தோர் கடவுள் அரசைப் பெறமுடியாதென நான் கூறுகின்றேன்" என யேசு இயம்பினர். இப்பேர்ப்பட்டவரை நாம் மகாயோகி, மகாத்மா, பகவான் எனக் கொள்கிறோம்.

அவர் இழிவடைந்தோரையும், பாவிகளையும், பொது மகளிரையும் வரவேற்று, அவர்களைத் தூய்மைப் படுத்தி நல்லறம் பூணச் செய்தார். இடர்ப்பட்டோருக்கு ஆறுதலளித்தார். மனமுடைந்தவர்களுக்கு நிவாரணமும், தேறுதலும் அளித்தார். ஈஸ்வரனை நாம் ஏழை பங்காளன் என்கின்றோம். யேசு பெருமானும் இதர உலகப் பெரியார்களும் எப்பொழுதும் ஏழை பங்காளர்களாகவே

வாழ்ந்தார்கள். "இழிவடைந்தவர்களுக்காகவே நான் வந்துள்ளேன்" என்று அவர் கூறினர்.

இறைவன் அன்பு, மக்களன்பு, இவ்விரண்டுமே யேசுநாதரது குறிக்கோளாக இருந்தன. "இறைவனை நம்புங்கள். அவரே நமது ஆண்டவன்-உனது ஆண்டவனை உன் முழு மனதுடனும், உன் முழு உயிர்ப்புடனும், உன் முழு ஆற்றலுடனும் நேசிப்பாயாக-முதல் கடவுளரசைத் தேடு, மற்றவை யெல்லாம் உன்னை வந்தடையும்-உனது அயலாரை உன்னைப் போன்று நேசி-நரிகளுக்கு வளைகளுண்டு; பட்சிகளுக்குக் கூடுகளுண்டு. ஆனல் மனித புத்திரனுகிய எனக்குத் தலைசாய்க்கவோ இடமில்லை-உங்கள் பரம பிதாவைப் போன்று நீங்களும் பூரணமடையுங்கள்-உண்மையை நீவிர் உணர்வீரானல் அவ்வுண்மை உமக்கு வீடு அளிக்கும்-முதலில் உன் கண்ணில் விழுந்துகிடக்கும் உத்திரத்தைக் களைந்துவிடு; பிறகு உன் சகோதரன் கண்ணிலிருக்கும் துரும்பை எவ்வாறு களையலாமென்பது தெளிவுறக் காண்பாய்-நும் பகைவர்பால் மெய்யன்பு பாராட்டுமின்; பகைவருக்கு நன்மை செய்மின், கடவுள் நல்லார் மீதும் பொல்லார் மீதும் வெயில் எறிக்கச் செய்கிறர். அறவோருக்கும் மறவோருக்கும் மழை பெய்விக்கிறர். அவரைப்போல் நீவிரும் செய்தலே நும் கடன்-இறைவன் ராஜ்யம் உங்கள் உள்ளத்திலேயே இருக்கிறது." இவையே யேசுநாதரின் பிரதான கற்பனைகள். அவர்தம் போதனைகளுக்கு அவர் வாழ்க்கையே சிறந்த விளக்கமாகிறது. அவரது மலைப் பிரசங்கம் (*Sermon on the mount*) நமது யம நியம அனுஷ்டானங்களையும் கீதை, குறள் இவற்றின் வாக்கியங்களையும், கௌதம புத்தரின் அஷ்டாங்க மார்க்கத்

தையும் ஒத்திருக்கின்றது. அது தெய்வ ஆவேசக் கனல் பொருந்தியது. கல் நெஞ்சைக் கரைக்கும் ஆற்றலுடையது. கிறிஸ்தவ சமயத்தின் சாரம் அஃதே எனலாம்.

கடைசி உணவு (*Last supper*) அருந்திய போது இவர் தமது சிஷ்யர்களின் பாதங்களைக் கழுவினார். அவருடைய தாழ்மை எத்துணை மகிமை உடையது. யுதிஷ்திரர் நடாத்திய ராஜசூய யக்ஞையில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அதிதிகளின் பாதங்களைக் கழுவினார். இம் மகாத்மாக்களிடமிருந்து நாம் வினயத்தின் பண்பைத் தெரிந்து கொள்ள வேண்டாமா? "பணியுமாம் என்றும் பெருமை, சிறுமை அணியுமாம் தன்னை வியந்து" என்றார் வள்ளுவர். கொஞ்சப் பணம், ஒரு மோட்டார் வண்டி, ஒரு வீடு வாசல் இருந்துவிட்டால் சிறு மனிதன் தன்னை ஒரு சக்கரவர்த்தி என்று நினைத்துக்கொள்கிறானே!.

"சதா காலமும் பிரார்த்திக்கவேண்டும். கதவைத் தட்டினால் திறபடும்; கேட்டால் கிடைக்கும்" என்று முரசறைந்தார் ஏசுநாதர். இறைவனை அடைவதற்கு நெறி இவையன்றோ! ஞாயிறன்று, வெள்ளியோ கோவிலுக்குப் போவதினால் மட்டும், அல்லது இன்னல்கள் வரும் வேளையில் மட்டும் அவைகளைப் போக்கும்படி இறைவனை இறைஞ்சுவதனால் நாம் பக்தர்களாகிவிட முடியாது. இறை வழிபாட்டில் நாம் வியாபாரம் செய்யக்கூடாது. உண்மைப் பக்தி என்றால் இறைவனுக்கென்றே நாம் வாழவேண்டும்.

யேசு "தீமையை நன்மையைக் கொண்டு வெல்க" என்றார். அஹிம்சையின் அனுஷ்டானம் இதுவன்றோ? அவரே அஹிம்சா மூர்த்தியாக விளங்கினார். நமது காந்திஜீயும் இவ் வழியே நின்றார்.

நமது யோகிகளுக்குரிய அஷ்டாங்க சித்திகளும் அவருககிருந்தன. கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார். பிறர் உயிர் பெறுவதற்காக அவர் மரணத்தை ஏற்ருர். அவருடைய இறுதி வார்த்தைகள் உலகுக்கு ஒரு எடுத்துக்காட்டு—"பரம பிதாவே, என்னை இம்சிக்கிறவர்களை மன்னிக்கவேண்டும். அவர்கள் செயலை அவர்களே உணரார்", என சிலுவையில் இருந்துகொண்டே பிரார்த்தித்தார். க்ஷமம் என்பதின் உருவமும் உயிரும் ஏசுநாதராவர். அதனுல்தான் அவர் இன்றைக்கும் மக்கள் உள்ளத்தில் இருந்துகொண்டிருக்கிருர்.

கிறிஸ்து பூரண யோகி. அவருக்கு தேக புத்தி இருக்கவில்லை. அவர் பரம்பொருளுடன் தன்னை ஐக்கியப்படுத்தி இருந்தார். இரண்டறக் கலந்திருந்தார். ஆதலாலேதான் "நானும் என் பிதாவும் ஒன்று" என்ருர் (அஹம் பிரம்மம் அஸ்மி).

கிறிஸ்துவைப் பின்பற்றி கிறிஸ்மஸ் கொண்டாடுகிருேம். அவர் மாட்டுத் தொழுவத்திலே ஏழ்மையான குடும்பத்திலே பிறந்தவர். ஏழ்மையாக வாழ்ந்தவர். பதின்மூன்று வயதுக்கும், முப்பத்தியேழு வயதுக்கு மிடையே ஜெருசலத்திலிருந்து வியாபாரிகளுடன் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார். இந்தியாவில் சன்யாசியாக வாழ்ந்து யோகாப்பியாசம் செய்தார். பிறகு இரண்டு மூன்று ஆண்டுகளே தன் தேசத்தில் உபதேசங்கள் செய்தார். இக் கூற்று பல பேரறிஞர்களின் ஆராய்ச்சியாகும். எவ்வாருயினும் உண்மை இந்து பௌத்த மதங்களுக்கும் உண்மைக் கிறிஸ்தவ மதத்திற்கும் வெகு நெருங்கிய ஒற்றுமை உண்டு.

கருணை, அன்பு, தாழ்மை, பற்றின்மை, பராபக்தி, தூய்மை இவற்றின் சொருபம் ஏசுநாதர். அஹிம்சை, சாந்தம் இவற்றின் தூதர் அவர்.

கிறிஸ்மஸ் செய்தி அகில அன்புச் செய்தி. சொல்லி லடங்கா தெய்வீக சக்தி வாய்ந்தது. உலக மக்கள் யாவருக்கு மிடையே எவ்வித வித்தியாசமுமின்றி சமாதானம், நல்லெண்ணம் இவை கிறிஸ்மஸ் சின்னங் களாகும். கிறிஸ்மஸ் ஒரு வெறும் கொண்டாட்ட நாளன்று. நித்தமும் நமது உள்ளத்தில் கிறிஸ்மஸாக இருத்தல் வேண்டும். கிறிஸ்துவைப் போன்று மாந்தர் வாழல் வேண்டும். கிறிஸ்துவின் உணர்ச்சியை நாம் பெறல் வேண்டும். அதுதான் அகில உணர்ச்சி; அகண்ட உணர்ச்சி. இஃது எல்லாச் சமயங்களுக்கும் பொதுவானது. ஆத்மீகப் பூரணப் பள்ளி யெழுச்சியே கிறிஸ்மஸாகும்.

# 9. ஸ்ரீ சங்கராச்சாரியார்

(தமிழ் நேசன் 6–3–1949)

ஹிந்து தேசத்தின் பழம்பெரும் சமயம் "சநாதன தர்மம்" எனப்படும். சநாதன தர்மம் ஆதி அந்த மற்றது; குறிப்பிட்ட ஒருவரால் ஸ்தாபிக்கப்படாதது; உலகின் கண்ணுள்ள வெவ்வேறு சமயங்களுக்கெல்லாம் தாயாக விளங்குவது; இக்காலத்து விஞ்ஞான சாஸ்திர முடிபுகளுடன் முரண்படாத உண்மைகளைத் தன்னகத்தே கொண்டிலங்குவது.

ஹிந்து சமுதாயத்திற்கும், சநாதன தர்மத்திற்கும் இடர்கள், பிசகுகள் ஏற்படுங் காலந்தோறும் மகான்கள் தோன்றி காலப் போக்கிற்கு ஒவ்வ சமுதாயத்தைப் புனருத்தாரணம் செய்து தர்மத்தைப் புனிதப்படுத்தி மக்களுக்கு மெய்வழி காட்டி, ஒளி காட்டி வந்திருக்கின்றனர் என்பது வெள்ளிடைமலை,

சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்ரீ கிருஷ்ணர் தோன்றி பகவத் கீதாச்சாரியாக விளங்கி சநாதன தர்மத்தைப் புனிதப்படுத்தி ஹிந்து சமுதாயத்திற்கு ஒரு பொது மறையை நல்கினர். சமுதாயத்தைப் பீடித்திருந்த அல்லல்களைப் போக்கி, பிளவுகளைக் களைந்து அதை ஐக்கியப் படுத்தினர். பிறகு, சமுதாயமும் தர்மமும் சீர்குலைந்த காலை கௌதம புத்தர் தோன்றி உபநிஷத் அறிவை உபதேசித்து சநாதன தர்மத்திற்குப் புத்துயிர் அளித்தார்; பௌத்த பிக்ஷு பிக்ஷுணிகள் அறத்தை அடிப்படையாகக் கொண்டு பல கலைகளையும் வளர்த்து சமுதாயத்தையும், நாட்டையும் ஒன்றுபடுத்தி

ஞர்கள்; பாரத நாட்டின் தர்மமும், கலைகளும் அவர்கள் வாயிலாக உலகெங்கும் பரவலாயின; பௌத்த சகாப் தத்தை ஹிந்து தேசத்தின் "பொன் யுகம்" என்பதுண்டு. இதற்குச் சில நூற்றுண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் சநாதன தர்மமும் ஹிந்து சமுதாயமும் சீர்குலைந்து பல அலங்கோலங்களுக்கு உட்படலாயின. நாடெங்கும் குழப் பமும் சச்சரவும் நிறைந்திருந்தன. தர்மம், சமயம் இவற் றின் பெயரால் எங்கும் ஊழல்களும், பயங்கர உபா சனைகளும் நிலவின. தொழில் பிரிவினைக்காக இருந்த சமூகப் பாகுபாடுகள் சுயநலத்தோரால் கூடிய ஜாதிப் பிரிவினைகளாக்கப்பட்டன. குரோதம் குரோதத்தை வளர்த்தது. சாஸ்திரங்களின் உண்மைக் கருத்துக்களை மறந்து புலவர்களின் அறிவெல்லாம் ஏட்டுச் சுரைக்காயாக இருந்தது. அவர்கள் வெறும் வெளிச் சடங்குகளையே குறிகோளாகக் கொண்டனர். ஒரு சாரார் இவ்வாறிருக்க பிறிதொரு சாரார் சூன்ய வாதம், நாஸ்தீகம், லோகா யதம், வெறிகொண்ட கபாலிகம் ஆகியவற்றைத் தழுவி னர்; அவற்றைப் பிரசாரஞ் செய்தனர். இக் காலத்தே தான் நாயனுர்களும், ஆழ்வாராதிகளும், ஆச்சாரியார் களும் தோன்றினர். இத் திருக்கூட்டத்தாருள் முன்னணி யில் நிற்பவர் ஸ்ரீமத் சங்கர பாதாசாரியார். இவர் வைசாக சுக்ல பஞ்சமியன்று சேர நாட்டிலே காலடி என்னும் ஊரிலே பிறந்தார்.

சிலர் ஸ்ரீ சங்கரர் கிறிஸ்துவிற்கு முன் பிறந்தார் என்பர்; சிலர் கி. பி. 788-ல் பிறந்ததாகக் கொள்வர். தந்தையார் சிவகுரு; தாயார் ஆரியம்பாள் (சுபத்திரை); இருவரும் பரம பக்தர்கள். அவர்கள் பிள்ளைக் குறை யைத் தீர்க்க சங்கரனை நோக்கிக் கடுந்தவம் புரிந்தனர். சங்கரனருளால் பிறந்தவரே நமது ஸ்ரீ சங்கரர். மூன்

ரும் வயதில் தந்தை இறந்த பின்னர் தாயார், குழந்தையைக் கவனமாக வளர்த்தாள். குருகுலம் பயின்று பதினுருவது பிராயத்திலேயே சகல சாஸ்திர சம்பன்னராக விளங்கினுர் சங்கரர். அப்பொழுது மகனுக்குக் கல்யாணம் செய்து வைக்கத் தாய் முனேந்தாள்; நல்ல பெண்ணேத் தேடினுள். ஆனுல் சங்கரர் கற்றவழி நிற்கப் புகுந்தார். நேராகத் துறவறம் பூணத் துணிந்து தாயிடம் அனுமதி பெற்று, தக்க குருவை நாடிப் புறப்பட்டார்; கால் நடையாகவே நாடெல்லாம் சுற்றி பல பெரியார்களேக் கண்டு, பிறகு நருமதை நதிக்கரையில் "கோவிந்த பகவத்பாதர்" என்ற பழுத்த ஞானியை அடைந்தார். அப் பெரியார் சங்கரருக்கு அன்புடன் துறவறம் ஈந்து "அத்வைத" உபதேசம் செய்தார். 'பகவத் பூஜ்ய பாதாசாரியார்' என்ற பெயரையும் சிஷ்யனுக்கு அளித்தார். குருவின் கட்டளேப்படி பிரம்ம சூத்திர, உபநிஷத், கீதை முதலிய நூல்களுக்கு அத்வைத விரிவுரை எழுதினுர்; நாடெல்லாம் வேதாந்தப் பிரசாரம் செய்தார். யோகானுஷ்டானத்திலும் பூரண சித்தி எய்தினுர். அவரது தெய்வீக வாழ்வு, தூய்மை, அன்பு, புலமை, நாவன்மை ஆகியவை எல்லோரையும் அவரடி பணியச் செய்தன. பத்து விதமான சந்நியாசத் திருக் கூட்டங்கள் நிறுவினுர். அவை சரஸ்வதி, பாரதி, புரி, கிரி, தீர்த்த, ஆஸ்ரம, வன, ஆரண்ய, பர்வத, சாகர என்ற "தசநாமிகளாகும்", ஸ்ரீ சங்கரர் ஸ்தாபித்த திருமடங்களில் துறவிகள் சிலரும் அருட் பணி புரிந்தனர். நமது ஆச்சாரியாரை "ஷண்மத—ஸ்தாபன—ஆச்சாரியார்" என்றும் சொல்வதுண்டு. சிவன், விஷ்ணு, சக்தி, முருகன், கணபதி, சூரியன் ஆகிய ஆறு கடவுள் வடிவுகளேயும் உபாசிப்போரை அவர் தழுவிச் சென்றுர். ஆனுல் அந்தந்த மதங்களில் படர்ந்த இரு

ளைப் போக்கினர். கோயில்களில் ஏற்பட்டிருந்த அனுசாரங்களையும், ஊழல்களையும், பிசகுகளையும் போக்கினர். பக்தி ஸ்தோத்திரங்கள் இயற்றினர்; ஆலயங்கள் இறைவன் அன்பை வளர்க்க உறுதுணையாக வேண்டுமென்பதை வற்புறுத்தினர். அவர் எதையும் அழிக்க வரவில்லை; புனிதப்படுத்தி நிறைவேற்றவே வந்தார். அவரது அத்வைத சித்தாந்தம் இதர மதக் கோட்பாடுகளுக்கு மாருயில்லாமல் அவைகளின் நிறைவாகவே இருந்தது. அத்வைதத்தினல் பல மதங்களையும் ஐக்கியப்படுத்தி ஹிந்து சமுதாயத்திற்குப் புத்துயிரளித்தார். "உள்ளது ஒன்றே; உரவோர் அதனைப் பலவாக விள்ளுவர்" என்ற வேத உண்மையை ஸ்தாபித்தார். இந்த மகான் செய்த புண்ணியந்தான் இன்றும் பாரத நாடு ஞான நிலையமாக விளங்குகிறது. பரந்த நோக்குடன் கூடிய ஆழ்ந்த பேரறிவில் சங்கரருக்கு ஒப்பாரும் மிக்காரும் உலக சரித்திரத்திலேயே காண்பதரிது என்பது எல்லா அறிஞர்களின் கூற்றுகும். ஆற்றல், தைரியம், சுதந்திரம், அகில உணர்ச்சி இவையே அவரது உபதேசங்களின் நான்கு தூண்களாகும்.

வேதாந்தம், சித்தாந்தம் இரண்டின் முடிபும் அத்வைதமே. "அஹம் ப்ரஹ்மம் அஸ்மி" என்ற தியானத்தில் ஊன்றினல் அத்வைத பிரக்ஞையை அடையலாம் என வேதாந்தம் கூறும். "சிவோஹம்" பாவனையால் "சித்த மலம் அறுந்து சிவமாகி" அத்வைத பிரக்ஞையைப் பெறலாமென சித்தாந்தம் கூறும். "அவனே தானேயாகிய அந்நெறி ஏகனுகி" (சிவஞான போதம்.)

**"நமக்குள் இரண்டு 'நான்'கள் உண்டு.**

ஒன்று மனத்துடனே பிணைந்து, அகம்பாவமாகக் கிளம்பி மதியை மறைத்து மயக்கித் தொல்லை செய்யும்

ஆணவமாய நான்; அது வெட்கித் தலை குனிந்து ஒழிந்தால், உள்ளத்திலிருந்து விறுவிறுப்பாக சூக்ஷ்ம ஜோதியாக மின்சார ஓட்டம் போல், ஒரு சைதன்ய நான் எழும். அதுவே உண்மை நான்; ஆதமா, சுத்தான்மா; அதை ஒரு தரம் அறிந்தால் விடமுடியாது; நாமும் பிரியோம்; உயிர் போனாலும் உடல் விழுந்தாலும் அதன் உணர்விலேயே வாழ்வோம்; சுக துக்க பந்த தொந்தங்களாகிய மனக் கட்டுமானங்கள் ஒழிந்து பரம சுகத்தை உள்ளே அனுபவிப்போம். அந்த நிலைதான் விழிப்பு, கனவு, துயில், மறப்பைக் கடந்த துரியாதீத நிலை; அந் நிலையில் "தத்வமஸி" "ஓம் தத்ஸத்" என்னும் மகா வாக்கியங்களின் பொருளை உணரலாம்........... எல்லாரும் இந்நிலை அடைந்தால் உலகமே சுவர்க்கமாகும்; மனிதர் தேவராவர்" —யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்.

உலகின் உள்ளத்தைக் கவர்ந்த புருஷோத்தமர்களின் வாழ்வு பயங்கரமாகவே முடிவடைந்திருக்கிறது. கண்ணன், இராமன், புத்தர், ஏசுநாதர், தயானந்த சரஸ்வதி, மகாத்மா காந்தி போன்றவர்களின் இறுதி அதற்கு எடுத்துக்காட்டு. ஸ்ரீ சங்கரருக்குப் பகைவர் தந்த நஞ்சால் தீராத மூலநோய் கண்டு கேதார நாதத்தில் "சிவோஹம்" உச்சரித்துக் கொண்டே உடற் சட்டையை உதறினர். சிலர் ஸ்ரீ சங்கரர் முப்பத்திரண்டு ஆண்டுகளே இவ்வுலகில் வாழ்ந்தாரெனக் கொள்வர். ஆனல் அவர் "தேவ்ய பராதக்ஷ மாபந ஸ்தோத்திரம்" பாடும்பொழுது தனக்கு எண்பத்தைந்து வயதென அதில் கூறியிருக்கிறார் என்பதும் கவனிக்கத் தக்கது.

தற்கால விஞ்ஞான சாஸ்திர முடிபுகளெல்லாம் அத்வைத சித்தாந்தத்தையே உறுதிப்படுத்துகின்றன. ஒற்றுமை, சமாதானம், சாந்தம், தைரியம், சுதந்தரம்.

அன்பு முதலிய சீரிய இலட்சியங்களை மனித சமுதாயம் மேற்கொண்டு வாழ அத்வைதம் ஒன்றே சிறந்த சாதனம். ஸ்ரீ சங்கராச்சாரியார் இயற்றிய நூல்கள் பல. அவற்றுள் "ஆத்மபோதம்" என்னும் பெயரிய சிறு நூல் அத்வைத சாதனைக்கு வேண்டிய கருத்துக்களை தெளிவு, இனிமை, பொருட்செறிவு கொண்டு தருகின்றது. ஆத்மபோதத்தின் தமிழ் மொழிபெயர்ப்பினை தமிழர் படித்துணர்ந்து பயன் பெறுக.



டாக்டர் ஆநந்தக் குமாரசுவாமி

## 10. தத்துவஞானி ஆநந்தக் குமாரசுவாமி

டாக்டர் ஆநந்தக் குமாரசுவாமியைப் போன்ற பல திறப் பெருமை வாய்ந்த ஒரு பெரியாரைப் பற்றி வாழ்த்துரை எழுதுவது சுலபமன்று. அவர் சமய ஞானி, பாஷா ஞானி, கலாவிசாரகர், தேச முன்னேற்றவாதி, ஆசிரியர், வித்தியாதத்துவ ஞானி, உபந்நியாசகர், எல்லாவற்றிற்கும் மேலாக இந்தியா இலங்கையின் தவப்புதல்வருமாவர். அவர் இந்தியாவின் கலைச்செல்வத்தை நிகரற்ற திறமையோடு எழுத்து வாயிலாகவும் பேச்சு வாயிலாகவும் எடுத்துக்காட்டி பொதுவாக உலகிற்கும் சிறப்பாக இந்தியாவிற்கும் பல வழிகளில் அரிய கலைத்தொண்டாற்றியிருக்கிறார், இந்தியாவின் கலைகள் யாவும் தர்ம, அர்த்த, காம, மோக்ஷ மெனும் நாலு புருஷார்த்தங்களையே குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றன என்று ஐயமற விளக்கியிருக்கிறார்.

உண்மையான ஹிந்து தத்துவ ஞானியெனவும் உத்தமரெனவும் அவரைப் பாவித்து எனது வாழ்த்துரையைத் தாழ்மையுடன் அவர்க்குச் சமர்ப்பிக்கிறேன்.

'தத்துவ ஞானத்திற்கு' (Philosopby) சமஸ்கிருத பதம் "தர்சனம்"; அதன் அர்த்தம் "பார்வை" அல்லது "பார்த்தலாகும்"; விரிவாகக் கூறுமிடத்து, கடவுளின் உண்மையைப் பார்க்க நம்மைத் தகுதியாக்குமொன்றினை தர்சன மென்ற பதத்தால் குறிக்கிறோம். நமது பண்டைய முனிவர்களைப் போன்று டாக்டரவர்களும் உண்மையை உணர்ந்த ஒரு பெரியாராவர். அவரின் இந்தப் பெருமையை "இந்து சமயமும் பௌத்த சமயமும்" என்ற பெயருடன் அவர் யெழுதிய பிரபல நூல்களொன்றின் வாயிலாக அறிகிறோம். இது அமெரிக்கா தலைநகரமாகிய நியூயார்க்கின் தத்துவ நூற் கழகத்தாரால் பிரசுரிக்கப்பட்டது.

இந் நூலானது டாக்டரவர்களின் நுண்ணிய நூலறிவை மட்டுமல்லாது அதற்கும்மேலான அவரது இயற்கையான தத்துவ சிருஷ்டியையும் நன்ருக விளக்குகிறது.

ஏனைய சிலரைப்போன்று புராதன ஹிந்து சமய உண்மைகளுக்கு நவீனப் பூச்சுக் கொடுத்து எடுத்து ரைக்க முயற்சியாது, ஹிந்து தத்துவ ஞானிகளின் ஐதீகப்படி மூல நூல்களையே ஆதாரமாகக் கொண்டு அவற்றை எடுத்துரைத்திருக்கிருர்.

கீழ் நாட்டினதும் மேல் நாட்டினதும் சமய தத்துவ நூல்களில் உள்ள ஆழ்ந்த ஆராய்ச்சியின் பயனுக, அவர் ஹிந்துக்களின் சனுதன தர்மமும், புத்தர்களின் அகாலிகோ தம்மோவும், மேனுட்டாரின் பிலோசோபியோ பெரென்னிஸும், பிளாட்டோவின் உபதேசங்களும், கிறிஸ்தவர்களின் சமய தத்துவங்களும், ஒரே மூலத்தினின்று பிறந்தனவென்றும், ஒரே உண்மையைச் சுட்டிக் காட்டுவனவென்றும் ஸ்தாபித்து, வேதாந்த வாக்கியமான "ஏகம் ஸத், விப்ரா பகுதா வதந்தி," அல்லது "உண்மை ஒன்று, அறிஞர்கள் பலவாருக அதைச் சொல்லுவர்" என்பதை நிருபித்துள்ளார்.

அவர் வெவ்வேறு தத்துவ சாஸ்திரங்களின் கோட்பாடுகளையும் ஒரே உண்மையைக் குறித்த பல்வகை வியாக்கியானங்களென்று கண்டுரைத்து, அவரது விரிந்த மனப்பான்மையைக் காட்டினதோடு, பின் வரும் பகவத்கீதோபதேசத்தை நிலைநாட்டியுளார்:—

**"எவ்வெவ்வகையில் மனிதர் என்னை வணங்கினும் அவ்வவ் வகையில் அவர்கள் விருப்பத்தை நான் தீர்ப்**

பேன், பார்த்தா! மனிதர் எல்லா மார்க்கங்களிலும் தொடர வேண்டுமென்பது என்னுடைய சங்கற்ப மாகும்.''

இந்தியாவில் முன்னே தோன்றினதும் இப்போது தோன்றினதுமான சமயக் கொள்கைகள் யாவும் பகவத் கீதையிற் பொதிந்திருக்கின்றன என்று அவர் சொல்லி யது அவரது தெளிந்த அறிவின் விளக்கத்திற்கு ஓர் அறி குறியாகும். இவ்வகையில், நமது சமய ஆசாரியார்கள் கூறுவதையே அவரும் கூறுகிறுர். மேலும், டாக்டரவர்கள், மேற்கூறிய நூலில், ஹிந்து இதிகாசங்களைப் பற்றிச் சொல்லுகையில் வேறு அநேகர்கள் சொல்வது போல் ''இதிகாசங்களும் வேதங்களும் சம்பந்தமற்றவை'' என்று சொல்லாது, தமது பரந்த ஒருமையுணர்வுடன் அவை ஒன்றற்கொன்று முரண்பட்டவை யல்லவென்றும், ஒரே உண்மையைப் பலவிதமாகச் சொல்லுவதொன்றே அவற்றி லுள்ள வித்தியாசமென்றும் சொல்லியுள்ளார்.

டாக்டரவர்கள் தமது கருத்துக்களைப் பொருத்தமா கவும், சுருக்கமாகவும், உயிர்ப்புடனும் எடுத்துச் சொல் லும் ஆற்றல் படைத்தவர். இதை விளக்குவதற்கு மேற் கூறிய ''இந்து சமயமும் பௌத்த சமயமும்'' என்ற நூலின் ''சமய தத்துவமும் தற்போதமும்'' என்ற அத்தியாயத் திலிருந்து ஓர் உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். அவர் சொல்வது பின் வருமாறு:- ''கடவுள் பேதமற்ற அடிப்படையானவர் (அத்வைதம்); அல்லது, சிலர் சொல் லுவது போல், பேதமற்றிருப்பினும் கடவுள் சம்பந்தங் களுடன் வர்ணிக்கப்படக் கூடியவர் (விசிஷ்டாத்வைதம்); கடவுளே நாம் எல்லாவற்றிற்கும் அடிப்படையான உண் மைப் பொருளென்றே நம் மனத்தாற் பாவிக்கக் கூடும்.

ஆனால் இந்த உண்மையானது தானாகவும், தற்பரிணாம மாகவும் இருக்கின்றது (த்வைதிபாவம்). ஆகவே, சமஷ்டி என்று சொல்லப்படுவதானது (கிருஷ்ட்ணம், பூர்ணம், பூமம்) உணர்விற் கெட்டியு மெட்டாமலும், குணத்தை யுடையதாகவும் குணமற்றதாகவுமிருக்கிறது (சகுணம், நிர்க்குணம்)". அதே நூலிலுள்ள பின் வரும் வாசகம் ராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், அவர்களுக்கிருந்ததைப் போன்ற தீர்க்க தரிசனம் டாக்ட ரவர்களிடமும் இருக்கிறதைக் காட்டுகிறது:— "கடவுள் எல்லாமாகி எங்கும் விகசித்த அபரத்தன்மையை யார் அறிகிறார்களோ அவர்கள் கடவுள் எல்லாவற்றிற்கும் மேலாகத் தானாகி நின்ற பரத் தன்மையையும் அறிவர்."

சங்கேதங்களின் உபயோகத்தைப்பற்றியும், முக்கிய மாகச் சிலர் வாயிலாகக் கண்டனத்திற்குட்பட்ட ஹிந்து சமய சங்கேதங்களைப் பற்றியும் டாக்டரவர்கள் பேசு கையில், "இவையெல்லாம் ரூபமற்ற அவ்வொன்றை அணுகுவதற்குச் சாதனங்கள்; அதுவாய் நாமாவதற்கு முன் இச் சங்கேதங்களெல்லாம் நீக்கப்படவேண்டும்" என்றும், வேதாந்த சம்பிரதாயத்தின்படி "கடவுளு டைய நாம ரூபங்களெல்லாவற்றுள்ளும், எல்லாத்வனிக ளுள்ளும், சூரியனாற் பிரதிபலிக்கப்படும் அண்டங் களின் நாதபூரிப்புமான "ஓம்" என்ற பீஜாக்ஷரமே சிறந்தது; தியானத்திற்கு உபகரணமாயிருப்பதில் (திவ் யாலம்பம்) உருவச் சிலைக்கும் செவிக்குப் புலனாகும் 'ஓம்' என்னும் அக்ஷரத்திற்கும் வித்தியாசமில்லை" என்றும் கூறுகிறார்.

தெய்வத்திற்குத் தன்னை முழுதும் அர்ப்பணமாக்கு வதைப்பற்றியும் ஜீவாத்மா பரமாத்மாவுடன் ஒன்றாவ தைப்பற்றியும் டாக்டரவர்கள் "வெளிமனிதன் உள்

மனிதனுக்கு அடங்குவதே 'தன்னடக்கம்' 'தன்னரசு' என்னும் பதங்களின் தாற்பரியம், இதற்கு நேர் மாருனது 'தற்பாராட்டு'" என்று அழகாகச் சொல்லுகிருர்.

டாக்டரவர்கள் வேதாந்தத்தின் தாற்பரியத்தை மிகத் தெளிவாகப் பின்வருமாறு கூறுகிருர்:— "சமய ஞானமும் தற்போதமும் ஒரு ஆராய்ச்சியேயாகும். 'நான் எது' என்னும் கேள்விக்கு 'அதுவே நீ' என்ற ஒரே விடை தானிருக்க முடியும். இந்தத் தத்துவத்தை இடையருு அனுஷ்டானத்திற்குக் கொண்டு வந்தால் அதை அநுபவப் பூர்வமாக உணரலாம். இந்த சாக்ஷாத் காரத்தினுல் தன்-னைக் கட்டுப்படுத்திய 'தான்' தன்னை விடுவித்து, அதனுல் இறப்பை வென்ற பூர்ணத்வத்தை எய்தலாம் (ஜீவன் முக்த ந புநர் ம்ரியதே)."

குறிப்பு:- மகாமேதை ஆனந்தக் குமாரசுவாமி அவர்களுக்கு உலகப்பேரறிஞர் பலர் வாழ்த்துரைகள் வழங்கியுள்ளார்கள், அவைகளில் ஒன்று என்னுல் வழங்கப் பட்டது. அதன் மொழி பெயர்ப்பே இது. மொழி பெயர்ப்பு திரு. எஸ். மார்ட்டின் அவர்களால் செய்யப் பட்டது. வாழ்த்துரைகள் அனைத்தையும் தொகுத்து Homage to Dr. Ananda Coomara Swamy என்ற நூலாக Kuantan ஸ்ரீ ச. துரைராஜ சிங்கம் வெளியிட்டிருக்கிருர்.

# 11. ஸூபி மன்சூர் ஞானி

(தமிழ் நேசன் 26–12–1948)

**ம**ன்சூர் சுமார் 400 வருஷங்களுக்கு முன்னர் பக்தாத்கலிப் ஹரூன்–அல்–ரஷித் காலத்தில் வசித்தவர். இவரை 'பக்தாத் ஞானி'' என்று சொல்வதும் உண்டு. அவர் ஏழை. ஆனால் அறநெறியாளர். பெரிய பக்திமான்; ஒரு முஸ்லிம் பக்கிர் (சாது); தீவிர தியானத்தினால் கடவுளைப் பலவாருகத் தரிசித்தவர். பரமாத்மீக உணர்ச்சி பெற்றவர். பரஞ்ஜோதி அவரை ஆட்கொண்டது. ஆத்ம போதம் பெற்றவர். ''அனல் ஹக்'' (நானே பிரம்மம்; சிவோஹம்) என்ற சித்தாந்தத்தை உலகுக்குப் போதித்தார். செல்லும் வாயெலாம் ''அனல் ஹக்'' என்பார். முஸ்லிம்கள் அவரை அவிசுவாசி அல்லது கவ்பிர் என்றனர்; போலி என்றனர்.

மன்சூர் உத்தமமானபடியினால் மௌல்விகள் அவரைத் திருத்த முயன்றனர்; ஆனால் மன்சூர் தன் சித்தாந்தத்தை விட்டுக்கொடுக்க வில்லை. ஆகவே மன்சூரை தூக்குத்தண்டனை செய்ய மௌல்விகள் கட்டளையிட்டனர். அவரின் கை கால்கள் ஒரு தூணுடன் கட்டப்பட்டன. மீண்டும் அவர் தம் சித்தாந்தத்தை விட்டு விடும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார். ஆனால் அவர் அசையவில்லை. முதல் அவர் விரல்கள் வெட்டப்பட்டன. மன்சூர் புன்சிரிப்புடன் ''அனல் ஹக்'' என்றார். பிறகு அவரது கண் விழிகள் தோண்டப்பட்டன. ஆனால் மன்சூர் முறுவலுடன் ''அனல் ஹக்'' என்றே சொன்னார். பிறகு அவரது கைகள் துண்டிக்கப்பட்டன. நடப்பவைகளைப் பார்த்தவர்கள் வருத்தங்கொண்டு

மன்சூரைக் காக்கும்படி மௌல்விகளிடம் கோரிக்கை செய்தார்கள். லட்சக்கணக்கான ஜனங்கள் "அனல் ஹக்" என்றார்கள். மன்சூர் பெருந் திருப்தி அடைந்தார். அவர் சிரச்சேதம் செய்யப்பட்டபின் அவரது முண்டத்திலிருந்து பாய்ந்த இரத்தமும் "அனல் ஹக்" என்றது.

இச் சந்தர்ப்பத்திலே மௌல்விகள் தம் தவறை உணர்ந்தார்கள். தாம் ஒரு ஞானியைச் சித்திரவதை செய்து கொன்றதை நினைந்து வருத்தினார்கள். தனது சித்தாந்தத்திற்கு மன்சூர் ஈந்த விலை தனது உயிரே; ஆயினும் அவரது "அனல் ஹக்" என்ற சத்தியவாக்கு இன்றும் உலகில் நிலவுகிறது. இவரது மாண்பை தெரிந்திருக்காத ஒரு முஸ்லிமும் கிடையா. இம் மகாத்மாவின் உடல் சித்திரவதைக்கு ஆட்பட்டிருந்த போதிலும் அவர் தனது உறுதிப்பாட்டைப் பிறருக்காக விட்டுக்கொடுக்கவில்லை.

இன்றைக்கு மன்சூர் எல்லாருடைய உள்ளத்திலும் குடி கொண்டுவிட்டார். மன்சூரைப் போன்ற ஒரு மகாத்மாவை சரித்திரத்தில் காண இயலாது.

மன்சூர் மகாஞானியின் கீர்த்தி என்றென்றும் ஓங்குக.

# 12. மனிதகுல மாணிக்கம்

## பண்டித நேருவின் 60-வது ஜயந்தி விழாப் பேச்சு

(தமிழ் நேசன் 14–11–1948)

"உலகின் ஒற்றுமைக்கும் சகோதரத்துவத்துக்கும் வழிகாட்டியாக இருந்து வருகிறது நமது பாரத நாடு. இத்தத்துவங்களே இந்தியாவின் உயிர்நாடி. இதை இப்பொழுது புனருத்தாரணம் செய்து வருகிறார் மனிதகுல மாணிக்கம் பண்டித நேரு.

"ஒரே உலகம், ஒரே சர்க்கார், ஒரே சமுதாயம் என்று நமது பிரதம மந்திரி இன்று காணும் கனவு விரைவில் நனவாகிவிடும்.

"இதற்கு அனுசரணையாக அந்த உணர்ச்சி உலக மக்களின் உள்ளத்தில்தான் பிறக்க வேண்டுமே யொழிய புறம்பிலேயல்ல"

இவ்வாறு இன்று மாலை ஸ்தல கிஷன் தயாள் பள்ளி மண்டபத்தில் கொண்டாடப்பட்ட பண்டித நேருவின் 60 வது பிறந்த தின விழாக் கூட்டத்தில் பேசுகையில் ஸ்வாமி சத்யானந்த பாரதி கூறினார்.

பிரிக்பீல்ட்ஸ் பங்ஸார் ரோடு ஸ்தல இந்தியர் காங்கிரஸ் ஆதரவில் ஷ பொதுக்கூட்டம் இன்று மாலை 4–30 மணிக்கு ஸ்வாமிஜி தலைமையில் ஆரம்பமானது. கூட்டத்திற்கு ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் பெருவாரியாக விஜயம் தந்திருந்தனர்.

தேசிய கீதம் பாடப்பட்டதைத் தொடர்ந்து, மகாத்மா காந்திஜியின் ஆத்மா சாந்தியடைய கூட்டத்

தினர் அனைவரும் இரண்டு நிமிஷம் மௌனப் பிரார்த்தனை செய்தனர். அதன் பின் ஸ்வாமிஜி பண்டித நேருவின் திரு உருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேசினர்.

அவரது சொற்பொழிவின் சாரம் வருமாறு:—

உலக ஜோதியாய் விளங்கி வந்த காந்தி மகாத்மாவின் பூதவுடல் இன்று நம்மிடையே இல்லை என்றாலும் அவருடைய ஆத்மீக சிஷ்யர் பண்டித நேரு நமது நாட்டைச் சிறந்த வழியில் காந்திஜீயின் தத்துவத்தின் அடிப்படையில் நடத்திச் செல்கிறார்.

**உலகமே மெச்சுகிறது.**

பண்டித நேரு அரசியல் திருஷ்டியுடையவர்; சர்வதேசீய ஞானம் உள்ளவர். இதனால்தான் இன்று அவரை உலக மக்கள் மெச்சுகின்றனர். சர்வதேச அரங்கில் அவருக்கு முதல் ஸ்தானம் அளிக்கப்படுகிறது.

**தியாக மூர்த்திகள்.**

ராஜநீதி, சத்யம், அஹிம்சை இவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர் நம்மை நல்வழியில் நடத்திச் செல்கிறார். சூழ்ச்சி, பொய், சுரண்டல், அடிமைத்தனம் இவற்றை அவர் அடியுடன் வெறுக்கிறார். உயர்தர தேசீயவாதியான அவர் உலக, சர்வதேச கலாச்சார ஞானி.

ராஜபோகத்தில் பிறந்து வளர்ந்த போதிலும் அவர் அனைத்தையும் நாட்டின் சுதந்திரத்திற்காக, முன்னேற்றத்திற்காகத் தியாகம் செய்த சீலர். ஏன்?

அவரது குடும்பத்தினர் எல்லோருமே தியாகமூர்த்திகள் தான்.

ஐக்கிய நாடு பொது அஸம்பிளியில் அவர் சமீபத்தில் நிகழ்த்திய சொற்பொழிவை நாம் பத்திரிகைகளில் படித்திருப்போம், அதிலிருந்து அவருடைய உண்மை லக்ஷியம் நன்கு விளங்குகிறது. உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் நாடும், தேசமும், சுதந்திரமாக வாழ வேண்டும் என்ருர். சமாதானத்துக்காக இன்று உலகம் அவரையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது என்று கூறுவது மிகையாகாது.

பண்டித நேரு இன்று ஆசியாவின் முன்னேற்றத்திற்காக, சுதந்திரத்திற்காக, ஐக்கியத்துக்காக அரும்பாடு பட்டு வருகிருர். 'காலனி ஆட்சி முறை' என்ற வார்த்தையை உலக அகராதியிலிருந்து எடுத்துவிட வேண்டுமென்று திட உறுதியுடன் அவர் போராடுகிருர்.

அவரது வாழ்க்கை நமக்கு ஒரு வழிகாட்டியாக இருக்கிறது. அவர் பேசுவதிலும் எழுதுவதிலும் திறமை வாய்ந்தவர். ஜான் காந்தர் என்ற அமெரிக்கர் தனது புத்தகமாகிய "இன்ஸைட் ஏஷியா" வில் எழுதுகிருர்: "ஆங்கில பாஷையில் எழுதுவதிலும் பேசுவதிலும் உலகில் தலைசிறந்து விளங்கும் மனிதர்களில் இவரும் ஒருவர்."

**ஆசியாவின் பண்பாடு ஆத்மீகம்.** இதில்தான் நமது செயல்கள் இயங்கவேண்டும். இதனுல்தான் நாம் உலக மக்களின் கவனத்தைப் பெறமுடியும். அஹிம்சை, சத்யம், இவையே அதற்குரிய ஆயுதங்கள்.

பண்டித ஜவாஹர்லால் நேருவின் 60 வது பிறந்த தினமாகிய இன்று காந்தி மகாத்மாவின் தத்துவங்களை நமது லக்ஷியமாகக்கொண்டு வாழ்வோம் என திடசங்கல்பம் செய்து கொள்வோமாக! பண்டித நேரு பல்லாண்டு வாழ்க!!

---



சுவாமி சத்தியானந்தாவும் நேதாஜியும்
(ஒரு குரூப் போட்டோவிலிருந்து எடுக்கப்பட்டது)

# 13 இந்திய தரும ராஜ்யம்

(தமிழ் நேசன் 15–8–1947)

[சுவாமி சத்தியானந்தாவை மலாயா இந்தியர்கள் நன்கு அறிவர். தமிழிலும், சமஸ்கிருதத்திலும், ஆங்கிலத்திலும் சுவாமி உயரிய பண்புடையவர். மேலும் ஒரு சமரச சன்மார்க்க ஞானி, நேதாஜி சுபாஷ் சந்திர போசின் அந்தரங்க மதிப்புக்குப் பாத்திரமானவர். நேதாஜியை நினைத்து நமது சுதந்திர மலருக்கு விசேஷமாக இக் கட்டுரையை வழங்கி யுள்ளார்.] ஆ–ர்.

—தமிழ் நேசன்.

**உலக வரலாற்றில் ஆகஸ்ட் 15-ந்தேதி முக்கிய விடம்** பெறும். இந்தியாவுக்கு மாத்திரமின்றி ஆசியாக் கண்டத்திற்கும் பொதுவாகக் கூறுமிடத்து உலகிற்கும் இந்நாள் நன்னாளாகும். காரணம், தொன்மைச் சீருஞ் சிறப்பும் ஆத்மீகப் பண்பும் வாய்ந்த ஒரு தேசம் தன் சுயேச்சையைப் பல நூற்றாண்டுகளாக விழந்திருந்து, பல்லாண்டு போராடி அளப்பருந் தியாகங்கள் புரிந்து மீண்டும் தனது உரிமையைப் பெற்ற நாளே இந்நாள். உலக மக்களனைவருக்கும் வானொளி பரப்பும் திவ்விய தினமே இது.

**இறைவனை வழுத்துவோம்**

**விக்கிரம கீர்த்தி நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்** அவர்களின் தலைமையில் கிழக்காசியாவிலே நடந்த இந்திய சுதந்தர இயக்கத்தில் கடுகளவேனும் தொண்டாற்றி யிருக்கும் பாக்கியத்தினைப் பெற்ற யாவருக்கும் இந்நாள் பெருமித உணர்ச்சியை உண்டுபண்ணு மென்

பதில் சங்கேத மில்லை. சுதந்திர இந்திய சேனை பர்மா போர் முனையிலிருந்து பின் வாங்கியவுடன் வரைந்துள்ள கடித மொன்றில் "நாம் வெல்வோம்; இந்தியா சுதந்திரம் பெறுவது நிச்சயம்" என்று தீர்க்க தரிசனத்துடன் அம்மகான் கூறியது இன்று பலிதமாகி விட்டது. இந்தியா-பர்மா எல்லையில் உயிர்த் தியாகஞ் செய்த வீரர்களை இப்புனித நாளன்று மனமாரப் போற்றுவோமாக. அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வழுத்துவோமாக. நமது நேதாஜீயின் ஆக்ஞையைச் சிரமேற் கொண்டு நாட்டின் சுதந்திரத்துக் காகப் பலப் பல தியாகஞ் செய்த ஆடவர், பெண்டிர் சிறுவர் சகலரையும் போற்றுவோமாக.

நேதாஜி **"ஜய் ஹிந்த்"** மந்திரக் கோஷத்தினை நம் மக்களுக்கு உபதேசித்தார். அம்மந்திரத்தின் பலனை இன்று நாம் பெறுகின்றோம். அவர் ஒரு பெரிய அரசியல் வாதி; பெருந் தேசபக்தர்; திறல் படைத்த போர்வீரன் என்பவற்றைச் சகலரும் அறிவர். **நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ஒரு உண்மை ஆத்மீக ஞானி, யோகானுஷ் டிகர் என்பதைச் சிலரே அறிவர்.** இந்துஸ்தானத்தின் உயிர் நாடி ஆத்மீகம் என்பது உலகிற்குத் தெரிந்ததே. நேதாஜியின் ஆதர்சங்களில் மிகச் சிறப்பானது ஒன் றுண்டு. அது "இந்தியா சுதந்திரம் பெற்றால் அதன் உயிர் நாடி மறுமலர்ச்சி பெற ஏதுவாகும். அத்தகைய மறுமலர்ச்சியின் பொருட்டு ஆசியாவும் பொதுவாகக் கூறுமிடத்து உலக மக்கள் யாவரும் புனருத்தாரணம் பெறுவர்" என்பதாகும். இக்கருத்து அவரிடம் இடை யறாது குடிகொண்டிருந்தது.

**இந்தியாவின் ஆத்ம சம்பத்து.**

சில தினங்களுக்கு முன்னர் இந்துஸ்தானத்தின் துவஜ சம்பந்தமாகப் பேசுங்கால் **பண்டித ஜவாஹர்லால் நேரு** அவர்கள் "ஆத்ம சம்பத்து, மானசீக சம்பத்து இவைகளே ஒரு மனிதன் வாழ்க்கையையும் ஒரு சமுதாயத்தின் வாழ்க்கையையும் உய்விக்கின்றன. புராதனத்தையுடைய இந்தியா ஆத்மீக சம்பத்தினுலேயே இன்றும் உயிருடனிருக்கின்றது. பல்லாயிரம் ஆண்டுகளாக இவ்வித ஆதர்சங்களுடன் இந்தியா சம்பந்தமில்லாதிருந்திருந்தால் அஃது எங்ஙனம் உயிர் வாழ்ந்திருக்கக்கூடும்? இந்தியாவுக்கு விளைந்த பிரம்மாண்டமான அல்லல்களுக்கும் தாழ்வுக்கு மிடையே இன்றைக்கு இந்தியா தலை நிமிர்ந்து நிற்கின்ற தென்றுல் அது நம் ஆத்ம சம்பத்தினுலேயே" என்றுள்ளார்.

**தருமச் சக்கரம்.**

இன்றைக்கு இந்து ரிஷிகளின் வாய்க் கருவியாக விளங்கும் பேராசிரியர் **சர் ராதா கிருஷ்ணன்** "அசோக சக்ரவர்த்தியின் தருமச் சக்ரம் நமது துவஜத்தில் அமைகிறது. நமது தேசிய அரசாங்கத்துக்கு அத் தருமச் சக்கரத்தின் தாத்பரியங்களே வழிகாட்டியாக இருக்கும்" என்று கூறியிருப்பது போற்றத் தக்கது; சிந்திக்கத் தக்கது; அனுசரிக்கத் தக்கது.

**இந்து தேசத்தின் நாகரீகமும், கலாச்சாரமும், ஆத்மார்த்த சுபாவத்தை உடையன வென்பது வெள்ளிடைமலை.** பல தேசங்களின் சரித்திரத்தைக் கற்குங்கால் ஒரு உண்மை நமக்குப் புலனுகிறது. அஃதாவது, ஒவ்வொரு சமுதாயமும் யாதேனும் ஒரு குறிக்கோளைக் கொண்டே

தன்னைத்தான் அமைத்துக் கொண்டிருப்பதே. சிலவற்றிற்கு அக்குறிக்கோள் அரசியலாகலாம்; வேறு சிலவற்றிற்கு அது வர்த்தகமாகலாம்; இன்னும் பிறவற்றிற்கு அது விஞ்ஞானமாகலாம். ஆனால் இந்து சமுதாயத்திற்கோ தொன்று தொட்டு பாரமார்த்திகமே குறிக்கோளாக இருந்து வருகிறது. அதனை அடிப்படையாகக் கொண்டே சரித்திர வரையறைக்கப்பாலான தொன்மைத் தமிழ் நாகரீகமும், பிறகுண்டான மொஹெஞ்சோதாரோ, ஹரப்பா நாகரிகமும், வேதகால நாகரிகமும், பௌத்தகால நாகரிகமும் பிற்காலத்திய சிறப்பு வாய்ந்த இந்து நாகரிகமும் அமைந்துள்ளன.

**கலாச்சார தீபம்.**

பண்டைக் காலத்தில் ஏனைய நாட்டவர்க்குப் பாரத வர்ஷம் நாகரிக கலாச்சார தீபமாக விளங்கிற்று. சமீப காலத்தில் ஏற்படலான இருளடைந்த நாட்களிலுங்கூட இந்து தேசத்தின் இறவா உயிர்நாடியானது குரு நானக்கர், குரு கோவிந்தர், ஸ்ரீ விஜய நகர மன்னர்கள், சிவாஜி முதலியோராலும், பிறகு விவேகாநந்தர், இராமகிருஷ்ணர், தயானந்த சரஸ்வதி, இராமலிங்க சுவாமிகள், சுப்பிரமணிய பாரதியார் இத்தகையோராலும், பின்னர் ஸ்ரீ ரமண மகரிஷி, ஸ்ரீ அரவிந்தர், யோகி சுத்தானந்த பாரதி, மகாத்மா காந்தி இன்னையவர்களினாலும், பேராசிரியர்கள் சர் ஜகதீச சந்திர போஸ், சர் சி. வி. ராமன், டாக்டர் ரவீந்திரநாத் தாகூர், சர் ராதாகிருஷ்ணன் முதலியோராலும் துலங்கிக் கொண்டிருக்கிறது.

எனவே இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் 15-ந் தேதி-முதல் பிறக்கும் சுதந்திர இந்துஸ்தானம் தனது தொன்

மைக் குறிக்கோளுக்கொப்ப தன்னகத்தே ஒரு தரும ராஜ்யத்தை அமைத்துக் கொள்வது மட்டுமின்றி சர்வ தேச வட்டாரங்களில் நியாய நீதி, சமாதானம், சகோதரத்வம் சுபீட்சம் முதலிய இலட்சியங்களுக்கு உறுதுணையாக விளங்குமென்பது உறுதி.

"அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்—நின்றது மன்னவன் கோல்". (குறள்)

---

## 14. சக்திக் கவி பாரதியார்

(ஜனநாயகம் 11–9–1948)

"என்னிடத்தே சக்தி எனதுயிரிலும் உள்ளத்திலும் நிற்கின்ருள். இப்போது என்னுள்ளே சக்தி கொலு வீற்றிருக்கிருள். அவள் நீடூழி வாழ்க" என்று சுப்பிரமணிய பாரதியார் கூறுவதுண்டு. அவர் அன்னை பராசக்தியின் அருளைப் பெற்றிருந்தார். அவர் பெருமையெல்லாம் அப்பேற்றின் பொருட்டேயாம்.

"நின்னைச் சில வரங்கள் கேட்பேன்—அவை
நேரே யின்றெனக்குத் தருவாய்"
"தோளை வலியுடைய தாக்கி—உடற்
சோர்வும் பிணி பலவும் போக்கி—அரி
வாளைக் கொண்டு பிளந்தாலும்—கட்டு
மாரு உடலுறுதி தந்து சுடர்
நாளைக் கண்டதோர் மலர்போல்—ஒளி
நண்ணித் திகழு முகந்தந்து—மத
வேளை வெல்லு முறைகூறித்—தவ
மேன்மை கொடுத்தருள்ல் வேண்டும்."

இது அவர் பராசக்தியிடம் கேட்டுக் கொண்ட வீர வரம். **சக்தியின் வரப் பேற்றை அவர் எவ்வாறு பெற்ருர் என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.**

1906-ம் ஆண்டு கல்கத்தாவில் தாதாபாய் நௌரோஜி தலைமையில் இந்திய தேசீய காங்கிரஸ் சபை கூடியது. அதற்கு பாரதி சென்றிருந்தார். அக்காலமே வங்காளப் பிரிவினை நடந்துள்ளது. சுயராஜ்ய சேவைக்குத்

தன்னைப் பலிதான மாக்கிக் கொள்வதென அக்காங்கிரஸ் கூட்டத்திலேயே திட சங்கல்பம் செய்து கொண்டார் பாரதி. அவ்வேளையில் சகோதரி நிவேதிதா தேவியைச் சந்தித்தார் நமது கவி. சகோதரி நிவேதிதை ஆங்கிலப் பெண்மணி, அவரின் முன்னைய பெயர் மிஸ் மார்கரெட் நோபிள். அவர் வேதாந்த கேசரி விவேகானந்தரின் சிஷ்யை. பாரத மாதாவின் தொண்டுக்கே தன்னை அர்ப்பணித்தவள், தீவிரமாக தேச சமுதாய சேவைகளில் ஈடு படும்படி அவள் பலரை ஊக்கி விட்டாள். பாரதியார் சகோதரி நிவேதிதா தேவியைத் தன் குருவாக ஏற்றார். அப்போது அவருக்கு வயது 24. நிவேதிதை பாரதியாருக்கு மூன்று கொள்கைகளை உபதேசித்தார். ஒன்று, தேச பக்தி செய், இரண்டாவது சாதி மத பேதமில்லாமல் சமரசங் கொள், மூன்ருவது, ஆண் பெண் நிகரெனப் போற்று.

இத் தீக்ஷை பெற்றபின் பாரதி பதினைந்தாண்டுகளே பூவுலகில் வாழ்ந்தார்.

அப் பதினைந்தாண்டுகளும் தன் குருதேவியின் உபதேசங்களை ஒல்லும் வகையில் நிறைவேற்றினர். நிவேதிதா பாய்ச்சிய கனலே பாரதியாரை சக்திக் கவியாக்கியது. அவரின் சொற்கள் ஒவ்வொன்றிலும் வீரம், ஆற்றல், விழிப்பு, சுதந்திரம் அன்பு ததும்புகின்றன. தமிழ் நாட்டைத் தட்டி எழுப்பி தமிழ் சமுதாயத்தின் நரம்பு நாளங்களில் வீறேற்றியவர் பாரதியார். பாரதியாரை நினைக்கையிலே எங்களுள்ளத்திலே வீர வெள்ளம் பெருகிறது; வாடித் தவிக்கும் தமிழுக்கு வான்மழை இரங்கினர், இன்னலைப் பிளந்து "அச்சமில்லை" என்ற விடுதலை ஆவேசத்தைக் கிளப்பினர்; பெண்கள் தலைநிமிர ஜெய

பேரிகை கொட்டினர்; மாந்த ரெல்லாரும் ஒரு குலமென்று சமதர்மம் போதித்தார்; உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய் என்ருர்; மெய்மை கொண்ட நூலையே அன்போடு வேதமென்று போற்று என்ருர்.

அவர் வாழ்நாளெல்லாம் எங்கும் பராசக்தியையே கண்டார். இடர்ப்பட்டும் தான் போதித்த வண்ணமே-தான் ஜீவித்தார். இன்றைய தமிழருக்கு பாரதியே வழிகாட்டி. அவர் வழி நிற்றல் தமிழர் கடனுகும்.

ஓம் சக்தி ஓம்.




யோகி சுத்தானந்தர்.

# 15. முனிவர் சுத்தானந்தர் இயல்பு

(தர்மா ஜூன் 1952)

பிரவிர்த்தி மார்க்கம், நிவிர்த்தி மார்க்கம் என இருவிதமான வாழ்க்கை வழிகளைப்பற்றி சமய சாஸ்திரங்கள் பேசுகின்றன. முதலாவதானது லௌகீகவழி; இரண்டாவதானது ஆத்மீக வழி. ஏசு பெருமான் இவ்விரு வழிகளையும் முறையே "அகலமானதும்", "குறுகியதும்" என வருணித்தார்.

ஆத்மீக வழி முனிவருக்கு உரியது. இறை அரசை அடைவதற்கு ஒருவர் குழந்தை உள்ளம் உடையவராக இருத்தல் வேண்டுமென அம்மார்க்கம் வற்புறுத்துகின்றது. குழந்தையின் எளிமை, தூய்மை, களங்கமின்மை இவைகளே ஒரு முனிவரின் வாழ்க்கைக்கு இன்றியமையாத குணகுணங்கள்.

ஆத்மீக வாழ்க்கையுடைய முனிவர் பரத்துக்காக யாவற்றையும் தியாகம் செய்கின்றார்; தன்னைத்தான் தூய்மைப் படுத்துகிறார். இறுதியாகத் தன் உயிருக் குயிராக நிற்கும் பொருளை உணருகிறார்.

ஞானி உலக வழியில் செல்பவருடன் அநேகமாக ஒத்துப் போவதில்லை. காரணம், உலக மக்கள் வழி வேறு; அவர் வழி வேறு.

ஒரு குழந்தையானது எவ்வண்ணம் தன் தேவைகளுக் கெல்லாம் தன் தாயையே எதிர்பார்த்துக் கவலையற்றிருக்கிறதோ அங்ஙனமே ஒரு ஞானியும் எல்லாக் கவலைகளையும் சஞ்சலங்களையும் விட்டு விட்டு இறைவனே சரணாகதி என்று வாழ்வதில் இன்பம் பெறுகின்

ளுர். சரண் அடைவதாலும் இறைவனிலேயே முழுமை யும் லயித்திருப்பதனுலும் அவர் பேரானந்தத்தை அனுப விக்கிருர்; இதனுல் தன் சூழ்நிலைகளையும் உடல் தேவை களையும் மறந்து இருப்பதுண்டு; அவரிடம் சம்பிரதாயமோ அல்லது கௌரவ மனப்பான்மையோ இருப்பதில்லை; அவருடைய வேண்டுதல்களும் விருப்புக்களும் மிகவும் சொற்பமானவையே.

ஒரு முனிவர் பேச்சாளியாக இருத்தல் வேண்டிய தில்லை; அவர் பண்டிதராக இருக்கவேண்டியதில்லை; ஆயினும் தன்னுடைய தூய்மை, எளிமை, ஆத்மீகம் இவைகளைக் கொண்டு பக்குவமுள்ள ஆத்மாக்களை ஆத் மீக வாழ்க்கையும், நிவேதன வாழ்க்கையும் நடாத்தச் செய்கின்ருர். எனவே ஒரு ஞானியின் அளவை அவ ரது வாழ்க்கையே; அது திக்கற்ற ஆத்மாக்களுக்கு வழி காட்டியாக இருக்கிறது.

இன்னும், ஞானியின் கருத்துக்களெல்லாம் மூலப் பூர்வமானவை; அவரது போதனைகளெல்லாம் தனது ஆத்மீக வாழ்க்கையின் அனுபவங்களை அஸ்திவாரமாகக் கொண்டவை. அவரது வாக்கியங்களும், வியாசங்களும் புதுத்தன்மை யானவை.

மேலே நாம் விளக்கிய ஞானி ஒருவர்தான் இன்று நம்மிடையே உள்ள யோகி சுத்தானந்த பாரதி. அவர் ஒரு பண்டிதர், கவிஞர், பலபாஷா சம்பன்னர். ஆனுல் இவைகளுக்கு மேலாக அவர் தூய்மையும் எளிமையும் நிறைந்த முனிவர்.

மலாய் நாட்டிலே இரு மாதங்கள் சுற்றுப் பிரயா ணஞ் செய்து பல சமூகத்தாரையும், வர்க்கத்தாரையும்

கொண்ட நிறை கூட்டங்களில் பேசினார்; உயரிய அதிகாரிகளையும் சாதாரணத் தொழிலாளிகளையும் சந்தித்தார். நூற்றுக் கணக்கான ஆண் பெண்களுடைய ஆத்மீக உணர்ச்சியை எழுப்பினார்.

இம்முனிவரது வாழ்க்கையும் சுவிசேஷமும் நமது ஆத்மீக முன்னேற்றத்திற்கு ஒரு தீபஸ்தம்பம் போன்று இருக்கட்டும்.

ஓம் சுத்த சக்தி.

## 16. சீன முனிவர் லா-வொத்ஸு

(சீனு சங்க வருஷிகை 1952)

ஆசியாவின் சரித்திரத்திலே கி. மு. 6-வது நூற்ருண்டு மிகவும் பிரசித்தி பெற்றது: ஏனென்ருல் அப்பொழுதுதான் ஆசியாவின் நான்கு பெரிய தீர்க்கதரிசிகள் தோன்றி யிருந்தார்கள். ஒருவர் பாரசீகத்தில் பிறந்த ஜொரோ-ஆஸ்தர்; மற்றையவர் பாரத தேசத்து கௌதம புத்தர்; மூன்ருவதானவரும், நான்காவதானவரும் முறையே லா-வொத்ஸு, கொங் புத்ஸு எனும் சீன மகான்களாகும்; கொங் புத்ஸு பிறப்பதற்கு 50-ஆண்டுகளுக்கு முன்னர் லா-வொத்ஸு பிறந்தாரென்ருலும் இருவரும் சமகாலத்திலேயே வாழ்ந்தார்கள்.

இந்நான்கு பெரியார்களும் தத்தம் பாரம்பரீகத்துப் பண்பாடுகளின் நிறைவாகவே விளங்கினுர்கள். அவர்கள் அறத்தாறு நின்று அறனை வலியுறுத்தியவர்கள்; உலகங் கண்டிராத நுண்மாண் நுழை புலனுடையவர்கள். இம்மகாத்மாக்கள் நால்வரும் மன்பதையின் நாகரீகத்திலும் சிந்தனையிலும் தங்கள் அழியா முத்திரையைப் பொறித்துள்ளனர்.

லா-வொத்ஸு கி. மு. 604:ல் ச்சௌ அரச பரம்பரையைச் சேர்ந்த திங்-வாங் சக்கரவர்த்தியின் 3-வது ஆட்சி ஆண்டிலே ச்சு-ஜிரென் என்ற கிராமத்திலே லீ நாட்டிலே பிறந்தார். லீ நாடு தற்போதைய ஹோனுன் மாகாணமாகும்.

லா-வொத்ஸு என்ருல் சீன மொழியிலே “முதிர்ந்த பிள்ளை”, அல்லது “அறிஞர்”, அல்லது “தத்துவ சாஸ்திரி” என்று அர்த்தம் பெறும். லா-வொத்ஸு

இளம் பிராயத்திலேயே அரசாங்க புத்தகசாலையிலே சரித்திர ஆசிரியராகவும், அரசாங்க ரகசிய நூல்களின் பொறுப்பாளராகவும் வேலைபார்த்து வந்தார். அப்பொழுது தன் நேரத்தின் பெரும் பாகத்தைப் பரம்பொருளின் அருளைத்தன்னிடம் வளர்ப்பதிலேயே உபயோகித்தார் (பரம்பொருளின் அருளை ஒருவர் தன்னிடம் வளர்ப்பதென்று சொல்வது சீனர் மரபு). எளிய தூயவாழ்க்கை வாழ்ந்தார். தன்னுடைய ஆத்மீக சாதனைகள் பிறருக்குத் தெரியாமலிருக்க வேண்டும் என்பதில் கருத்தாக இருந்தார். பிறகு அரசாங்கத்தின் தேய்வைக் கண்டு மனமுடைந்து உலக வியவகாரங்களினின்று தன்னை விடுவித்துக் கொண்டு ஹிஸியன்—கு என்ற மலைக் கணவாயைக் கடந்து மேற்கே சென்று பரமகதி அடைந்தார்.

லா-வொத்ஸூ கணவாயைக் கடக்குந் தறுவாயில் அங்கிருந்த யிங் ஹி ஸி என்ற காவலாளி அவரைப் பார்த்து "ஐயா! தாங்கள் அடங்கப்போகிறீர்கள். அதற்கு முன்பு ஒரு நூலை ஆக்கித் தாருங்கள்" என்று பணிந்தான். இக்கோரிக்கைக் கொவ்வ 5000-த்துக்கு மேலான சீன அக்ஷரங்கள் கொண்ட இரு பாகங்களடங்கிய ஒரு நூலை ஞானி எழுதினார். அந்நூலின் பெயர் தாவோ—தே—கிங் என்பதாகும். இப்பெயர் கி. மு. 156 மட்டில் சீனுவை ஆண்ட ஹன் அரச வழியைச் சேர்ந்த ச்சிங் சக்கரவர்த்தியினுல் அந்நூலுக்கு வழங்கப்பட்டது. "தாவோ" என்ருல் "பரம்பொருள்", "தே" என்ருல் "குணம்". "கிங்" என்ருல் "திருமுறை" அல்லது "திவ்விய நூல்".

லா-வொத்ஸூ போதித்த மார்க்கத்தை தாவோ மார்க்கமென்று புலவர் சொல்வர். அதன் சித்தாந்தம் கி. மு. 300 அளவிலே சுவாங்ஸூ என்ற இன்னுமொரு

தாவோ சமய ஞானியால் விசாலமாக்கப்பட்டு சீனுவின் பலபாகத்திலும் பிரசாரம் செய்யப்பட்டது.

சுவாங் ஸுவைப் போன்ற சிந்தனையாளருக்கு ஒப்பார் காண்பதரிதென்றே ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இவரைச் சீனுவின் சங்கரர் என்று சொல்லலாம்.

கொங் புத்ஸுவின் சித்தாந்தமும் லா-வொத்ஸுவின் சித்தாந்தமும ஒன்றுக்கொன்று நேர்மாருனவை. நல்லரசு, நற்பழக்க வழக்கங்கள் சான்ருண்மை இவைகளே கொங் புத்ஸுவின் இலட்சியங்கள். மனத்துக்கண் மாசிலஞதலாகி தன்னைத்திருத்தி பரம்பொருளை அடைதலே லா-வொத்ஸுவின் இலட்சியங்கள். கொங் புத்ஸு அரசர்கள் தலைவர்கள் ஆகியோரின் ஆதரவையும் மதிப்பையும் நாடினுர் லா-வொத்ஸு அவைகளைத் துச்சமாகக் கருதினுர்; கொங்புத்ஸு புறப்பழக்க வழக்கங்களையும் ஒழுக்கத்தையும் சீர்திருத்த முயன்ருர்; ஆனுல் லா-வொத்ஸு உள்மனிதனைத்திருத்திப் புனிதப்படுத்தி பேரின்பப் பெருவாழ்வு அடையத்தூண்டினுர்.

''பிறர் உனக்குச் செய்ய விரும்பாததை நீ பிறர்க்குச் செய்யாதே'' என்பது கொங்புத்ஸுவின் நீதி. ''தீமைக்கும் நன்மை செய்'' என்பது லா-வொத்ஸுவின் நியமம். இதை லா-வொத்ஸு கொங்புத்ஸுவுக்கு இவ்வாறு விளக்கிக்கூறினுர்: ''நன்மைக்குப் பதில் நான் நன்மை செய்கிறேன்; தீமைக்கும் பதில் நான் நன்மை செய்கிறேன்; ஏனென்ருல் சீலன் எப்பொழுதும் சீலங்கொண்டே ஒழுகல் வேண்டும்.''

லா-வொத்ஸுவின் போதனைகள் உபநிஷதங்களின் கருத்துக்களே. அவரது சித்தாந்தத்தின் சாரம் பின்

வருமாறு:- "தாவோ ஏகப்பொருள்; அது ஆதியந்தம் அற்றது; அது சத்திய நித்திய சர்வ வியாபகமானது; உருவமற்றது; புலன்களுக்கப்பாற்பட்டது. அது நாமத்திற்கும் வர்ணனைக்கும் அப்பாற்பட்டது. நாம் அதைப் பார்க்கிறோம், ஆனால் காணவில்லை, நாம் அதற்குச் செவி சாய்க்கிறோம், ஆனால் கேட்கவில்லை, நாம் அதைப் பற்றிக்கொள்ள முயல்கிறோம், ஆனால் அதைப் பிடிக்க முடியவில்லை. அது வாழ்க்கையின் ரகசியப்பாழ். அது எல்லா இயற்கைக்கும் தாய். சகுணக் கடவுளுக்கு முன்னால் அது இருந்தது. ஈஸ்வரனை அது உற்பத்தியாக்கியது.

நாமமற்ற தாவோ ஈஸ்வரன், உலகம் இவற்றின் ஆதிமூலம்; நாமமுடைய தாவோ எல்லாப்பொருளின் மாதாவாகிறது."

"தாவோ உருவமற்றதானாலும் அது உயிர் ராசிகளின் உள்ளத்தில் உருவமாகக் காணப்படுகிறது. உருவமும் உருவமின்மையும் வேறாகச் சொல்லப்பட்டாலும் அவ்விரண்டுமொன்றே. யாதும்செய்யாது, ஆனால் எல்லாப் புகழையும் கிரகித்திருப்பதே ஈஸ்வரனின் வழி; எதையும் செய்வதும் அதனால் கலக்கமடைவதும் மனிதன் வழி; ஈஸ்வரன் தலைவன்; மனிதன் பணியாளன்.

"மனிதன் தன் நியமத்தை உலகத்திலிருந்து பெறுகிறான், உலகம் தன் நியமத்தை ஈஸ்வரனிடமிருந்து பெறுகிறது, ஈஸ்வரன் தன் நியமத்தை தாவோவிடமிருந்து பெறுகிறான். தாவோ தன் நியமத்தை தன்னிடத்திலேயே கொண்டது.

"மூன்று மதிப்பற்ற பொருள்களை நான் பற்றியுள்ளேன். ஒன்று, சாந்தமான காருண்யம்; இரண்டு,

எளிமையும் சிக்கனமும்; மூன்று வினயம். சாந்தமான காருண்யத்தினுல் நான் தைரியமடைகிறேன். எளிமை, சிக்கனம் இவைகளினுல் நான் தாராள மனமடைகிறேன். வினயத்தினுல் எவ்வித பணிக்கும் நான் என்னை ஒரு தகுதியுள்ள கருவியாக்கிக் கொள்கிறேன்.

"தாவோவின் மார்க்கத்திலே, செயல் புரியும் அகம் பாவ மில்லாது செயல் புரிய வேண்டும். விவகாரங்களை, விவகாரங்களின் தொல்லைகளுக்கு உட்படாது, நடத்தவேண்டும். சுவையைப் பொருட்படுத்தாது ருசிக்கவேண்டும்; சிறியதைப் பெரியதாகக் கொள்ளல் வேண்டும். சொற்பத்தை அதிகமாகக் கொள்ளல் வேண்டும். பங்கத்திற்கு மன்னிப்புடையவனு யிருத்தல் வேண்டும்.

"சீலம் என்பது எல்லாக் காரியங்களிலும் ஈஸ்வரனைப் பின்பற்றுதலே.

"உனது சங்கல்பங்களையும் உனது இலாபங்களையும் விட்டுவிடு. திருடர்கள் அப்பொழுது இருக்க மாட்டார்கள்.

"நித்தியமானதைப் பற்றிக்கொள். எளிமையாக வாழ்ந்து உனது தாய்மையைக் காப்பாற்று. ஆசை அவாக்களைக் குறை படிப்பு மமதையை அகற்றிக் கொள். அப்போது உனக்குச் சினமிருக்காது.

"பாழான அமைதியிலேயே உள்ளத்தின் பண்பாடு இருக்கிறது. (இது யோக சமாதி.)

"பிராணனை இடையருது கவனித்து அதை வசப் படுத்தினுல் ஒருவர் குழந்தைபோல் ஆகலாம்; அதனுல் இரகசியக் காட்சிகளை யெல்லாம் அப்புறப்படுத்தி

(சம்ஸ்காரங்கள்) குற்றமற்றவனுகலாம். (இது யோக ப்ராணயாமம்).

"இவ்வாறு தாவோவை உணர்ந்தவன் மௌனத்துடன் புலன்கள் வாயிலை அடைக்கக்கூடும்; மனவேட்கையைத் தணித்து எல்லாவற்றுடனும் தான் இணைந்து இருப்பதை உணர்வான். இது பரம இரகசியம். அப்பேர்ப்பட்ட ஒருவனுக்குத் தூரமோ சமீபமோ இல்லை. இலாப நஷ்டங்களுக்கு அப்பாற் பட்டவன். மேன்மை கீழ்மை அற்றவன். வான் கீழ் அவனே உயர்ந்தோன்.

"பரிசுத்தவான் ஓரிடத்தில் கட்டுப்படான். அவன் எதுவும் அற்றவன். நூறு குடும்பங்களின் மனதை தன் மனதாகக்கொள்கிறுன். அகில உணர்ச்சியுடையோன்; பூரண ஞானம் பெற்றோன்; பூரணத்வமடைந்தோன்."

"ஆசைக்கு ஆளாகுதலே பயம்; அதிருப்தியே துக்கம்; பேராசையே பெருநஷ்டம்."

"சனுதனமான தாவோ தன் சித்தத்தை நிறைவேற்றட்டும். வருவனவற்றைப்பற்றி அக்கறையற்று இரு. எல்லாம் நலமாகும்."

தாவோ சமயத்தில் துறவிகள் துறவினிகள் உண்டு. அவர்கள் மஞ்சள்தொப்பி அணிந்திருப்பார்கள். ஆன்மா அனுதி, மறுபிறப்புண்டு, தபசும் யோகமும் விமோசனத்தைத் தரும், இவை தாவோ சமயத்தின் சில முக்கிய கொள்கைகள். தாவோ சமயமும் மஹாயான பௌத்த சமயமும் ஒன்றோடொன்று பின்னிக்கலந்துள்ளன.

## 17. ஆசிய ஜோதி புத்தர் பெருமான்

அன்பிலும் அறனிலும் துறவிலும் கௌதம புத்தருக்கு ஈடானவர் உலக சரித்திரத்திலே காண்பது அரிது. அவரது மூல கருத்துக்கள் உபநிஷதங்களின் ஊற்றில் உற்பத்தியானவை என்ருலும் அவர் அவைகளை அநுபவவாயிலாக உணர்ந்து தன் வாழ்க்கையில் உள்ளும் புறமும் அனுஷ்டித்துப் பொதுவுடைமை ஆக்கியதிலேயே அவரது புருஷ இலக்ஷணம் தங்கியிருக்கின்றது. அவரது சித்தாந்தத்தில் புதுமையானது எதுவுமில்லை என்று கொண்டாலும், அவர் பேரின்ப வாழ்க்கையை ஒவ்வொரு ஆடவரும் பெண்டிரும் புரோகிதரின்றி, குருமாரின்றி, சமயக்கோட்பாடுகளின்றி, சாஸ்திர பந்தங்களின்றி, குல கோத்திர பந்தங்களின்றி, சடங்குகளின்றி அடையலாமென நிதர்சனமாகக் காட்டினர்.

**சீலம், காருண்யம், தியாகம், பிரக்ஞை,** இந்நான்கே பௌத்த தர்மத்தின் நான்கு தூண்கள். சீலம் மனிதனைத் தூய்மைப்படுத்துகின்றது. கருணை அன்பை வளர்த்து ஒருமை உணர்ச்சியை உண்டுபண்ணுகிறது. தன்னுயிரும் மன்னுயிரும் ஒன்றெனை உணர்த்துகிறது. உலக சேவையில் தன்னலமின்றி மாந்தரை ஈடுபடுத்துகிறது. காருண்யபாவனை அதிகரிக்க தியாகம் தானுக உதயமாகிறது. அகில உணர்ச்சி உண்டாவதற்குத் தியாகம் இன்றியமையாதது. உண்மைத் தியாகத்தினுல் "யான், எனது" எனும் செருக்கு அறுகின்றது. அப்பொழுது பிரக்ஞை, (பேரறிவு) துலங்குகின்றது. இதே **நிர்வாணம்** அந்நிலை பரம சுகமானது. ("நிர்வாணம்

பரமம் சுகம்'' என்பது புத்தர் வாக்கியம்). இம்மார்க்கம் மாந்தர் எல்லாருக்கும் உரிமையானது.

புத்தர் பெருமான் கடவுளைப் பற்றியோ ஆன்மாவைப்பற்றியோ எதுவும் பேசவில்லை. அவை சம்பந்தமான கேள்விகளுக்கும் மௌனமே சாதித்தார். காரணம் அவை மனம் வாக்குக் காயத்துக்கு அப்பாற்பட்ட, அநுபூதி வாயிலாக உணர வேண்டிய தத்துவங்கள். ஆத்மீக தத்துவத்தை உணருவதற்கு முன்னர் மேலே சொல்லப்பட்ட சீலம், காருண்யம், தியாகம், இவைகளின் தாத்பரியங்களை மக்கள் தினசரி வாழ்க்கையில் மன மெய் மொழிகளினுல் அனுசரிக்கவேண்டும். மன மெய் மொழிகளின் ஆசாபாசங்களுக்கு வசப்பட்டிருக்கும் மாந்தர்க்கு ஆத்மீக தத்துவத்தை எள்ளளவும் உணர முடியாது. வெறும் பேச்சளவிலே நிற்கக்கூடும். ஆதலாலே தான் அதீதமான விஷயங்களைப்பற்றி புத்த பெருமான் பேசவும் விவாதிக்கவும் மறுத்தார்.

புத்தர் தன் சித்தாந்தத்தை ''பிரதீத்திய ஸமுத்பாத வாதம்'' என்ருர். இதன் தாத்பரியம் பின்வருமாறு:- அவித்தையினுல் திருஷ்ணம் (பேராசை) உண்டாகின்றது. திருஷ்ணமே இறப்பு பிறப்பு பந்தபாசம், இன்பம் துன்பம், சகலத்துக்கும் காரணம். உயிர்வாழ்தலென்பது, இவ்வுலகத்திலோ, பிறவுலகத்திலோ, தோன்றலும் மறைதலுமாம். பிரபஞ்சம், உயிர்களுட்பட அசைவுக் குட்பட்டிருக்கின்றது. இவ்வசைவிலிருந்து விடுபடுதலே நிர்வாணம். அதற்குத் திருஷ்ணத்தை நீக்க வேண்டும். திருஷ்ணம் மறைந்தால் பிரக்ஞை உண்டாகின்றது; அவித்தை மறைகின்றது. இப்பிரக்ஞைதான் போதி அல்லது புத்தம். முன்கூறியவைகளைச் சாதிப்ப

தற்கு புத்தர் சதுர் (நான்கு) ஆரிய தத்துவங்களை வற்புறுத்தினர். அவையாவன:- 1. எல்லாம் துக்கம். 2. அதற்கு ஒரு காரணம் அல்லது சமுதயம் உண்டு. 3. அதை அழிக்கலாம், அல்லது நிரோதம் செய்யலாம். 4. அதை அழிப்பதற்கு ஒரு மார்க்கமுண்டு. அவரது மார்க்கத்தை அஷ்டாங்க மார்க்கம் என்றுர். அது எட்டுப் பிரிவுடையது:- 1. சரியான விளக்கம். 2. சரியான சிந்தனை. 3. சரியான பேச்சு. 4. சரியான செய்கை. 5. சரியான வாழ்க்கை. 6. சரியான பிரயாசை. 7. சரியான மன ஒருமை: 8. சரியான தியானம். இம் மார்க்கத்தை **மத்திய மார்க்கம்** என்றும் சொன்னர். ஏனெனில் இதில் எவ்வித அமிதமான போகமோ, அமித மான தபஸோ கிடையா. தேக மனே ஆரோக்கியத் தைப் பேணுவது புத்தரது போதனைகளுள் முக்கியமான ஒன்று.

பௌத்த சமயம் **ஹீனயானம், மஹாயானம்** எனப் பிரிக்கப்பட்டிருந்தாலும், அவைகளின் அடிப்படையான கொள்கைகள் ஒன்றே. இரண்டும் மேலே சொல்லப் பட்ட சீலம், காருண்யம், தியாகம், பிரக்ஞை இவை களையே அடிப்படையாகக் கொண்டவை. மஹாயான மார்க்கத்திற்கும் வேதாகம நெறிகளுக்கும் வித்தியாச மில்லை என்று கொள்ளலாம்.

பௌத்த நாகரீகம் பாரத நாட்டிலே உற்பத்தி யாகித் தழைத்தோங்கி, பாரத நாட்டின் எல்லைகளையும் கடந்து ஆசியா முழுமையையும் ஆட்கொண்டு, அக்காலத் திலே மேனுட்டில் நாகரீகம் பெற்றிருந்த கிரேக்கம, ரோமாபுரி, எகிப்து முதலிய இடங்களுக்கும் பரவிற்று.

ஹிந்து சமயத்திலிருந்து பௌத்த சமயத்தைப் பிரிக்க முடியாது. பௌத்த சகாப்தத்திற்குப் பின்னர் ஹிந்து சமயம் அநேக பௌத்தக் கொள்கைகளைக் கிரகித்து தன்னுடையதாக்கிக் கொண்ட தென்பதற்குச் சரித்திரம் சான்று பகரும். இவ்வுண்மை தமிழர் பண்பாட்டிற்கும் பொருந்தியதே.

# 18. சுவாமி விக்ஞானனந்தர்

சுவாமி விக்ஞானனந்தர் ஆங்கிலம் 1868-வது ஆண்டு அக்டோபர் 28-ம் தேதி வங்காளத்திலே தக்ஷிணேஸ்வரத்திலிருந்து சுமார் இரண்டு மைல் தூரத்திலுள்ள பெல்கேரியா என்ற ஊரிலே ஒரு வைதீக பிராமணக் குடும்பத்திலே பிறந்தார். அவரது பூர்வீகப் பெயர் ஹரிப் பிரஸன்ன சட்டோபாத்யாயர். சட்டோபாத்யாயர் என்பது "சதுர் உபாத்தியாயர்" என்பதின் திரிபாகும்; அஃதாவது 'நான்கு வேதங்களின் அதிகாரி' என்பதாம். 1883-வது ஆண்டிலே கல்கத்தா ஸெயிண்ட் ஸேவியர் காலேஜிலே மாணுக்கராக விருக்கும்போது ஹரிப்பிரஸன்னர் ஸ்ரீ ராமகிருஷ்ணரை தக்ஷிணேஸ்வரத்திலே முதன் முதலாகச் சந்தித்தார். அப்போது அவருடன் கூடச் சென்றிருந்தவர் சரத் எனும் சக மாணவர். இவர் பின்னர் ஸ்வாமி சாரதானந்தர் ஆனூர். இம் முதற் சந்திப்பு ஹரிப்பிரஸன்னரின் உள்ளத்தில் ஆழ்ந்த கருத்தை உண்டு பண்ணிற்று. குருதேவரின் அபார அன்பும் தயவும் அவரை ஆட்கொண்டது. இச் சந்திப்பிற்குப் பிறகு சில தடவைகளே ஹரிப்பிரசன்னர் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பார்த்திருக்கிருர். ஒரு நாள் மத்தியானம் ஹரிப்பிரஸன்னர் தக்ஷிணேஸ்வரம் சென்றிருந்தார். அன்றிரவு குருதேவரின் விருப்பத்திற்கொவ்வ அவரது அறையிலேயே தங்கினூர்: தாமே இரவுணவு அருந்துவதில்லை யென்ருலும் இளைஞரின் இரவுணவுக்காக ஸ்ரீ ராமகிருஷ்ணர் பிரத்தியேக ஏற்பாடு செய்தார். ஹரிப்பிரஸன்னர் படுப்பதற்காக குருதேவர் பாயும் விரித்து கொசுவலையும் கட்டிவிட்டார். அந்தரங்க சிஷ்யர்களையே ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம்

அறையில் துயில விடுவதுண்டு. ஹரிப்பிரஸன்னர் படுத்திருக்கும்போது குருதேவர் அருகிலே வந்து பின்வருமாறு பரிவுடன் பேசினர்:– "உங்களெல்லோரையும் நான் ஏன் இவ்வளவு நேசிக்கிறேன், தெரியுமா? நீங்கள் எனக்கு உரித்தானவர்கள். தேவி இதை எனக்குக் காட்டியிருக்கருள்." இவ்வாறு குருதேவர் சொல்லிக்கொண்டிருக்கையிலே ஹரிப்பிரசன்னருக்கு அரை யுறக்கம் வந்தது. அவ்வேளையிலே தம் கைகளைக் கொட்டிக்கொண்டும் வாய்க்குள்ளே என்னவோ முணு முணுத்துக் கொண்டும் குரு படுக்கையைச் சுற்றிச் சுற்றி வருவதை ஹரிப்பிரசன்னர் கண்டார். பலர் சொல்லுவது போன்று குரு தேவருக்குப் பைத்தியந்தானே என நினைத்தார். ஆனல் அன்று முதல் தன்னிடம் ஒருவித ஆத்மீக எழுச்சி ஏற்பட்டதைப் பின்னர் உணர்ந்தார். அன்றைக்கே தனக்களிக்க வேண்டிய தெல்லாவற்றையும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அளித்து விட்டார் என ஹரிப்பிரசன்னர் பிற்காலத்திலே சொல்வதுண்டு.

இந்தச் சம்பவத்திற்கு அடுத்த நாள் காலையிலே ஹரிப்பிரசன்னர் வீடு திரும்பிய பொழுது மகனைக்காண வில்லையே எனக் கவலையுடனிருந்த அவர் தாயார், "அந்தப் பைத்தியக்கார பிராமணனிடத்திலே நீ இரவைக் கழித்தாய் போலும்," என்று கடிந்துகொண்டார். அவரது தங்கை, "அப்பைத்தியக்காரர் முன்னூறு இளைஞரின் மூளையைக் கெடுத்து விட்டாரென நான் கேள்விப் பட்டேன்," என்ருள். அதற்கு ஹரிப்பிரசன்னர், "அவரெப்படி பைத்தியக்காரராய் இருக்கக்கூடும்?" என்று அழுத்தமாகக் கேட்டார். "பார்த்தாயா, பார்த்தாயா, உனது மூளையையும் அந்த ஆள் பழுதாக்கி விட்டாரே," என்ருள் தங்கை. இச் சம்பவத்தைப்

பற்றி பின்னுளில் சுவாமி விக்ஞானனந்தர் "அந்தப் பைத்தியக்காரரின் முகாமைக்குக் கீழ் நான் வந்திருக்காவிடில் இன்று உலக ஊழல்களுள் உழன்று கொண்டிருந்திருப்பேனல்லவா," என்று சொல்வார். ஒருமுறை பல நாட்களாக ஹரிப்பிரசன்னர் தக்ஷிணேஸ்வரத்துக்குப் போகவில்லை. ஸ்ரீ ராமகிருஷ்ணர் தனது இளம் சிஷ்யர்களிடம் மிசுவும் வாஞ்சை யுடையவர். அவர்களில் எவரும் பல நாட்கள் தன்னிடம் வராமலிருந்தால் ஆள் அனுப்பிக் கூப்பிடுவார். ஆகவே, சரத் மூலம் ஹரிப்பிரசன்னரை வரும்படி சொல்லியனுப்பினுர். சிஷ்யர் வந்தவுடன் ஸ்ரீ ராமகிருஷ்ணர் கவலையான குரலுடன், "இங்கு வருவதற்கு நீ அக்கரை கொள்வதில்லை, ஆளனுப்பியும் உன்னை இங்கே வரச் செய்வது கஷ்டமாக இருக்கிறது" என்ருர். சிஷ்யர் வெள்ளையாக, "இங்கு வரும் எழுச்சி எனக்கு எப்போதும் இருப்பதில்லை," என்ருர். இதைக் கேட்டவுடன் குருதேவர் புன்னகை செய்து "சற்று தியானம் செய்து வருகிருய் என நம்புகிறேன்", என்ருர். ஹரிப்பிரசன்னர், "தியானம் செய்ய நான் முயற்சிப்பதுண்டு. ஆனுல் எனக்குச் சரியான தியானம் கிட்டுவதில்லை", என்ருர். இம் மறுமொழி குருதேவருக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணியதால், அவர் சற்றுநேரம் பேசாமலிருந்தார். ஹரிப்பிரசன்னர் அவரது முகத்தை ஆவலுடன் நோக்கினுர். குருதேவரது முகம் உடனே மாற்றங்கண்டு ஆழ்ந்த கருத்துள்ளதாகத் தோன்றிற்று அந்தப் பாவனையுடன், "எல்லாஞ் சரி, இப்பொழுது பஞ்சவடிக்குச் சென்று தியானம் செய்," என்று சொல்லிவிட்டு, சிஷ்யனைத் தனக்கருகே அழைத்து, சிஷ்யனின் நாக்கிலே தனது விரலினுல் யாதோ எழுதிவிட்டு, அவரைத் தியானத்தில்

அமரப் பண்ணினர். குருதேவரின் ஸ்பரிசம் பட்டமாத்திரத்திலேயே ஒருவித போதம் அவரை ஆட்கொண்டது. ஊசாடுவதும் கடினமாக இருந்தது. பஞ்சவடியில் தியானத்துக்கு இருந்ததும் ஹரிப்பிரசன்னர் சமாதியில் ஆழ்ந்துவிட்டார். புறவுலகமும் சூழ்நிலைகளும் அவருக்கு அப்பொழுது இருக்கவில்லை. பரமாநந்தத்தில் ஆழ்ந்திருந்தார். ஹரிப்பிரசன்னருக்கு எவ்வளவு நேரம் அந்நிலையிற் கழிந்ததென்று தெரியவில்லை. புலனுணர்ச்சி வந்ததும் குருதேவர் தனக்குப் பக்கத்திலிருந்து புன்னகையுடன் அவர் கைகளைத் தன்னுடம்பின் மீது மெதுவாகத் தடவுவதைக் கண்டார். "என்ன, இன்று தியானம் கிட்டிற்று?" என்றார் குருதேவர். சிஷ்யர், "ஆம், இன்றுதான் பூரணமான தியானத்தை அநுபவித்தேன்," என்றார்.

"இனிமேல் உனக்குப் பூரணத் தியானம் தினமும் கிட்டும்" என்று சொல்லிக்கொண்டே சிஷ்யரைத் தனது அறைக்குக் கூட்டிக் கொண்டுபோய், அங்கு ஆத்மீக வாழ்க்கையின் பெரும் ரகசியங்களையும் பின்னல்களையும் விளக்கி அருளினர். அன்றுதான் விக்ஞானனந்தருக்கு, "பால் கவர்ச்சியின் ஏமாற்றங்களைப்பற்றி ஜாக்கிரதையாயிரு; இதில் அதிஜாக்கிரதை தேவை. என் வாலிப சிஷ்யர்களாகிய நீங்கள் பராசக்தியினுல் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள். உங்கள் மூலமாகப் பல காரியங்களை அவள் செய்விப்பாள். ஆதலினுல், அதிஜாக்கிரதையாயிருங்கள்," என்று உபதேசித்தார். இக் கற்பனையை ஒவ்வொரு எழுத்திலும ஸ்வாமி விக்ஞானனந்தர் தன் வாழ்க்கை பரியந்தம் அனுஷ்டித்து வந்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் குழந்தை சுபாவமுடையவர். குருவும் சிஷ்யனும் சில வேளைகளிலே குஸ்தி போட்டும்

விளையாடுவார்கள். ஆனால், ஒவ்வொரு முறையும் குரு தான் கீழே விழுத்தப்படுவார்.

ஹரிப்பிரசன்னர் கல்கத்தா, பாட்னா, பூனா முதலிய கல்லூரிகளிலே பயின்று பீ. ஏ., எல், சி. இ., (Civil Engineer) பட்டம் பெற்று சர்க்கார் உத்தியோகத்திலே உயர் பதவி வகித்தார். அக்காலை தம் கடமைகளை உண்மை. கட்டுப்பாடு, பொறுப்புணர்ச்சி இவைகளுடன் செய்து வந்தார். அவருடைய தூய்மை, ஒழுக்கம், பணிவு, ஆடம்பரமின்மை, அமைதி, இவைகளைக்கண்ட யாவரும் அவரை ஒரு தெய்வமாகக் கொண்டாடினார்கள்.

சுவாமி விவேகாநந்தர் மேல் நாடுகளிலிருந்து 1896-வது ஆண்டில் தாய்நாடு திரும்புவதற்குச் சற்று முன்பு தான் ஹரிப்பிரசன்னர் குருதேவரின் சந்நியாசத் திருக் கூட்டத்தில் சேர்ந்தார். அவர் தன் தாயிடம் அதிகம் அன்பு கொண்டவர். அவளுக்காகத்தான் உத்தியோ கத்திலும் அமர்ந்தார். அவளுடைய பராமரிப்புக்குப் போதிய பணம் சேகரித்துக் கொடுத்துவிட்டு துறவாச் சிரமத்தை ஏற்றார்.

விவேகானந்தர் மேல்நாட்டிலிருந்து திரும்பி இந்தியாவின் பல இடங்களுக்கும் சென்றிருந்தபோது விக்ஞானனந்தரும் கூடப் போயிருந்தார். கல்கத்தா பேலூர் மடத்திலே ஆரம்பத்திலே கட்டப்பட்ட கட்டிடங்களும் ஹூக்ளி நதியின் அணைக்கட்டும் விக்ஞானனந்தர் பொறுப்பிலேயே கட்டப்பட்டவை. அங்குள்ள கீர்த்தி பெற்ற ஸ்ரீ ராமகிருஷ்ண ஆலயமும் அவரின் மேற்பார்வையிலேயே கட்டப்பட்டது.

விக்ஞானனந்தர் ஒரு பரிவ்ராஜக சன்னியாசியாக 1900-வது ஆண்டிலே அல்லாகபாத் வந்து சேர்ந்தார்.

அங்கு ஒரு சிநேகிதர் டாக்டர் வீட்டிலே தங்கியிருந்தார். அங்குள்ள இளைஞர் சிலர் கூடி 'பிரம்மவாதின் கிளப்' என்ற ஒரு நிலயத்தை நாட்டி யிருந்தார்கள். இவ்விளைஞர்கள் ஆத்மீக வாழ்க்கையிலே கொண்ட ஆர்வத்தினலே, விக்ஞானனந்தரை அணுகி அவரைத் தங்களது வழிகாட்டியாகக் கொண்டனர். ஸ்வாமிகள் அந்நிலயத்திலே பத்து வருஷங்கள் தங்கியிருந்து கடுந் தபசு செய்தார். அதிலிருந்து அல்லாகபாத்தில் ராமகிருஷ்ண சங்கம் ஒன்று வளரலாயிற்று. பிறகு ஆச்சிரமத்தின் ஒரு கைங்கரியமாக வைத்திய நிலயமொன்றும் நாட்டப்பட்டது. இதே புண்ணிய ஆஸ்ரமத்திலேதான் 1937-ம் வருஷம் அக்டோபர் மாதம் 22-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு விமலர் விக்ஞானனந்தர் அடியேனுக்கு மந்திர உபதேசஞ் செய்து ஆட் கொண்டார்.

விக்ஞானனந்தர் ஒரு பெரிய மேதை. நூல்கள் நிரம்ப வாசிப்பார். எஞ்சினீயரிங் (Engineering), நீர்ப்பாசனம் (Irrigation) என்ற பொருள்கள் பற்றி வங்க மொழியிலே இரு நூல்கள் எழுதியுள்ளார். தேவி பாகவதம், பிருகத் ஜாதகம் என்ற ஜோதிட நூல், சூரிய சித்தாந்தம் என்ற வான சாஸ்திர நூல், வால்மீகி ராமாயணம் இவைகளை சமஸ்கிருதத்திலிருந்து ஆங்கிலத்திலும், வங்கமொழியிலும் மொழி பெயர்த்திருக்கிறர்.

இப்பெரியார் இயல்பாகவே ஏகாந்தப் பிரியர். பொதுவாக வியவகாரங்களில் ஈடுபடமாட்டார். ஆத்மீக சம்பந்தமாக அடியார்கள் கேள்விகள் கேட்டால் சுருக்கமான முறையில் விளக்கம் சொல்லித் திருப்தி அளிப்பார். புத்தகங்களிலுள்ள சிறுசிறு நீதி வாக்கியங்களை வாழ்க்

கையில் அநுசரிக்கும்படி கூறுவார். சில வேளைகளில் விகடமாகப் பேசி சூழ்ந்திருப்பவர்களைச் சிரிக்கப் பண்ணுவார்.

அவரது இறுதி ஆண்டுகளிலே ரங்கூன், பேகு, கொழும்பு போன்ற இடங்களுக்கும் விஜயம் செய்தார். எங்கும் பக்குவ ஆத்மாக்களைக் கடாக்ஷித்தார். அவருடைய அத்யாத்மீக அநுபவங்கள் பலவாருனவை. ஆனுல் அவைகளை அவர் இலேசாக வெளியிடுவது கிடையாது. புத்த பெருமான் முதன் முதலாக தனது தர்மத்தை உபதேசஞ் செய்த சாரநாதத்தில் விக்ஞானனந்தர் தியானஞ் செய்தபோது புத்தரை சுத்த சைதன்யமாகத் தன்னுள்ளத்தில் உணர்ந்தார். அவருடைய கடைசி நாட்களிலே பல நோய்களினுல் துன்பமடைந்தார். ஆனுல் மருந்து அருந்த மாட்டார்; வைத்தியரையும் பார்க்கமாட்டார். "இறைவனே என் வைத்தியன்", என்று சொல்லிக் கொள்ளுவார்.

1938-ம் வருஷம் ஏப்பிரல் மாதம் 25-ம்தேதி யன்று அல்லாகபாத் ஆச்சிரமத்திலேயே இம்மகான் மகா சமாதி அடைந்தார். அவரது உடலம் புனிதச் சடங்குகளுடன் திரிவேணி சங்கமத்தில் போடப்பட்டது.

# 19. ஸ்வாமி அபேதாநந்தர்

ஸ்வாமி விக்ஞானனந்தரைத் தவிர ஸ்ரீராமகிருஷ்ணரின் நேர் சிஷ்யரான ஸ்வாமி அபேதாநந்தரும் அடியேனுக்கு ஆத்மீக அருட்சி நல்கியுள்ளார். இவர் 1866-ம் ஆண்டிலே அக்டோபர் மாதம் 2-ம் தேதி யன்று அறிவும் திருவும் நிறைந்த ஒரு குடும்பத்திலே கல்கத்தாவிலே பிறந்தார். இவருடைய பிள்ளைத் திருநாமம் காளிப் பிரஸாதர். இவரது தாயார் காளிதேவியின் பக்தையானபடியினலே இப்பேரை இவருக்குச் சூட்டினர். பள்ளி நாட்களிலே காளிப்பிரஸாதர் கல்வி கேள்விகளிலும் விளையாட்டுகளிலும் ஓவியக் கலையிலும் திறம்பட விளங்கினர். கல்லூரியில் கல்வி பயிலும் நாட்களிலே சமஸ்கிருத மொழியையும் இலக்கியத்தையும் மேல்நாட்டுக் கீழ்நாட்டு தத்துவ சாஸ்திரங்களையும் ஐயந்திரிபறக் கற்றார். 1883-ம் வருஷம் யோக சாஸ்திரத்தைப் படித்தார், அது முதல் தகுந்த ஆசானை அடைந்து யோகம் பயின்று நிர்விகல்ப சமாதியை அடையவேண்டுமென வாஞ்சை கொண்டார். அவருடைய நண்பர் ஒருவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரை அடையுமாறு ஆலோசனை கூறினர். ராமகிருஷ்ணரை காளிப்பிரஸாதர் தக்ஷிணேஸ்வரத்திலே முதல் முறையாகச் சந்தித்தபோது பரமஹம்ஸர், "முன் ஜன்மத்தில் நீயொரு யோகியாய் இருந்தாய், இது உன்னுடைய கடைசிப் பிறப்பு. உனக்கு நான் யோகத்தின் ரகசியங்களை தீக்ஷை வாயிலாக அளிக்கிறேன்," என்று சொல்லிக்கொண்டு இளைஞரின் நாக்கில் ஒரு மந்திரத்தை எழுதித் தன் திருக்கரங்களை அவரின் நெஞ்சில் வைத்தார். உடனேயே காளிப்பிரஸாதர் ஆழ்ந்த தியானத்தில் அமிழ்ந்தார். அதன்

பிறகு ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உபதேசங்களைத் தழுவி பற்பல சாதனைகள் செய்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணரின் மஹா சமாதிக்குப் பிறகு காளிப்பிரசாதர் சந்நியாசியாகி சுவாமி அபேதாநந்தர் என்ற திருநாமத்துடன் கடுந்தபசுகள் புரிந்தார். இமயம் முதல் குமரி வரை யாத்திரை செய்தார். பல இடங்களிலும் பல மேதாவிகளுடனும் தங்கி பல சாஸ்திரங்களையும் ஆராய்ந்து கற்ருர். 1896-ம் வருஷத்திலே விவேகாநந்தரின் அழைப்பிற்கிணங்கி மேல் நாடுகளுக்குச் சென்ருர். அங்கு அவரது அளப்பரும் அறிவுத் திறனுலும் நாவன்மையினுலும் தர்க்க நிபுணத் தன்மையினுலும் ஏராளமான அறிஞர்களையும் மேலோர்களையும் தம்வசப் படுத்தினுர். இருபத்தைந்து ஆண்டுகள் அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் வேதாந்தப் பிரசாரம் செய்தார். 1921-ம் ஆண்டில் கீழ்நாடுகள் வழியாக தாய்நாடு திரும்பினுர். அக்காலையில் மலாய் நாட்டிலும் தங்கி ஆங்காங்கு ஆத்மீகக் கர்ஜனைகள் செய்தார், ஸ்வாமிகள் அறிவுத்துறை, ஆராய்ச்சித் துறை, ஆத்மீகத்துறை எல்லாவற்றிலும் நிரம்பிய பண்புடையவர். அவர் ஆக்கிய நூல்கள் பல. அவைகளை உலக அறிஞர் யாவரும் ஏற்றுப் போற்றுகிருர்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணரின் நேர் சிஷ்யர்களுக்குள் ஸ்வாமி அபேதாநந்தரே கடைசியாக இப்பூவுலகத்திலிருந்து மறைந்தவர். அது 1939-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 8-ம் தேதியன்று நிகழ்ந்தது.

முற்றிற்று

செந்துல், சோலை அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

# அ னு ப ந் த ம்

## சுவாமி சத்தியானந்தா

[பிரபல இந்திய எழுத்தாளரும் ஆசிரியருமான திரு. V. G. நாயர் அவர்கள் ஆக்கிய **கிழக்கித்தியக் காட்சிகள்** (Glimpses of the Orient) என்ற ஆங்கில நூலினின்று எடுக்கப்பட்டது.]

"சமயம் வெறும் புத்தகப் படிப்பு மல்ல, சாஸ் திரம் ஓதுவதுமல்ல. சமயத்தை வாழ்க்கையில் பயில வேண்டும். சுத்தமான அறவாழக்கை வாழ்தலும், உண்மையும் நியாயமுமான ராஜ மார்க்கத்தில் ஒழுகு தலும், துன்புறும் ஜன சமுகத்தின் துன்பத்தைப் போக்குதலும், வறியவருக்குத் தொண்டாற்றலுமே சமயமாகும்''—இதுவே சுவாமி சத்தியானந்தர் (முன்னர் பிரமச்சாரி கைலாசம்) **உலக சமாதான மகாநாட்டிற்கு** விடுத்த செய்தியாகும். அவர் மலாயாவிலே கலைத் தொண்டு, சமுகத்தொண்டு, பொதுநலத் தொண்டுகள் செய்து வருகிருர். மலாயா பிரதிநிதிகள் வேறு இரு வருடன் (இஞ்சே அப்துல் அஜிஸ், யங் கி லியோங்) தானும் ஒரு பிரதிநிதியாக சாந்திநிகேதனத்தில் நடந்த **உலக சமாதான மகாநாட்டிற்கு** (1949 டிசம்பர் மீ) விஜயம் செய்திருந்தார்,

சுவாமியவர்கள் ஏறக்குறைய முப்பது ஆண்டு களுக்கு மேலாக மலாயாவிலே வாழ்ந்து வருகிருர். தற் சமயம் 45 வயது இருக்கும். அவருடைய பொதுத் தொண்டுகள் ஆரம்பமாகி இருபத்தாறு ஆண்டுகள் ஆகின்றன. சிறிதும் சுயநல மற்று, பகட்டற்று, படா டோபமற்று, அன்புத் தொண்டு இயற்றி வருகின்ருர். இவரைப்போன்று வேறு பலர் மலாயாவிலிருக்கலாம். ஆனல் அன்னரைச் சந்திக்கும் பேறு எனக்குக் கிடைக்

கவில்லை. பொது ஜன சேவகர் ஒருவர், முக்கியமாக நமது இந்திய நாட்டிலே, எவ்வாறு இருத்தல் வேண்டு மென்பதற்கு சுவாமியவர்கள் எடுத்துக்காட்டாக இருக்கிருர்கள்.

சுவாமியவர்கள் தமிழர். சாதாரண காவியுடையே அணிந்திருப்பார்; மெல்லிய உருவத்தவர்; தெளிவான தோற்றத்தவர்; இளமையில் அழகுடையவராக இருந்தி ருக்கவேண்டும். மலாயாவிலே வசிக்கும் கல்வியும் செல் வமும் பொருந்திய ஒரு நடுத்தரமான குடும்பத்தைச் சேர்ந்தவர்.

ஞானிக்கும் மெய்யறிவுடையவருக்கும் உரிய தாழ்மை, அமைதி, அடக்கம், இவை அவரது தலை சிறந்த குணங்கள். அவரது பழக்க வழக்கங்கள் எளிமையானவை. அவர் புகழை நாடாதவர். வாய் வேதாந்தத்திற்கும் அவருக்கும் வெகுதூரம். துன்புறும் ஜன சமுகத்திற்குத் தொண்டு செய்வதே அவரது திட மானதும் அடிப்படையானதுமான சமயக்கொள்கை. சனாதனதர்மத்தின் இலட்சியங்களான தொண்டு, தியாகம் இவ்விரண்டிற்கும் தன்னையே அர்ப்பணித்த காந்தீய வாதியாக சுவாமிகள் எனக்குத் தோன்றுகிருர்கள். இவ் விலட்சியங்கள் சதா போதிக்கப்படுகின்றன. ஆயினும், அவற்றைத் தம் தினசரி வாழ்க்கையில் அனுஷ்டிப்போர் யார்? சுயநலம், இலஞ்சம், குறுகிய மனப்பான்மை, குறுகிய சமுகஉணர்ச்சி இவைகளற்றுத் தொண்டு செய்ய முன்வரும் பொதுநலத்தொண்டர் எங்கே? சொல்லும் செயலும் ஒன்றி பொதுநலத்தொண்டு செய் வோரைக் காண்பது அரிது. அதனுலேதான் இருள் நம்மைச் சூழ்ந்திருக்கிறது. இங்கிலையிலே சொல்லும்

செயலும் ஒன்றிய ஞான புருஷரான சுவாமி சத்தியானந்தரைக் காண்பது எனக்கு உவகையைத் தருகின்றது. தமிழிலும், ஆங்கிலத்திலும், ஆரியத்திலும் சுவாமிகள் நல்ல பண்புடையவர்.

உயர்தர ஆங்கிலக் கல்வியை முடித்துக்கொண்டு மலாயா அரசாங்கத்திலே உத்தியோகத்தில் அமர்ந்தார். பிறகு சமய சமூகத் தொண்டின் பொருட்டு உத்தியோகத்திலிருந்து ராஜிநாமாச் செய்துகொண்டார். அவர் தம் இளமைப் பருவத்திலேயே தமிழ் நாட்டு முனிவர்கள், ராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தர், யேசு கிறிஸ்துநாதர், புத்தர் பெருமான். ராமதீர்த்தர், முதலியவர்களின் உபதேசங்களுக்கு வசப்பட்டார். அவர் உயர்தரப் படிப்புப் பயின்ற காலத்திலே ரோமன் கத்தோலிக்க சந்நியாச ஆசிரியர்களுடன பழகினர். அவர்களின் உயரிய கருத்துக்கள் அவரைப் பான்மைப்படுத்தின. இளம் பிராயத்திலேயே தனது பெற்றோர்களை இழந்தார். அதனல் அவரது சிறிய தகப்பனருடன் வாழ நேர்ந்தது. அவரது சிறிய தகப்பனர் கல்வி கேள்விகளில் சிறந்தவர். அவருடைய வாசிகசாலையிலிருந்த பெரியோர் நூல்களைச் சுவாமிகள் வாசிப்பார். அவற்றில் பகவத்கீதை, விவேகானந்தர் உபதேசங்கள், தாயுமானவர், பட்டினத்தார், ராமலிங்க சுவாமிகள் போன்றவர்களின் பாடல்களும் இந்திய தேசீயப் பெரியார்களின் நூல்களும் அவர் மனதைக் கவர்ந்தன. இம்மகான்களின் கருத்துக்களே சுவாமிகளைப் பெரும்பாலும் உருவாக்கியவை என்று சொல்லலாம்.

1930-ல் டெலுக் ஆன்ஸனில் (Teluk Anson) கலை, சமூகத் தொண்டுகள் ஆற்றுவதற்கென **சமரச சன்மார்க்க சங்கம்** என்ற ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தி அதன் காரியதரிசியாக 1935-ம் வருஷம் மட்டும் பதவி

யேற்றுத் தொண்டாற்றினுர். இக்காலத்தில் பேரா மாகாண ஹிந்து சபாவிலும் காரியதரிசியாக இருந்தார். டெலுக் ஆன்ஸனிலுள்ள பாரத மாதா தமிழ்ப்பள்ளிக் கூடத்தை அமைப்பதிலும் நிர்வகிப்பதிலும் பெரிதும் பங்கெடுத்துக் கொண்டார். மதுவிலக்குக்காகவும் பேராத் தென் மாகாணத்திலுள்ள இந்தியத் தொழி லாளரின் சுகாதாரச் சீர்திருத்தத்திற்காகவும் பெரு முயற்சி செய்தார்.

குவாலாலம்பூரிலும் சிங்கப்பூரிலுமுள்ள ராமகிரு ஷ்ண மடத்து இயக்கத்திலே 1926 முதல் சாதாரண அங்கத்தினராக இருந்து அந்த மடத்திற்காகவும் அதன் உன்னத லக்ஷியங்கள் பரவுவதற்காகவும் வேலை செய் தார். அதன் பிறகு, துறவு ஏற்று ராமகிருஷ்ண பரம ஹம்சரின் நேர் சிஷ்யரான சுவாமி விக்ஞானனந்தரிடம் அல்லாகபாத்திலே தீக்ஷை பெற்றுர். அதன் பின் இந் தியா, பர்மா, இலங்கை, முதலிய இடங்களில் யாத் திரை செய்துவிட்டு 1937-ம் வருஷம் சிங்கப்பூர் திரும்பி கல்வி, சமுக, சமயத் தொண்டுகளில் ஈடுபட்டார். இக்காலத்தில் மலாயாவிலே பல இடங்களில், பெருங் கூட்டங்களில், கலை, சமுக, கல்வி, தேசிய, ஹிந்து சமய தத்துவ சம்பந்தமான விஷயங்களைப் பற்றி ஆங் கிலத்திலும் தமிழிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினுர். சிங்கப்பூரில் ராமகிருஷ்ண மடத்தின் ஆதரவின்கீழ் நடக் கும் விவேகானந்தா ஆண் பள்ளிக்கூடத்திலும் சாரதா மணி பெண் பள்ளிக்கூடத்திலும் பிரதம ஆசிரியராக இருந் தார். இந்தக்காலத்தில் "மலாயாச் சரித்திரம்" என்னும் ஒரு தமிழ் நூலை எழுதி வெளியிட்டார். அந்நூல் மலா யாக் கல்வி இலாகாவின் அங்கீகாரம் பெற்றது. சிறு

குழந்தைகளுக்கான 'ஹிந்து சமய வினு விடை' என்ற ஒரு புத்தகமும் சுவாமியவர்கள் வெளியிட்டார்கள். இந்தியப் பள்ளிக்கூடங்களில் இந்திய சரித்திரம் புகட்டுவதற்கும் ஆருவது ஏழாவது தமிழ் மேல் வகுப்புக்கள் சேர்த்துக்கொள்ளப் படுவதற்கும் ஹேதுவாயிருந்தவர் சுவாமியவர்களே; மலாயா கல்வி இலாகா உதவி டைரக்டராக இருந்த திரு. எச். எல். ஹாட்ஜ் அவர்கள் சுவாமிகளின் பெரும் நண்பர்; அவரது உதவியாலேயே சுவாமிகள் தமிழ்க் கல்வியின் மேம்பாட்டிற்கு வேலே செய்தார். மலாயாவில் இந்தியக் கல்விக்கு அவரியற்றிய தொண்டைப் பாராட்டி அகில-மலாயா தமிழாசிரியர்கள் மகாநாடு 1946-ஆம் வருஷம் அதன் ஆரம்பக்கூட்டத்தின்போது சுவாமியவர்களுக்கு அக்கிராசனப பதவியை அளித்து, அவர்களேத் தலேமைப் பதவியையும் ஏற்றுக்கொள்ள விரும்பியது. இப்போது, மலாயா தமிழாசிரியர்களின் தொழிற் சங்கத்தில் ஆலோசனே யாளராகத் தொண்டாற்றுகிருர்.

நேதாஜியின் தலேமையில் மலாயாவிலே எழுந்த இந்திய ஸ்வதந்தர இயக்கத்தில் கல்வி கலே இலாகா அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்த முறையில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் முதியவருக்கும் பள்ளிக்கூடங்களமைத்து அவற்றிற்குப் பிரதம ஆசிரியராகத் தொண்டாற்றினுர். இந்திய தேசீய பள்ளிக்கூடங்களில் கற்பித்து வந்த ஆசிரிய ஆசிரியைகளின் போதனுமுறை சுவாமியவர்களின் கண்காணிப்பில் நடைபெற்றது.

ஜப்பானியர் அரசாட்சியின்போது அவர்கள் ஏற்படுத்தியிருந்த கலே ஆராய்ச்சி இலாகாவிலே சுவாமியவர்கள் கௌரவ இந்தியப் பிரதிநிதியாக இருந்தார்.

அந்த ஹோதாவில் பாளி மொழியில் பாண்டித்யமுடைய புரபஸர் பி. யு. வாத்தநபே 'புத்த சமயத்தின் ஆதி சரித்திரம்' என்ற ஆங்கில நூலை எழுதிப் பிரசுரிப்பதற்கு உதவியாயிருந்தார். ஜப்பானிய மொழியில் மொழி பெயர்ப்பதற்கென மஹாபாரதம், ராமாயணம் முதலியவற்றிலிருந்து முக்கியமான கதைகளையும், 'ஹிந்து சமயத்தில் தென்புலத்தார் வழிபாடு,' 'சீக்கிய சமயம்,' 'மலேஷியாவில் ஹிந்து சமயம்,' 'இந்திய கலாச்சாரமும் மலாயாவும்,' என்ற விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளையும் ஆங்கிலத்தில் எழுதினார்.

1944-ம் ஆண்டு சியாம்-பர்மா ரயில்வேயில் வேலை செய்த இந்தியத் தொழிலாளரின் நிலைமைகளைக் குறித்து விசாரணை செய்வதற்கு நேதாஜியின் உத்தரவின்பேரில் ஏற்படுத்தப்பட்ட குழுவினருக்குத் தலைமை வகித்து சியாம், பர்மா, சென்றார். அங்கிருந்து ஜப்பானியர்களுக்குக்கீழ் வேலை செய்து வந்த இந்தியத் தொழிலாளர்களின் பயங்கர இன்னலான நிலைமையைக் குறித்து ஒரு ரகசிய அறிக்கை நேதாஜிக்கு எழுதி அனுப்பினார். அதன் காரணமாக நேதாஜி ஜப்பானிய அரசாங்கத்தோடு எடுத்துக்கொண்ட நடவடிக்கையினால் தொழிலாளர்களின் நிலைமை சீர்திருத்தப்பட்டது. மலாயாவிலுள்ள தொழிலாளர்களிடத்தும அவர்களைச் சார்ந்தவரிடத்தும் நலனபிவிருத்தி வேலை விரிவான முறையில் மேற்கொள்ளப்பட்டது. சிங்கப்பூரிலுள்ள இந்திய சுதந்திர இயக்கத்தின்கீழ் சுவாமி அவர்கள் தொழில் ஆலோசனையாளராக இருந்து இவ்வேலைகளைக் கவனித்தார். 1944-ம் ஆண்டு அதே இயக்கத்தின்கீழ் பத்துகாஜாவில் ஒரு அநாதை

இல்லத்தை ஸ்தாபித்தார். அங்கு சியாம்–பர்மா ரெயில் வேயில் வேலை செய்தவர்களைச் சார்ந்தவருக்குக் கல்வியும் உணவும் அளிக்கப்பட்டது. அதில் 300 சிறுவர் சம்ரட் சிக்கப்பட்டனர். இந்நாட்களிலே திரு. ஜான் திவியும் திரு. என். ராகவனும் சுவாமிகளின் உயிர்த் தோழர் களானார்கள். மலாயா யுத்த முடிவில் 1945-ஸு சுவாமி ஆத்மராம் துணைகொண்டு கஷ்ட நிவாரணக் கமிட்டி ஒன்று அமைத்து யுத்தத்தில் சிறைப்பட்ட இந்திய ராணுவ வீரர்களுக்கும் இந்திய சுதந்திர இயக்கத்தில் சேர்ந்து சிறைசென்றவர்களைச் சார்ந்தவர்களுக்கும் நிவாரண உதவி செய்தார். இத்தலைவர்களைச் சிறைமீட்பதற்காக இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட லாயர்களுக்கு இக் கமிட்டி துணைபுரிந்தது.

1946-ல் பண்டித ஜவாஹர்லால் நேரு மலாயா விற்கு வந்தபோது மலாயாவில் இந்திய கஷ்ட நிவாரணக் கமிட்டியை ஏற்படுத்தி அதற்கு சுவாமி யவர்களைக் காரியதரிசியாக நியமித்தார் இந்தக் கமிட்டிக்கு நேரு அவர்களே அக்கிராசனர். இந்த ஹோதாவில் சுவாமி அவர்கள் மலாயாவெங்கும் நிவா ரண வேலையையும், நலனபிவிருத்தி வேலையையும் மேற் கொண்டு செய்தார். மலாயா இந்திய காங்கிரஸ் அமைக்கும் வேலையிலும், இந்திய தேசிய காங்கிரஸ் மலாயாவுக்கனுப்பிய வைத்தியக் கோஷ்டியார் செய்த வேலையிலும் பெரிதும் பங்கெடுத்துக் கொண்டார். சிங்கப்பூரில் அங்கவீனர்களுக்கும், வயோதிகர்களுக்கும், நோயாளிகளுக்கும் ஒரு நலனபிவிருத்தி ஸ்தாபனம் சுவாமியவர்கள் திரு. கோ. சாரங்கபாணி துணை கொண்டு ஏற்படுத்தினர்.

1946-ம் ஆண்டு வளர்ந்த பெண்களுக்கான ஒரு பிரத்தியேகத் தமிழ்ப் பாடசாலையை தைப்பிங் இந்து ஐக்கிய சேவா சங்கத்தின் ஆதரவில் திறந்து வைத்தார்.

இந்தியப் பண்பாட்டை அறிவதற்கு ஒரு பிரீதியை இதர ஜாதியினர்களிடம் ஏற்படுத்த சுவாமியவர்கள் முயற்சி செய்துள்ளார். 1948-49-ம் வருஷங்களில் குவாலாலம்பூரில் **சுத்த சமாஜம்** என்ற ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தி கீதை, திருக்குறள், திருவாசகம், யோக சித்தி முதலிய நூல்களைப் பாடஞ்சொல்லியும் தியான வகுப்புகள் நடத்தியும் வந்துள்ளார். அஃதுடன் குஷ்டரோகிகளுக்கும், அனாதைகளுக்கும் தொண்டு செய்துள்ளார். 1947-ம் ஆண்டு புது டில்லியில் கூடிய ஆசிய உறவு மகாநாட்டிற்கு மலாயா கோஷ்டியின் காரியதரிசியாகவும் மலாயாவின் கலாச்சாரப் பிரதிநிதியாகவும் விஜயம் செய்தார். இம்மகாநாட்டிற்குப் பிறகு இந்தியாவின் முக்கிய நகரங்களிலே அறிஞர்களின் முன்னிலையில் பிரசங்கங்கள் செய்தார். ஸ்ரீ சரத் சந்திர போஸுடன் ஹிமயமலைக்கு விஜயஞ் செய்தார் மலாயாவில் 1950-ல் பிரிட்டிஷ் கவுன்ஸிலால் நிர்மாணிக்கப்பட்ட முதியோர் கல்விக் கமிட்டியில் சுவாமியவர்கள் ஒரு முக்கியஸ்தராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கடந்த நான்கு வருஷங்களாக 'தர்மா' என்னும் ஒரு உயரிய ஆங்கில சஞ்சிகையை, சமய பண்பாட்டு லக்ஷியங்களைப் பரப்பும் நோக்கத்துடன் நடத்தி வருகிறார்.

சிலகாலமாக சுவாமியவர்கள் விவேகானந்த ஆச்சிரமம் என்னும் கல்வி ஸ்தாபனத்தில் நிரந்தர சுவாமியாராக விருந்து ஆத்மீகத் தொண்டு செய்துள்ளார். சுத்த சமாஜத்தைத் தவிர ஹிந்து சமய பிரச்சார சபா ஸ்தாபனத்தையும் ஏற்படுத்தினார். இந்த ஸ்தாபனமானது ஜனங்களிடையே ஹிந்து சமயத் தத்துவங்களைப் பரப்பி வருகிறது. இதன் மாதர் பிரிவும் நற்பணி புரிகிறது. இப்பிரிவின் சார்பில் ஔவை விழா வருடாந்

தோறும் முறையே மலாயாவின் ஒவ்வொரு முக்கியப் பட்டணத்திலும் கொண்டாடப் படுகிறது. தமிழ்க்கலையைப் பரப்புவதற்காக ஏற்படுத்தப்பட்ட மலாயாத் தமிழ்ப் பண்ணையிலும் ஸ்வாமியவர்கள் பெரிதும் தொண்டாற்றி வருகிறார்கள். குவாலாலம்பூர் மகாத்மா காந்தி உயர்தரப் பள்ளிக்கூடத்தின் நிர்வாகக் கமிட்டியில் ஒரு அங்கத்தினராக இருந்துள்ளார். இப்பள்ளிக்கூடத்தில் மலாய், சீன, இந்திய, சட்டைக்காரக் குழந்தைகள் சுமார் 900 பேர் படிக்கிறார்கள். உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு காந்திஜியின் போதனைகளைப் புகட்டி வருகிறார். சிலாங்கூர் கல்வி இலாக்காவால் இந்திய ஆசிரியருக்கென நடத்தப்படும் வகுப்புக்களில் போதகாசிரியராகத் தொண்டாற்றி வந்துள்ளார். சுங்கை புலோவில் அரசாங்கத்தாரால் நடத்தப்படும் குஷ்டரோக ஆஸ்பத்திரியிலுள்ள ஏறக்குறைய முன்னூறு இந்தியக் குஷ்டரோகிகளின் நலனபிவிருத்தியைக் கவனித்து வருகிறார். செரண்டாவில் ஆங்கிலேயரால் நடத்தப்படும் அநாதை மடத்திற்கும் பலவாறு துணைபுரிந்துள்ளார்.

ஆங்கிலத்திலும் தமிழிலும் பலநூல்கள் இயற்றியிருக்கிறார். அவைகளிற் சில:-

(1) An Outline of Hindu Psychology
(2) கண்ணன் சரித்திரம்
(3) Religion of the Hindus
(4) ஆசிரியர்
(5) A Study on the Influence of Indian Culture on Malaysia and Malaya
(6) ஆத்ம போதம்
(7) மலாயாச் சரித்திரம்

(8) Tirukkural Selections in Malay
(9) Mahayana Buddhism
(10) Reflections on Buddha
(11) Unto the Universal spirit
(12) இந்து சமய பாலபோத வினு விடை
(13) உயர்ந்தோர் உலகு

சுவாமிகள் ரமணாஸ்ரமத்தோடும் அரவிந்த ஆஸ்ரமத்தோடும், புதுடில்லியிலிருக்கும் உலக வியவகார சங்கத்தோடும் தொடர்புடையவர்.

அவரது வாழ்க்கையின் லக்ஷிய புருஷர்கள்:- சுவாமி விக்ஞானனந்தர், சுவாமி அபேதாநந்தர், ஸ்ரீ ரமணர், ஸ்ரீ அரவிந்தர், மகாத்மா காந்தி, நேதாஜி, சுவாமி ஆத்மராம், யோகி சுத்தானந்த பாரதி, சுவாமி பாஸ்வராநந்தர்.

இப்போது கோலாலம்பூருக்கு ஆறு மைல்களுக்கு அப்பாலுள்ள பெட்டாலிங் என்னும் கிராமத்திலே சுத்த சமாஜத்திற்காக நிரந்தர இடம் வாங்கி, கட்டிடங்கள் கட்டி, சமாஜத்தை நிலைநாட்டி, அதன் சார்பிலே சாதி, சமய, சமூக வேறுபாடுகளற்ற ஒரு குரு குலம், ஒரு பள்ளிக்கூடம், பொதுப் பிரார்த்தனைக்குரிய பரமாத்மா ஆலயம், ஒரு வாசிகசாலை முதலியவை நடத்தி வருகின்ருர். இந்நிலையத்தின் அஸ்திவாரக்கல் 1951 அக்டோபர் 25 உ பம்பாய் சுவாமி சம்புத்தானந்தரால் நாட்டப்பட்டது. தமிழ் நாட்டுக் கவி யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரின் ஆக்ஞைப்படியே மலாயாவில் சுத்த சமாஜம் ஆரம்பிக்கப்பட்டது. ஆகையினுலே மலாயாவுக்குக் கவி யோகியை சுவாமி வரவழைத்தார்,

அம்மகான் 1952 ஷு மே மாதம் 15வ சமாஜத்தைப் பிரதிஷ்டை செய்து உயர்தர அதிகாரிகள் முன்னிலையிலும் மலாயாப் பிரமுகர்கள் முன்னிலையிலும் திறந்து வைத்தார்.

1952 ஷு செப்டம்பர்–அக்டோபர் மாதங்களிலே தோக்கியோவிலே கூடிய உலக பௌத்த மகாநாட்டிற்கு கவி யோகியும் சுவாமி அவர்களும் பிரதிநிதிகளாகச் சென்றிருந்தார்கள். அங்கு சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். ஜப்பானின் பல இடங்களுக்கும் சென்று ஜப்பானியரின் உயரிய பண்பாடுகளை அவதானித்து உணர்ந்தார்கள்.

சுவாமிகளுடைய தொண்டு சீனர், ஐரோப்பியர், மலாயர், இந்தியர்கள் யாவருக்குமிடையே ஆத்மீகப் பரஸ்பரத்தை ஓரளவிற்கு உண்டு பண்ணி வருகிறது. மலாயாப் பிரமுகர்களான ஸர் டத்தோ தான் செங் லக், மலாயா சர்வ கலாசாலை பேராசிரியர் ஹோல்டம், டத்தோ ஜைனல் அபிடின் போன்றவர்கள் சுவாமிகளின் நெருங்கிய நண்பர்கள். அவர்கள் சுத்த சமாஜ கைங்கரியங்களுக்கு ஆதரவு கொடுத்து வருகிறார்கள். இனி, மலாயா தமிழ்ப் பிரமுகர்களும் பொது மக்களும் சுவாமிகளிடம் மிக அபிமானமும் அன்பும் உடையவர்கள்.

திருக்குறளின் நூற்றியாறு முக்கிய அடிகளை மலாய் மொழியில் மொழி பெயர்ப்பித்து வெளியிட்ட பெருமை சுவாமிகளுடையதே. இதனால் தமிழரின் பண்பாட்டை மலாயரும் இந்தோனேஷியரும் அறிய ஏதுவாயிற்று. மலாயா சர்வ கலாசாலையிலும் சீனர் கலா நிலை

யங்களிலும் பண்பாடு சம்பந்தமான பிரசங்கங்கள் சுவாமிகள் செய்து வருகிறார்.

சுவாமிகளுடைய தொண்டுகளில் அவரது சிஷ்யை சகோதரி மங்களம், மாணுக்கர் V. துரைராஜ், எஸ். மார்ட்டின், சாது தாத்தா ஸ்வாமி, அன்பர் திரு. ஆ. வேலுப் பிள்ளை முதலியோரும் இன்னும் சிலரும் உறுதுணையாக இருக்கிறார்கள்.

**யோகி சுத்தானந்த பாரதியார் பின் வருமாறு சுவாமி சத்தியானந்தரைப் பற்றி எழுதியிருக்கிறார்:-**

"சுவாமி சத்தியானந்தர் மலாயாவின் வானதூத ராவர். அவருடைய சுயநலமற்ற தொண்டுகள் யாவரும் அறிந்ததே, அவரால் ஜனசமுகம் நலமடையட்டும். அந்தரங்க ஆத்மாவின் பரிணமிப்பாய் அவரது வாழ்வு விளங்கட்டும்."

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 1840
நன்கொடை எண்: 1840

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்,
தமிழியல்துறை.

## நமது நூல்கள்

| | $ cts. |
|---|---|
| கண்ணன் சரித்திரம் ... ... | .50 |
| ஆத்ம போதம் ... ... | .50 |
| சிவஞான தீபம் ... ... | 2.00 |
| நமது சமய விளக்கம் ... ... | .50 |
| சிவஞான போதம் ... ... | 1.00 |
| உயர்ந்தோர் உலகு ... ... | 2.00 |
| அர்ச்சனை மாலை ... ... | 1.00 |
| ஞான யோகசித்தி ... ... | .50 |
| மலாயா சரித்திரம் ... ... | 3.00 |
| ஆசிரியர் ... ... | .50 |
| இந்து சமய பாலபோத வினு விடை | (அச்சில்) |
| ஆனந்த மாலை ... ... | .25 |
| சித்தாந்தம் ... ... | .50 |
| பாரதசக்தி மகா காவியம் ... | 13.00 |
| கீர்த்தனஞ்ஜலி ... ... | 3.00 |
| அருட் செல்வம் ... ... | 1.75 |
| இளிச்ச வாயன் ... ... | 3.00 |
| நவரஸ நடனஞ்ஜலி ... ... | 1.75 |
| கவிக் கனவுகள் ... ... | 1.30 |
| ஆத்ம சோதனை ... ... | 5.00 |
| பாரத கீதம் ... ... | .80 |
| பைந்தமிழ்ச் சோலை ... ... | .60 |
| கஸ்தூரி ... ... | .50 |
| மனப் பேய் ... ... | .40 |
| கலிமாவின் காதல் ... ... | .80 |
| இதுதான் உலகம் ... ... | 7.00 |
| நாகரீகப் பண்ணை ... ... | 1.75 |
| இவளும் அவளும் ... ... | .60 |
| யோக சித்தி (மூலம்) ... ... | .25 |
| யோக சித்தி (மூலம் & உரை) ... | 2.50 |
| பாப்பா பாட்டு ... ... | .50 |
| புது யுகப் பாட்டு ... ... | 1.30 |
| தமிழ்க் கனல் ... ... | .80 |
| இன்பத் திருப்புகழ் ... ... | .80 |
| உயரிய கருத்துக்கள் ... ... | (அச்சில்) |